பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 21 ஞாயிற்றுக்கிழமை (07-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:283


# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. இடையில் கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தால் சிக்கல்

கொழும்பு,செப்ரெம்பர்7

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. கடந்த 7 மாதங்களாக இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றுவந்தன. இந்தப் பேச்சுக்கள் தோல்வியடைந்துள்ளமை ரணில் அரசின் ஸ்திரநிலையை மேம்படுத்தும் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் ஒன்றுசேர்ந்து பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஓரணியாக இணைந்து செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்காக பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திவந்தன.

இரு தரப்புக்கும் இடையில் இம்மாத இறுதியில் உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்று இரு கட்சிகளின் தலைவர்களும் அண்மைக் காலம்வரை கருத்து வெளியிட்டு வந்தனர்.

இந்த உடன்பாடு எட்டப்பட்டதும், நாடாளுமன்றத்தைக் கலைத்து இரு கட்சிகளும் ஓரணியில் போட்டியிட்டு, ஆட்சியை கைப்பற்றும் சந்தர்ப்பம் உண்டு என்றும் அவர்கள் கூறிவந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் நடந்த சந்திப்பில் இரு தரப்புகளுக்கும் முரண்பாடு ஏற்பட்டு பேச்சுக்கள் முறிந்தன.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான பேச்சு 9.30 மணிக்கு முடிவுக்கு வந்தது.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், சரத் அமுனுகமவும் வேறு சிலரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பி. சார்பில் விமல் வீரவன்ஸ, ரில்வின் சில்வா ஆகியோர் பங்குபற்றினர்.

கைச்சாத்திடப்படவிருந்த உடன்பாட்டின் பிரதி இரு தரப்பினருக்கும் வழங்கப்பட்டது.

பொதுத்தேர்தலில் ஜே.வி.பிக்கு 26 இடங்களை வழங்க இணக்கம் தெரிவிப்பதாக சுதந்திரக்கட்சியினர் தெரிவித்தனர். அதனை ஏற்கமுடியாது என ஜே.வி.பியினர் கூறிவிட்டனர்.

இந்தச் சிக்கல் தீர்க்கப்பட முன்னர் தமிழர் பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வுகாண

(20ஆம் பக்கம் பார்க்க)

## சு.க.-ஜே.வி.பி. கூட்டணி தோல்வி; தமிழ்க் கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு,செப்.7

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டணி முயற்சிகள் தோல்வியடைந்தமை வரவேற்கத்தக்கதென தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டணி தேல்வியுற்றமையால் தமிழ் மக்களின் நலனுக்கு நன்மை விளைவிக்கும் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர். (ம-6-12)

## பாதாள உலக உறுப்பினர் இருவர் வெள்ளவத்தையில் சுட்டுக்கொலை!

கொழும்பு,செப்.7

வெள்ளவத்தையில் நேற்றுப் பட்டப்பகலில் நண்பகல் 12.30 மணியளவில் காரில் வந்த இருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

தெஹிவளைப் பக்கமாக இருந்து கோட்டையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வெள்ளைக் காரை, வெள்ளவத்தையில், டபிள்யூ சில்வா மாவத்தை - காலி வீதி சந்திக்கும் இடத்தில் இடைமறித்த இனந்தெரியாத குழு கார மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துவிட்டு தப்பிவிட்டது.

மொறட்டுவ சமனின் சகாக்களான சந்தன, சிந்திக ஆகியோரே கொல்

(20ஆம் பக்கம் பார்க்க)



வெள்ளவத்தையில் காரில் சென்ற பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் பொலீஸார் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கின்றனர். சுடப்பட்டவர்கள் பயணித்த காரில் பொலீஸார் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். (தாக்குதலுக்கு இலக்கான காரையும் அதன் அருகே இரத்தம் சிந்திக்கிடப்பதையும் உள்படத்தில் காணலாம்.)

## குரங்குபாஞ்சான் முகாம் குறித்து புலிகளுடன் மீண்டும் பேச முயற்சி

கொழும்பு,செப்.7

திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாம் விவகாரமாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடன் மீண்டும் பேச்சு நடத்த முயற்சி மேற்கொண்டுள்ளதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்தார்.

பேச்சு நடத்துவதற்காக நேரம் ஒதுக்கும்படி தமிழ்ச்செல்வனைக் கேட்டுள்ளோம். பெரும்பாலும் இந்தப் பேச்சு அடுத்தவாரமளவில் இடம்பெற வாய்ப்பு உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளருடன் இடம்பெற்ற பேச்சுக்களால் பலன் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே தமிழ்செல்வனுடன் பேச முயற்சி எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ம-3-6)

### கூட்டமைப்பு திங்களன்று பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு,செப்.7

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்கள்.

அலரிமாளிகையில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திலக் மாரப்பன உட்பட மற்றும் சில அமைச்சர்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

### ஜீ.சி.ஈ.சாதாரண பரீட்சை டிசெம்பரில்!

கொழும்பு,செப்.7

ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிமுதல் 12ஆம் திகதிவரை இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆண்டு ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறும் எனவும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள் சங்கமம் நிகழ்வு வவுனியாவில் நேற்று நிறைவு

யாழ்ப்பாணம்,செப்.7

வவுனியாவில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்ற 'பெண்கள் சங்கமம்' நிகழ்வு நேற்றிரவு வெகு எழுச்சிபூர்வமாக நிறைவுபெற்றது. கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான இந் நிகழ்வு, சமூகத்தில் பெண்களின ஆளுமை விருத்தி, பெண்களின் வளர்ச்சியில் தொடர்பூடகங்களின் பங்களிப்பு, பெண்களின் உரிமைகளும் தமிழ் ஈழச்சட்டங்களும் ஆகிய தொனிப் பொருள்களில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

வடக்கு-கிழக்கின் சகல மாவட்டங்களிலும் இருந்து வந்த விடுதலைப் புலிகளின் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் உரையாற்றினர். மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி சிறப்புரையாற்றினர்.

நேற்றிரவு கலை நிகழ்வுகளோடு நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன. (ம-9-164)

## புத்தூர் பாடசாலை அதிபர் லொறியால் மோதுண்டு பலி!

### சாரதி, உதவியாளர் மதுபான நிலையத்தில் கைது

யாழ்ப்பாணம்,செப்.7

சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் நேற்று லொறியினால் மோதுண்டு உயிரிழந்தார். விபத்து நடந்த இடத்தில் நிற்காமல்சென்ற லொறியின் சாரதியும் உதவியாளரும் அப்பகுதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றிலிருந்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மாலை 6.30 மணிக்கு ஆடியபாதம் வீதியில் கல்வியங்காட்டுச் சந்திக்கும் பழம்சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்த விபத்து இடம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்தில் பாய்ந்து 8பேர் பலி!

கொழும்பு,செப்.7

பண்டாரவளை, வெள்ளவாய வீதியில் நேற்றுமுன்தினம் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் பாய்ந்ததில் எட்டுப் பேர் பலியாகினர்; 24 பேர் காயமடைந்தனர்.

பஸ்ஸின் வேகத்தை மாற்றும் கியர் சரியாக செயற்படாமையே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீதியின் மேட்டுப் பகுதியில் கியரை மாற்றுவதற்கு சாரதி முயன்ற வேளை, அது செயற்படாமையால் பஸ்

(20ஆம் பக்கம் பார்க்க)




பம்பலப்பிட்டியில்... மாணிக்க பிள்ளையார் கோவில் எதிரில்
புகைப்படத்துறையில் 20 வருட அனுபவமுள்ளவர்களால்
தரமான முறையில் துல்லியமான நவீன தொழில்நுட்பத்துடன்
விரைவாக உங்கள் புகைப்படங்களை கழுவிப்பெற்றுக்கொள்ள

விபரங்களுக்கு
பாஸ்கரன் - Tel 2222360
Jaffna

*Sameday Service , Develping & Printing
*Special Service For Photographers
*Special Wedding Photography & Albums.
by THIRU

Visionarts Studio
DIGITAL MINI LAB (PVT) LTD
292 B காலிவீதி. பம்பலபிட்டிய.
தொலைபேசி இல - 2595537

### மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் அடியோடு குலையும் அபாயம்

# பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்தார்!

## அவருக்கும் அதிபர் அரபாத்துக்கும் இடையிலான பிளவு வலுத்ததன் விளைவு


அரபாத்

ஜெருசலேம்,செப்.7

பலஸ்தீனப் பிரதமர் முஹம்மட் அப்பாஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அதற்கான கடிதத்தை அவர் அதிபர் யஸீர் அரபாத்திடம் சமர்ப்பித்துள்ளார். அது குறித்து அதிபர் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு தலைவர்களுக்கும் இடையிலான அதிகாரச் சிக்கல்கள் காரணமாகவே அப்பாஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரமழாவில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர் அப்பாஸ், தான் பதவி விலகுவதற்கான முடிவை அறிவித்தார்.

அவரது இராஜினாமாவை அரபாத் ஏற்றுக்கொண்டார் என்று முன்னதாக வெளியான செய்திகளை பலஸ்தீன அதிகாரிகள் மறுத்தனர். அப்பாஸின் முடிவு குறித்து அரபாத் தொடர்ந்து ஆலோசித்து வருவதாக அவர்கள் நேற்றிரவு தெரிவித்தனர்.

ஒருவேளை, அப்பாஸின் இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது பலஸ்தீனர்களின் அரசியலில் கடும் திருப்பமாக இருக்கும் அத்துடன் அவர்கள் இராஜீய ரீதியில் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று பி.பி.ஸியின் ஜெருசலேம் செய்தியாளர் ரிச்சர்ட் மிரோன் தெரிவித்துள்ளார்.

அப்பாஸ் பதவி விலகி, பலஸ்தீன அதிகாரத்துக்கு அரபாத் மீண்டும் வருவதை அமெரிக்காவும் இஸ்ரேலிய அரசும் அனுமதிப்பது சாத்தியமாகாது.

பலஸ்தீன அதிகார சபையில் ஏற்பட்டுவரும் திடீர் மாற்றங்களை இஸ்ரேல் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. ஆனால், அரபாத்தோ அவரது ஆதரவாளர்களோ மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

தற்போதைய நிலைவரம் சமாதான முயற்சிகளை அடியோடு படுக்க வைத்துவிடும் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ரோ தெரிவித்துள்ளார்.


அப்பாஸ்

அப்பாஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்ததற்கு என்ன காரணங்கள் என்று சில ஊகங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

சர்வதேச சமூகம் அரபாத்துக்கு கடும் அழுத்தங்களைக் கொடுத்து தான் மீண்டும் பதவிக்கு வந்தால் தனக்கோ அல்லது புதிய பிரதமராகப் பதவியேற்பவருக்கோ அதிக அதிகாரங்களைப் பெற்றுத்தரவேண்டும் என்பது அதில் ஒன்று என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை, பலஸ்தீன ஆயுததாரிகளின் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களை அரபாத் முழுமையாக அப்பாஸிடம் கையளிக்கவில்லை. அத்துடன் சாதாரண பலஸ்தீனர்களிடம் அவர் செல்வாக்குப் பெறுவதற்கும் அனுமதிக்கவில்லை என்று செய்தியூடகங்கள் கூறுகின்றன.

ஏற்கனவே முறிந்துபோயுள்ள அமெரிக்கா தலைமையிலான மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள், பலஸ்தீனத்தின் தற்போதைய அரசியல் திருப்புமுனையால் முற்றாகக் குலைந்து போகும் ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ளது.

அப்பாஸ் பிரதமராகப் பதவியேற்று கடந்த வியாழக்கிழமையே 100 நாள்கள் முடிவடைந்திருந்தன. அது தொடர்பான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய அப்பாஸ், தனக்கும் அரபாத்துக்கும் இடையிலான பிளவு குறித்துத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு சமாதான முயற்சிக்கான வழிகாட்டல் வரைபடத்தைப் பின்பற்றுவதிலேயே அரபாத்துக்கும் அப்பாஸுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

பலஸ்தீன அதிகார சபைக்குட்பட்ட பாதுகாப்புச் சேவைகளின் பெரும் பகுதியின் கட்டுப்பாடு அரபாத்திடமே இருக்கிறது. ஆனால், ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்த தனக்கு அந்த அதிகாரங்கள் மாற்றப்பட வேண்டும் என்று அப்பாஸ் கோருகின்றார்.

இது அவர்கள் இருவரிடையேயும் பிளவை ஏற்படுத்தியுள்ளது.

அப்பாஸ் பிரதமராக நியமனம் செய்யப்பட்டதும், மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் அவருடனேயே கையாள ஆரம்பித்தன. இதன்மூலம் பலஸ்தீனத் தலைவர் அவர் என்ற நிலையை உருவாக்க அவை முயன்றன. இதுவும் அவர்கள் இருவரிடையிலான பிளவு வளரக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (ம)

# காஷ்மீர் குண்டுவெடிப்பில் 6பேர் பலி! 30 பேர் காயம்!!

புதுடில்லி,செப்.7

இந்திய ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் குறைந்தது 6பேர் கொல்லப்பட்டனர்; 30இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

கோடைகால தலைநகரான ஸ்ரீநகரில் உள்ள சந்தை ஒன்றுக்கு அருகே இருந்த கார் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றிலேயே குண்டு வைக்கப்பட்டிருந்தது.

இராணுவ வாகனத் தொடர் ஒன்றை இலக்கு வைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் இருவர் இராணுவத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று இந்திய அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்தனர்.

தீவிரவாதக் குழுவான ஹஸ்புல்லா முஜாஹுதீன் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது. ஆனால், தாம் இராணுவத் தொடரணியை இலக்குவைத்தே தாக்குதல் நடத்தியதாகவும் அது தெரிவித்துள்ளது.

எனினும், சாதாரண சிவிலியன்கள் பலர் இந்தக் குண்டு வெடிப்பில் பாதிப்படைந்துள்ளனர். தனியார் லொறி ஒன்றும் இரண்டு ஓட்டோக்களும் சில வீடுகளும் சேதமடைந்துள்ளன.

கடந்த 10 நாள்களில் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக நடந்த மோசமான தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் இதுவரை 90பேர் உயிரிழந்துள்ளனர். (ம)





குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான இராணுவ வாகனம் ஒன்று தூக்கி வீசப்பட்டு வீதியை விட்டு விலகி புரண்டு கிடப்பதையும் குண்டு வைக்கப்பட்டிருந்த கார் வெடித்து சிதைந்து சின்னாபின்னப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# பனிக்காலத்தை அடுத்து 'சார்ஸ்' மீண்டும் தீவிரமாகப் பரவலாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனீவா,செப்.7

பூமியின் வடவரைக்கோளத்திலுள்ள நாடுகளில் பனிக்காலம் ஆரம்பிப்பதால், இனிவரும் மாதங்களில் 'சார்ஸ்' நோய் மீண்டும் பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

'சார்ஸ்' நோயின் அறிகுறிகளைக் கொண்ட ஏனைய காய்ச்சல் தொடர்பான நோய்களுக்கு உலகளாவிய ரீதியில் தடுப்பூசி கொடுப்பதன்மூலம், புதிதாக பரவக்கூடிய கொடிய 'சார்ஸ்' நோயை இனம்காணமுடியும் என ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

'சார்ஸ்' நோயை பருவகால மாறுதல்களின்போது ஏற்படும் ஒரு நோயாக நிபுணர்கள் கருதுவதால், அது சீனாவில் முதன்முதலாக தோன்றி ஒரு வருட காலத்தின் பின் அடுத்த சில மாதங்களில் மீண்டும் பரவும் வாய்ப்புள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சுகாதாரப்பிரிவு தனது அறிக்கையில் எச்சரித்துள்ளது.

ஆசிய நாடுகளிலும் கனடாவின் ரொறன்டோ நகரிலும் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வேகமாக பரவிய 'சார்ஸ்' வைரஸால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதுமல்லாமல் பொருளாதாரம், போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறைகளில் உலகளாவிய அளவில் பெரும் தாக்கம் ஏற்பட்டது. தடுப்பூசி போடுவதால் 'சார்ஸ்' நோயை நேரடியாக கட்டுப்படுத்த முடியாவிடினும் நியூமோனியா போன்ற இதர நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவை 'சார்ஸ்' நோயாக இருக்கலாம் என்ற சந்தேகத்தையாவது தீர்க்கக்கூடியதாக இருக்கும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நியூமோனியா போன்ற நோய்களை தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்துவதன் மூலம் 'சார்ஸ்' நோய் மீண்டும் பரவுமாயின் அதை ஆரம்பக்கட்டத்திலேயே இனம் காணக்கூடியதாக இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்நோயை கட்டுப்படுத்துவதாயின் அதனை ஆரம்பத்திலேயே இனம்காணவேண்டும்.

'சார்ஸ்' நோய்க்கென விசேடமாக இல்லாவிட்டாலும் நியூமோனியா காய்ச்சல் தொடர்பான நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய தடுப்பூசியின் பாவனை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது.

இந்த நியூமோனியா காய்ச்சலால் உலகெங்கிலும் சுமார் 100 கோடி பேர் முக்கியமாக வயதானவர்களும் பலம்குன்றியவர்களும் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளது. 'சார்ஸ்' நோய் தொற்றக்கூடிய அபாயம் உள்ள பிரிவினரும் இதில் அடங்குவார்கள். ஆயினும், வருடந்தோறும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கே தடுப்பூசி கொடுக்கப்படுகிறது. இந்த வகை நியூமோனியா காய்ச்சலால் ஆண்டுதோறும் 5 லட்சம் மக்கள் மடிகிறார்கள். (ஐ)

### 'சார்ஸ்' நோயின் ஆராய்ச்சி முடிவு

பெய்ஜிங்,செப்.7

'சார்ஸ்' நோய் விலங்குகளிலிருந்து பரவியது என்று சீனாவில் நடைபெற்ற மரபணுச் சோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளன.

'சார்ஸ்' நோயை உண்டாக்கும் வைரஸ் நோய்கள் விலங்குகளிலிருந்து வெளிப்பட்டவை என்றும் மனிதர்களிடமிருந்து அவை வெளிப்படவில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

விலங்குகளுடன் மனிதர்கள் கொண்டிருந்த தொடர்பின் காரணமாகவே இந்நோய் பரவியது என்று அவர்கள் கூறுகின்றனர்.

# உண்ணாவிரதம் இருக்கவில்லை என்றால் ஆங்சாங் சூகியை விடுதலை செய்யுங்கள்

## மியான்மருக்கு அமெரிக்கா சவால்

மியான்மர்,செப்.7

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகியை விடுதலை செய்வதன் மூலம் அவர் உண்ணாவிரதம் இருக்கவில்லை என்பதை மியான்மர் இராணுவ ஆட்சியாளர் நிரூபிக்கவேண்டும் என்று அமெரிக்கா சவால் விடுத்துள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள சூகி உண்ணாவிரதம் இருக்கிறார் என்று வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என்று மியான்மர் தெரிவித்ததை அடுத்தே அமெரிக்கா இந்தச் சவாலை விடுத்துள்ளது.

சூகியை விடுதலை செய்வதன் மூலம் மியான்மருக்கு எதிராக உலக நாடுகள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை இராணுவ ஆட்சியாளர்கள் நீக்கிக்கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

மியான்மர் இதனைச் செய்யுமாயின் அந்த நாட்டுடன் சர்வதேச சந்திப்புக்களுக்கு இடம் வழங்கப்படும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்தார். அத்துடன், சூகி உண்ணாவிரதம் இருப்பதற்கு தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

மியான்மரின் புதிய பிரதமர் ஜெனரல் ஹிம் நியூந் தனது அரசியல் திட்டத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா இவ்வாறு கூறுகிறபோதும் சூகி உண்ணாவிரதம் இருக்கிறார் என்பதை மறுத்துள்ள தாய்லாந்து. அதற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது. (ம)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | |
| சந். | | | சூ.வியா. புதன் வெ. ▲ |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 07.09.2003 - 13.09.2003

### மாற்றம்:

07-09-2003இல் உத்தராடம் - மகரம் இராசியில் சந்திரன் நிற்கும். 12.09.2003 இல் கன்னியில் வெள்ளி மாறும்.

சமாதானப் பேச்சு தொடரும். உலக எதிர்பார்ப்பிற்கு சாதகமாக விடுதலைப் புலிகள் செயற்படுவார்கள். அரசியலில் நெருக்கடிகள் போன்ற உணர்வு மக்கள் மத்தியில் இருக்கும். ஆயினும் போர்ப்பயம் இல்லை. இந்தியாவின் வட பகுதி தீவிர வாதிகளின் தாக்கங்கள் அதிகரிக்கும். ஈரான், ஈராக், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் அழிவுகள் தொடரும். அமெரிக்க எதிர்ப்புணர்வு அவ்விடத்து மக்கள் மத்தியில் தலைதூக்கும். இந்து, அராபியக் கடலில் காற்றழுத்தம் அதிகரிக்கும் எனக்கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கோவிப்பதால் இலாபமில்லை. பொதுத்தொண்டுச் செயற்பாடு இருக்கும். குடும்பத்தினருக்கு நற்பலன். பொருள் வரவு கொடுக்கும். வசதிகள் வரும். சிரசு, நரம்பு, உஷ்ண பீடையால் பாதிப்புவரும். வீண் வம்பு, அயலவர் பிரச்சினை கொடுப்பர். தூரதேசத்தவர் வருவர். எதிர்ப்பாளர்கள் உதவிகள் செய்வர். தொழிலில் இலாபங்கள், வியாபாரிகளுக்கும், சட்டத்துறையினர்களுக்கும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### இடபம்

அதிகாரத்தவர்களின் கோபம் வரும். செவ்வாய்க்கிரக பார்வையால் சகோதரர்களுக்கு நன்மை, மாற்றம் வரும். காணி, பூமி, சேர்க்கை, பித்தக் கொதிப்பால் இரத்த அழுத்தம் கூடும். வயிற்று வருத்தம்வரும். சகோதரங்களுக்கு மாற்றங்கள்வரும். அழகுபடுத்த அதிக பொருள் விரயமாகும். இடமாற்றங்களால் களவு போக இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

குறைபேசி குற்றம் கேட்பீர்கள். பொருள்வரவு கொடுக்கும். தந்தை, சகோதர வழியினர் உதவிகள் செய்வார்கள். அரசியல்வாதிகளால் பிரச்சினைகள் வரும். போக்குவரத்துத்துறையில் இலாபங்கள் சிலருக்குக் கொடுக்கும். நெஞ்சு நோ, இரத்த அழுத்தம் கொடுக்கும். கொடுத்துக்கொடுத்து களைத்துவிட்ட நிலை சிலருக்கு ஏற்படும். வியாபாரிகள், தொலைத் தொடர்பாளர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### கடகம்

உதயச்சந்திரன் பார்வை நற்சிறப்புக்களைக் கொடுக்கும். புதிய தொழில்சிறப்பு, வருமானச் சிறப்பு கொடுக்கும். இடமாற்றங்கள் வீடுமனைச் சிறப்புக்கள் என்பன ஏற்படும். தூரத்து உறவு முறையினர் வருவர். குடும்பத்தினருக்காகப் பேச்சுகள் நடத்தும் நிலை ஏற்படும். கொடுத்தது வாத்தாமதமாகும். இடமாற்றங்களில், பொருளில் கவனம். கால், கை தாக்கம் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு நற்பலன்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

மனநிலைப் போராட்டம் குடும்பத்தினருடன் ஏற்படும். பொதுத் தொண்டு புரிதல், வருமானச் சிறப்பு. தூரத்துச் செய்தி வரும். பிழைதிருத்தச் செலவுகளால் மனப்பயம். வீடுமனைச்சுகம். வயிற்று நோ, கால் உளைவு என்பன கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் சிறப்பு கொடுக்கும். வருமானம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### கன்னி

பிரயாணத்தால் நன்மைகள் அதிகரிக்கும். தொழிலிடத்தில் கருத்துமோதல் ஏற்படலாம். காசு பொருளால் வேதனை வரும். கொடுத்ததை வாங்க முடியாத நிலை. வீட்டில் இருந்தவர்கள் துன்பம் கொடுக்கும் நிலை ஏற்படும். வாய்வு வருத்தம், ஆஸ்பத்திரிச் செலவு வரும். செய்தித்துறை, பிரயாணத்துறை போன்றவர்கள் அதிக இலாபங்கள், நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

காலம் கடந்த ஞானங்கள் வரும். கலகலப்பான காலமாகும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன சிறப்பு வரும். வீட்டில் தொல்லைகள் வரும். பெற்றோர், சகோதரங்களுடன் வாக்குக் கலகம் ஏற்படும். இடமாற்றங்கள் வரலாம். அரசியல்வாதிகள், சட்டத்துறையினர் நன்மை செய்து தருவார்கள். நாரி நோ, பதற்ற நிலை, பய நிலை வந்து போகும். இராகு, கேது பார்வை இருப்பதனால் அம்மனை வழிபட்டு வரவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறுக்கிழமை, புதன்கிழமை, வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

கடுமையாக நடப்பீர்கள். பொருள் வரவுக்கு மீறியசெலவு கொடுக்கும். மாமன் வழியினர் வரலாம். பொருள், அயலவர் எனக்காலம் கழியும். சிலருக்கு சட்டநடவடிக்கை கூடவரலாம். தூரத்திலிருந்து செய்திகள், உறவினர் வர இடமுண்டு. மூலச்சூடு, தொண்டை நோ வர இடமுண்டு. இரும்புத்துறை, வாகனத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

காசு பொருள் என ஓடித்திரிவீர்கள். ஏமாற்றம், அலைச்சல் உண்டு. பெரியவரால் ஏமாற்றமடைதல். தூர இடங்களுக்குப் போகவேண்டாம். இழப்பு வரும். கை, கால் தாக்கம், வீக்கம் கொடுக்கும். தானதர்மம் செய்யவும். உறவினருக்கு உதவி செய்தல். வாய்வு வருத்தம். மருந்து வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

கற்பனை வளம், அடிக்கடி அலைச்சல்படல், வீட்டுச் செலவுகள், தூரத்துச் செய்தி, பெரியவர்கள் உதவுதல், வாகனத்தால் சிறுவிபத்து வரலாம். வயிறு வருத்தம், கால் வருத்தம், மருந்துச் செலவு என ஓடியாடித்திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் பரபரப்பான செய்திகள் வரும். குருத்துறை, வாகனத்துறை, செய்தித்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

குடும்பத்தில் இருந்து வேற்றுமைப்படல், வீட்டுச் செலவு அதிகரித்தல், இடமாற்றங்கள் வரலாம். கொடுக்கல் வாங்கல் மனஸ்தாபப்படல். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். பொருள் மறைவு கவனம். காலில் வருத்தம், நெஞ்சு நோ என்பன வரும். சட்டத்துறையினர், குருத்துறையினர்கள் அதிக இலாபமடைவர். மாணவர்களுக்கு இடமாற்றங்களும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### மீனம்

குடும்பத்தில் பொருள் பிரச்சினை வரும். சிலருக்குப் பிரயாணத்தால் நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் உதவுதல், அயலவர்கள் வீண்பழி சுமத்துவர். இடமாற்றங்கள் ஏற்படும். வியாபாரிகள், அரசியல்வாதிகள் நன்மை அடைவர். வீட்டாரின் அலுவலாக ஓடியாடித்திரிந்து கருமமாற்றுதல். நெஞ்சில் சளி, கால்நோ கொடுக்கும். மாணவர்களுக்கு சித்திகள், கல்விச்சிறப்புக்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

# நம்பினோர்க்கு வரம் அருளும் அடைக்கல நாயகி அன்னை

**ஓ.எல்.ஆர். என சுருக்கமாக அழைக்கப்படும் யாழ். அடைக்கல மாதா ஆலயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறுவதை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

யாழ். மறை மாவட்டத்து ஆலயங்களுள் பழைமையும் சரித்திரப் பெருமையும் அழகும் கம்பீரமும் கொண்ட ஆலயமாக ஓ.எல்.ஆர். என அழைக்கப்படும் அடைக்கல மாதா கோவில் விளங்குகிறது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உயர்ந்து, நிமிர்ந்து, கம்பீரமாகக் காட்சி அளிக்கும் அடைக்கல அன்னை ஆலய அபிஷேகத்தின் 75ஆம் ஆண்டுப் பெருவிழா நாளை திங்கட்கிழமை வெகசிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது. 75ஆம் ஆண்டு அபிஷேக நிறைவின் திருநாள் திருப்பலியை காலை 7.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நன்றிக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுப்பார். அன்னையின் பக்தர்கள் அனைவரும் கூடி நின்று கடந்த காலம் முழுவதிலும் தம்மைப் பாதுகாத்து வழிநடத்தி, அருள்மழை பொழிந்து, அடைக்கலம் அளித்தமைக்காக அன்னைக்கு நன்றி செலுத்துவர். திருப்பலி முடிவில் 75ஆம் ஆண்டு நிறைவு மலர் வெளியிடப்படவுள்ளது. கடந்து வந்த பாதையும், அங்கு பணிபுரிந்த குருக்களும், வளர்ந்து வந்த விசுவாசமும், அங்கு பரிணாமித்த அழைத்தல்களும் என பல தலைப்புகளில் பங்கின் பணிப்பாதை இம்மலரில் அழகுற ஆய்வு செய்யப்பட்டு அலசப்பட்டுள்ளது. ஆசியுரைகளும் கட்டுரைகளும் சரித்திரத் துணுக்குகளும் நிறைந்த இம்மலரினை யாழ். மறைக் கோட்ட முதல்வர் மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் ஆய்வுசெய்வார். நாளை மாலை சிறப்பு நிகழ்வாக 5.30 மணிக்கு திருச்சுரூபப் பவனி 3ஆம் குறுக்குத்தெரு, கொய்யா வீதி, 2ஆம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, மாட்டின் வீதி, கொய்யா வீதி, 5ஆம் குறுக்குத்தெரு, தேவாலய வீதி, 4ஆம் குறுக்குத்தெரு வீதி வழியாக இடம்பெறவுள்ளது.

போர்த்துக்கேயர் காலம் முதல் தன் பதிவுகளை பொறித்து வைத்துள்ள இவ்வாலயம் தேவ அன்னையின் பெயரால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதல் 3 ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. தற்போதைய யாழ். பேராலயம் கொஞ்சேஞ்சி மாதா ஆலயம் என்ற பெயருடனும், வெற்றிநாயகி ஆலயம் என்ற பெயருடன் யாழ். கோட்டையில் அமைந்துள்ள ஆலயமும், யாழ். அடைக்கல அன்னை ஆலயம் ஆகிய மூன்றுமே இவ்வாலயங்களாகும். பெற்றக்கினி ஆயர் காலத்தில் 1848 இல் அவ்வாலயம் இணைப்பேராலயமாக விளங்கிய சான்றுகள் இருப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. தற்போது கம்பீரமாகக் காட்சியளிக்கும் இவ்வாலயத்தின் சரித்திரப் பதிவுகளை படித்துப் பார்க்கின்றபோது அருட்தந்தை பெருசல் நினைவு கூரப்பட வேண்டியவர். அவரின் அர்ப்பணிப்புமிக்க பணியின் வெளிப்பாடு தான் இவ்வாலயத்தின் ஆரம்பம் எனக் கூறலாம்.

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

2ஆம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுக்கு ஏற்ப குருக்கள் மக்களை நோக்கி திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக ஆலயத்தின் பழைய சிம்மாசனம் பின்நோக்கி நகர்த்தப்பட்டு கருங்கற்பீடம் திருத்தலத்தின் நடுவே ஸ்தாபிக்கப்பட்டு மறைந்த ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் அபிஷேகம் செய்யப்பட்டது.

அருட்தந்தை அருமைநாயகம் காலத்தில் மின்சாரத்தில் இயங்கும் நவீன ஓர்கன் ஆலயத்தில் நிறுவப்பட்டது. அத்துடன் மக்கள் வசதியாகப் பூசைப்பலியில் பங்குகொள்ள ஏற்றவாறு இருக்கைகள் புதிதாக அமைக்கப்பட்டன. போரின் நேரடித் தாக்குதலால் சேதமடைந்த ஆலய திருத்த வேலைகள் 1984ஆம் ஆண்டு செய்யப்பட்டது.

கூட்டங்கள் நடத்தவும் மறைக் கல்வி கற்பிக்கவும் பங்குப் பணிகளுக்கு ஒரு மண்டபம் தேவையெனக் கண்ட பிலிப் பொன்னையா அடிகளார் 1987ஆம் ஆண்டு "ஜெறோ" மண்டபத்தைக் கட்டுவித்தார். அருட்தந்தை ஜேநீக்கிலாஸ் அடிகளாரின் காலம் பொற்காலம் என அழைக்கப் பட்டால் அது மிகையாகாது. பங்கு ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. நூல் நிலையம், மறைக்கல்வி, திருவழிபாட்டு கண்காட்சிகள், வேதாகம வாரம், வீடுகளில் வேதாகமம் தியானங்கள் போன்ற புதிய நிகழ்வுகளால் பங்கு சமய வாழ்வில் புதுப்பொலிவு பெற்றது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

1999ஆம் ஆண்டு தற்போது பங்குத் தந்தையாகவுள்ள ம.இ.பயஸ் அடிகளார் ஆலய பங்கினைப் பொறுப் பேற்றுக் கொண்டார். ஆலயத்தை அண்டியுள்ள 3ஆம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, சிங்களப் பாடசாலை எங்கும் படையினர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பாவித்ததினால் ஆலய திருவிழாக்கள், திருச்சொரூப பவனி ஆலய வளவுக்குள்ளேயே நடைபெற்றன. பல வருடங்களாக இயங்காதிருந்த "வாழ்க மரியே" என ஓசை எழுப்பும் மணி தற்போது மணித்தியாலத்துக்கு ஒரு முறை மாதாவின் புகழ் பாடிக்கொண்டிருக்கின்றது.

இக்காலத்தில் நிகழ்ந்த ஒரு முக்கிய பணி திருச்சிலுவைப் பாதை இங்கு அமைக்கப்பட்டமையாகும். சிலுவைப் பாதையின் 13ஆம் நிலை வியாகுல மாதா கெபியாக இங்கு திகழ்வதால் சிலுவைப் பாதையின் ஏனைய நிகழ்வுகள் ஆலயத்தின் சுவர்களுடன் இணைத்து அழகுறச் செய்யப்பட்டுள்ளன. இதனை ஈழத்துக் [illegible] என அழைக்கவும் பிரசித்த[illegible]தவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று ஏராளமான பக்தர்கள் இச்சுருபங்களைத் தரிசிக்கவும் சிலுவைப் பாதையினை மேற்கொள்[illegible] வக்காலங்களில் [illegible] வருகிற[illegible]ர்.

# வேம்படி மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம் நடத்திய அதிர்ஷ்ட சீட்டிழுப்பு முடிவு

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லைக் கந்தன் ஆலய உற்சவ காலத்தில் பாடசாலை அபிவிருத்திக்காக வேம்படி மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் காண்பிக்கப்பட்ட மாயாஜால காட்சியை (மஜிக் ஷோவை) கண்டுகளித்தவர்களில் மூவருக்கு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

முதலாவது பரிசாக யாழ். வர்த்தகர் ஈ.எஸ்.பேரம்பலம் வழங்கிய துவிச்சக்கர வண்டி இலக்கம் 05437 இற்கும், இரண்டாவது பரிசாக யாழ். வர்த்தக ஸ்தாபனமான வீ.கே.ராஜரட்ணம் வழங்கிய வானொலிப்பெட்டி இலக்கம் 03796 இற்கும், மூன்றாவது பரிசாக யாழ். வர்த்தகர் ஒருவர் வழங்கிய சுடுநீர்ப் போத்தல் இலக்கம் 06216 இற்கும் வழங்கப்பட இருக்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரிசில்களுக்கு உரியவர்கள் பாடசாலை நேரத்தில் உரிய நுழைவுச் சீட்டை கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம் என்று வேம்படி மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது.

(ஐ-4)

# அடுத்தமுறை புத்தளத்துக்கு ஒரு சிறுபான்மை இன எம்.பி.

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் உறுதி

புத்தளம்,செப்.7

"கடந்த 18வருடங்களுக்கு மேலாக புத்தளம் மாவட்டத்திற்கு சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாத குறையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நன்கு அறியும்.

"வெகுவிரைவில் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படும். அடுத்த பொதுத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் உறுப்பினரொருவர் தெரிவுசெய்யப்படாவிட்டால் தேசிய பட்டியல் மூலமாவது இக்குறை தீர்க்கப்படும்."

ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புத்தளம் பெரிய பள்ளிவாசலை மையமாக வைத்து இயங்கும் மஜ்லிஹுஸ் ஷுரா என்ற சமாதானக் குழுவின் அழைப்பின் பேரில் அமைச்சர் ஹக்கீம் கடந்த வியாழக்கிழமை இவ்விஜயத்தை மேற்கொண்டார்.

பெரிய பள்ளிவாசல் தர்மகர்த்தா எஸ்.ஆர்.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மு.கா. தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், முன்னாள் நகரபிதா ஹுசைன் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

சிறுபான்மை இன எம்.பி. இல்லாமை உட்பட புத்தளத்தின் பல குறைபாடுகள் பற்றி அமைச்சரிடம் முறையிடப்பட்டது. அப்போதே அமைச்சர் மேற்கண்ட உறுதியை அளித்தார்.

(ஏ)

### மானிப்பாயில் இன்று பேராளர் சங்கமம்

வலி.வடக்கு,செப்.7

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் இன்று பி.ப. 3மணிக்கு செயலாளர் க.அம்பிகைபாகன் தலைமையில் மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

(எ-86)

# மாபெரும் விவசாயக் கண்காட்சி இம்மாதம் இங்கு நடத்த ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் விவசா உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு - கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மாபெரும் விவசாயக் கண்காட்சி ஒன்று இம்மாதம் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கண்காட்சியை திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாயப் பயிற்சி நிலைய முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் புதிய முறையிலான நீர்ப்பாசன முறை, கிருமிநாசினியற்ற முறையில் உள்ளூா கழிவுப்பொருள்கள் மூலம் விவசாயம செய்தல் போன்ற விவசாயிகளுக்கு மிகவும் நன்மையளிக்கக் கூடிய வகையிலான கண்காட்சியாக இது அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது -

இதேவேளை,

இந்தக் கண்காட்சியின் போது கால்நடை சுகாதார திணைக்களத்தினாலும் கால்நடை வளர்ப்பு சம்பந்தமான புதிய முறையிலான பயிற்சிக் கண்காட்சியும் திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில் உள்ள கால் நடை சுகாதாரத் திணைக்களத்தின் காணியில் நடத்தப்படவுள்ளது. (ஜ-180)

# மிருசுவில் சம்பவம் பற்றி படைத் தலைமையகம் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.7

'மிருசுவிலில் சிறுமியைக் காணவில்லை' என்ற தலைப்பில் கடந்த 31ஆம் திகதி உதயனின் முன்பக்கத்தில் வெளியாகிய செய்தி குறித்து பலாலியில் உள்ள பாதுகாப்புப் படைத் தலைமையக கட்டளை அதிகாரி விளக்கம் ஒன்றை அளித்திருக்கிறார்.

'உதயன்' செய்தியில் குறிப்பிட்டது போன்று காணாமற்போன சிறுமியின் சைக்கிள் மிருசுவில் பகுதியில் காவலரண் ஒன்றில் காணப்பட்டதாக வெளியான தகவல் தவறானது என்பது விசாரணை மூலம் தெரியவந்திருப்பதாகப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

"குறிப்பிட்ட சைக்கிள் இப்பகுதியில் ஒரு கடைக்குப் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதைக் கடை உரிமையாளர் உறுதி செய்துள்ளார். தவறான தகவல் காரணமாக படையினர் மீது தப்பான அபிப்பிராயமும் அவதூறும் ஏற்பட்டுள்ளது.

எனவே, சரியான தகவலை பொது மக்களுக்கு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்."

- இவ்வாறு கட்டளை அதிகாரி விடுத்த விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## இடம்மாற்றம்

## றஜனி சலூன்

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில் இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(ச-29964) (21-11-18) – க. நவரட்ணம்

## சமையல் ஆள் தேவை

கொழும்பில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் அசைவ உணவகத்திற்கு யாழ்ப்பாண முறையில் உணவுதயாரிக்கத் தெரிந்த நற்பண்புள்ள சமையல் ஆள் தேவை. 35 முதல் 55 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது. தங்குமிடம், உணவு இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 0777 484089

(C/29969) (21-11-18)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடலியடைப்பு கிராமசேவையாளராகக் கடமையாற்றும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த

**திரு.கந்தசாமி சுதர்சன்**

அவர்கள் 05.09.2003 அன்று யாழ். நீதிமன்றத்தில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றமையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
சிறீரங்கநாதன், சிவசுப்பிரமணியம்,
சிவகுமார்
(குடும்பங்கள்)

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை. (22255)(21-11-18)

## திருமண அழைப்பு

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 22 ஆம் நாள் நாளை (08.09.2003) திங்கட்கிழமை மு.ப. 9.10 மணிமுதல் மு.ப. 10.30 மணி வரையுள்ள துலா இலக்கினமும் திருவோண நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **மணிவண்ணன்** அவர்கட்கும் |  | எமது ஏகபுத்திரி திருநிறை செல்வி **சாந்தினி** அவர்கட்கும் |

திருவருள் துணைகொண்டு இணுவில் ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்தில திருமாங்கல்யதாரணம் செய்துவைக்க பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி நா.சின்னையா.
கரந்தன், நீர்வேலி மேற்கு.

திரு.திருமதி த.சோமசுந்தரம்
இணுவில் தெற்கு.
சுன்னாகம்.

★தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (22294)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg;No:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்) (21-11-18) (சி-29975)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
14
07
1993

உதிர்வு
08
08
2003

**செல்வி நிசாலினி குணரத்தினம்**

(ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலை தரம் 5 மாணவி)

இன்று (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

பாடசாலை வீதி, வண்.வட - மேற்கு,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (22308) (26-11-18)

## கண்ணீர் அஞ்சலி

நாமகள் வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை

**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி கிளைக்குழு முன்றும்.
பழைய மாணவர் சங்கமும்.
நாமகள் வித்தியாலயம்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (22303)(21-11-18)




உ
ஓம்வீராட்விஸ்வப் பிரமனே நம

## மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்.

நிகழும் சுபானு வருடம் ஆவணி 21ஆம் நாள் இன்று(07.09.2003) ஞாயிற்றுக்கிழமை உத்திராட நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில் சுபநேரமான 09.00-10.35 மணியளவில் எமது ஸ்தாபனமாகிய

# கீதா ஆபரண மாளிகை

ஆரம்பிக்கப்பட உள்ளதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர் அனைவரும் வருகைதந்து இந்நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 12,
நவீன சந்தை,
சாவகச்சேரி.

உரிமையாளர்:
கந்தசாமி-ஜீவகாந்தன்,

(C/30028)(11-18-21)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் பாசத்துக்குமுரியவர்களான



மண்ணில் 21 12 1956 — விண்ணில் 03 09 2003

**அமரர் தம்பிஐயா ராசகுணசிங்கம்**



மண்ணில் 24 01 1984 — விண்ணில் 03 09 2003

**செல்வி ராசகுணசிங்கம் யசோதா**

பார்க்க முடியவில்லையே பாசம் நிறைந்த முகங்களை
வேர்க்கருவழிக்க வந்தானோ காலன் அதிவேக பஸ்வடிவில்
நீர்வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்த வேளையில்
பார் புகழ இறைவனிடம் போனீரோ எமைத் தவிக்கவிட்டு?

ஓம் சாந்தி !

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

-உறவினர்கள்.

(22289) (11-21-18)

**உதயன்**

# தளபதிகளின் போக்குக்கு எடுபடுவாரா பிரதமர்?

படை அதிகாரிகள் சிலர் முந்திரிக்கொட்டை போல முந்திக்கொண்டு வெளியிடும் தகவல்கள், அறிக்கைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சீற்றமுற வைத்திருக்கின்றன.

ஐந்து தசாப்தகால இனப்பிரச்சினைக்கு - இரண்டு தசாப்தகால இனப்போருக்கு - அமைதி வழியில், சமாதான முறையில் இணக்கத் தீர்வு ஒன்றைக் காணும் பகீரதப்பிரயத்தன முயற்சியில் பிரதமர் ரணில் ஈடுபட்டிருக்கின்றார். மிகக் கவனத்தோடும், அவதானத்தோடும், பொறுப்போடும் இந்தப் பணியை அவர் ஆற்றவேண்டியவராக இருக்கின்றார் என்பதே யதார்த்த நிலை.

இனப்பூசலின் தாற்பரியத்தையும் அதற்கு இணக்கத் தீர்வுகாணும் முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்க முயலும் சக்திகளின் திரைமறைவுச் செயற்பாடுகளையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவராக இருக்கின்றார் அவர்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் அவரது முயற்சிக்கு அரசியல் அரங்கிலிருந்து மட்டுமல்லாது, அதற்குத் துணைபோகும் விதத்தில் அரச படைகளின் தரப்பிலிருந்தும் சதித்திட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுதான் அவரைச் சீற்றமுற வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

அமைதி முயற்சிகளைக் குழப்பும் அரசியல் சக்திகளுக்கு படைத்தரப்பில் சில உயர்மட்ட அதிகாரிகள் துணைபோவதை அரசின் மூத்த அமைச்சர்கள் சிலர் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

அரசுக்குத் தெரியாமல் - புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளைக் குழப்பும் விதத்தில் சில படை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மற்றும் சில சமயங்களில் சமாதான முயற்சிகளை நேரடியாகப் பாதிக்கும் விதத்திலான அறிக்கைகள், தகவல்கள் மூத்த அதிகாரிகளினால் வேண்டுமென கசியவிடப்படுகின்றன.

அண்மையில் கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவமும், திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ பதின்மூன்று முகாம்களைப் புலிகள் அமைத்திருக்கின்றனர் என்ற ரீதியில் படை அதிகாரிகள் மத்தியிலிருந்து கசியவிடப்பட்டிருக்கும் தகவலும் இந்த வகையைச் சேர்ந்தவையே என்பதை மூத்த அமைச்சர்கள் சிலர் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் குளறுபடிப் பணியில் கடற்படையின் கிழக்குக் கட்டளைத் தளபதியின் பெயரே அதிகளவில் முடிச்சுப் போடப்படுகின்றது.

வழமையான நடைமுறைகளுக்கு மாறாக ஒரே தடவையில் மூன்று ஆண்டுகால சேவை நீடிப்பை ஜனாதிபதி குமாரதுங்கவிடமிருந்து பெற்று 'சாதனை' படைத்தவர் கடற்படைத் தளபதி.

அந்த நன்றிக்காக ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் அவரும் அவரது கிழக்குப் பிராந்தியத் தளபதியும் தமது படை அதிகாரப் பொறுப்புகளை ஆற்றுகின்றனரோ என்ற சந்தேகம் எழுவது நியாயமானதே. அந்தச் சந்தேகத்தை உறுதிசெய்யும் வகையில் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருப்பதால் ஆளுங்கட்சித் தரப்பை அது சீற்றமுற வைத்திருப்பதிலும் வியப்பில்லை.

பாதுகாப்புப் பிரிவு தொடர்பான இரகசிய அறிக்கைகள் படைத்தளபதிகள் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சருக்கே சமர்ப்பிக்கப்பட வேண்டும். முக்கிய தகவலாக அது இருந்தால் பாதுகாப்புச் சபையைக் கூட்டி அதனை ஆராய வேண்டிய தேவை ஏற்படும். ஆனால், பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கு எடுக்கப்படும் அளவுக்கு நம்பகத்தன்மை கொண்டவையாக இல்லாத உளவு அறிக்கைகள் கூட, உண்மைத் தகவல்கள் போல பகிரங்கப்படுத்தப்படுகின்றன; பத்திரிகைகள் ஊடாகக் கசியவிடப்படுகின்றன; முக்கியத்துவம் கொடுத்துப் பிரசாரப்படுத்தப்படுகின்றன.

சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்காகத் திட்டமிட்டு செய்யப்படும் இந்தக் கைங்கரியத்தின் மூலமையமாகப் படைத்தரப்பின் முக்கிய புள்ளிகள் இருப்பது அரசை சினமுற வைத்திருக்கின்றது.

இனப்போர் விவகாரத்தில் படை அதிகாரிகளின் சொற்படிதான் அரசியல் தலைவர்கள் செயற்படவேண்டும் எனச் சில படைத்தளபதிகள் கருதுகின்றார்கள். கடந்த காலத்திலும் அத்தகைய அதிகாரிகளின் போக்குக்கு அரசுத் தலைவர்கள் எடுபட்டதால்தான் நாடு இன்றைய குட்டிச்சுவர் நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சரவை சகாக்களுக்கு எடுத்துரைத்தார் எனச் செய்திகள் கூறுகின்றன.

இத்தகைய படை அதிகாரிகளின் தவறான வழிகாட்டல்களுக்குத் தனது அரசு எடுபடாது என்றும் அவர் கூறியிருப்பதாகத் தகவல்.

முன்னர் ஆட்சியில் இருந்த ஐ.தே.க. அரசும், பொ.ஐ.மு. அரசும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் முடிவுகளைக் கேட்டு - அவர்களின் வழிப்படுத்தலின்படி - செயற்பட்டதால் உள்ளதையும் இழந்துநிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

முன்னைய ஐ.தே.க. அரசில் அவரும் ஒரு மூத்த தலைவராக இருந்தவர்.

ஆகவே, இந்த விடயத்தில் - தளபதிகளின் தவறான வழிகாட்டலுக்கு எடுபடும் விவகாரத்தில் - அவர் 'சூடு கண்ட பூனை' - எனவே, அப்பூனை மீண்டும் அடுப்பங்கரை நாடாது என்று நம்புவோமாக!

# வீதிகள் திருத்தப்படாததை ஆட்சேபித்து மறியல் போராட்டம் நடத்த முஸ்தீபு!

நல்லூர், செப்.7

நல்லூர் வடக்கு மற்றும் திருநெல்வேலி கிழக்குப் பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில வீதிகள் திருத்தப்படாமல் தொடர்ந்து நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்து வீதி மறிப்புப் போராட்டங்களில் ஈடுபட வடநல்லை மக்கள் நலன்புரிச் சங்கம் உத்தேசித்திருக்கிறது.

நல்லூர் வடக்கில் நீண்ட வீதியான ஆடியபாதம் வீதியில் கல்வியங்காடு சந்திக்கும் நாயன்மார்கட்டுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி மிகநீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாது திட்டமிட்ட முறையில் கைவிடப்பட்டுள்ளது என்றும் -

நல்லூர் மாநகரசபைக்கு பின்புறமாக சங்கிலித் தோப்பில் உள்ள அரச வீதி, திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதி என்பனவும் இதேபோன்று திருத்தப்படாமல் கைவிடப்பட்டிருப்பதாகவும் வடநல்லை மக்கள் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வீதிகளைப் பராமரிக்க வேண்டிய யாழ். மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை என்பனவற்றின் அதிகாரிகளிடம் பல தடவைகள் முறையிட்டும் வீதிகளைத் திருத்த உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் முன்னேற்றச் சங்கத் தலைவர் எஸ்.சண்முகநாதன் தெரிவித்தார்.

இந்த வீதிகளைத் திருத்தும் விடயத்தில் அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரேசமயத்தில் இந்த வீதிகளில் மறியற்போராட்டங்களை நடத்த முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

# யாழ். நகர வீதிகளில் வத்தகப்பழம் விற்பனை

வடமராட்சி, செப்.7

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வத்தகப்பழம் எடுத்துவரப்பட்டு யாழ். நகர வீதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மொனறாகலைப்பகுதியிலிருந்து சிங்கள வர்த்தகர்களினால் எடுத்து வரப்பட்ட வத்தகப்பழம் ஒன்று 40 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

யாழ். நகரில் குறிப்பாக யாழ். கஸ்தூரியார் வீதிப்பகுதியில் வைத்து வத்தகப்பழம் விற்பனை செய்யப்படுகின்றது.(எ-173)



# குடாநாட்டில் விரைவில் 4 கமக்கார வங்கிகள்

## கமநல உதவி ஆணையாளர் தகவல்

கொக்குவில், செப்.7

குடாநாட்டு விவசாயிகள் மத்தியில் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், விவசாயிகளின் நலனோன்பு நடவடிக்கைகளுக்கும் என விரைவில் 4 கமக்கார வங்கிகள் திறக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாய குழுவின் கூட்டம் அண்மையில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கமநல சேவைகள் உதவி ஆணையாளர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இங்கு கமக்கார வங்கிகளை ஆரம்பிக்க விவசாய கால்நடை சமுர்த்தி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

முதற்கட்டமாக நல்லூர், புத்தூர், உடுவில், புலோலி ஆகிய கமநல சேவை நிலையங்களில் கமக்கார வங்கிகள் திறக்கப்படும். இதற்கான அங்கீகாரத்தை மாவட்ட விவசாயக்குழுவும் வழங்கியுள்ளது.

குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் இத்தகைய வங்கிகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து சமுர்த்தி அமைச்சருக்கு மகஜர் அனுப்பவேண்டும் - என்றார். (எ-76)

# மூவின மக்களினதும் சமாதானத்தின் தேவையை உணர்த்துகின்ற மக்கள் எழுச்சி விழா 'பொங்கு தமிழ்'

## வவுனியா வர்த்தக சங்கம் அறிக்கை

வவுனியா, செப்.7

சமாதானத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், மக்களின் தேவையையும் உணர்த்துகின்ற நிகழ்வுதான் எதிர்வரும் 24 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வு என்று தெரிவித்து வவுனியா வர்த்தக சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் கையொப்பமிட்டு இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. 'பொங்கு தமிழ்' நிகழ்வு தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவில் 24.09.2003 புதன்கிழமை நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு' நாட்டில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போர் ஓய்ந்து சமாதானக் காற்று வீசும் நிலையில், தென்னிலங்கை அரசியல்வாதிகளால் பரப்பப்படும் பொய்யான வதந்திகளுக்கு ஆப்புவைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சமாதானத்தில் உள்ள நம்பிக்கையையும் தேவையையும் உணர்த்துகின்ற மக்கள் எழுச்சி விழா.

இந்த விழா தொடர்பாக அரசியல்வாதிகள் தங்கள் சொந்த வாழ்க்கைக்காகவும் அரசியலுக்காகவும், உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ விரும்புகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை குழப்புகின்றனர்.

இந்த சமாதான காலத்தை முறியடித்து மீண்டும் போருக்கு மக்களையும் இராணுவத்தையும் விடுதலைப் புலிகளையும் அழைக்கவேண்டாம் என சமாதானத்தை விரும்பாதவர்களை அன்பாக வேண்டுகின்றோம்.

தமிழ்பேசும் மக்கள் பேச்சுக்குரிய பொறுப்பினையும் செயற்பாட்டையும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அளித்துள்ளனர். தங்களின் தலைமையாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வவுனியாவில் மூவின மக்களும் இதுவரை காலமும் எந்தவொரு அசம்பாவிதமும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்கிறார்கள்; இனிமேலும் வாழ்வார்கள் என்று நம்புகிறோம். உதாரணமாக வவுனியா வர்த்தக சங்கத்துக்கு பல வருடங்களாக ஒரு முஸ்லிம் சகோதரரை நாம் தலைவராக ஏற்று சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக அவருடன் ஒத்துழைக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

இப்போது பொலிஸாரும், இராணுவத்தினரும், அரசாங்கமும் இந்த நிகழ்வை நடத்த பரிபூரண ஒத்துழைப்புத்தர முன் வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதை வரவேற்கிறோம் - என்று அதில் உள்ளது. (எ)

### நாளை

ஆவணி 22
திங்கட்கிழமை
(08.09.2003)
திதி : திரயோதசி
முன்னிரவு 11.12 வரை
நட்சத்திரம்: திருவோணம்
பிற்பகல் 3.59 வரை
பிரதோஷ விரதம்
ஆவணி ஓணம்
சுபநேரம்: 12.04 - 1.34
ராகுகாலம்: 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன் நற்பெயரைப் பற்றி அக்கறைப்படாதவனிடம் எச்சரிக்கையாய் இருப்பாய்.


# பிள்ளைகளை வேலைக்கமர்த்துதல் எவ்வாறு பால்ய இம்சையாகும்?

சட்டத்துக்கு மாறாகப் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் பால்ய இம்சையின் மற்றொரு வடிவமாகும். வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்திய பிள்ளைகளைத் தொழில் கொள்வோர் பாலியல் மற்றும் சரீர இம்சைக்கு உட்படுத்துவதாக அடிக்கடி முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழில் கொள்வோர் இரண்டு வகையாகச் சட்டத்தை மீறுகின்றார்கள். ஒன்று வயது குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல். மற்றொன்று அவர்களை இம்சைப்படுத்துதல்.

வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்தப்படும் பிள்ளைகள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அநேகமானோர் தமது வீடுகளில் அன்றாட உணவுக்கே வழியற்றிருப்பவர்கள் என்றும் தொழில் கொள்வோர் பொதுவாக நியாப்படுத்தப்படுவதுண்டு. சட்டத்தை மீறும் செயலை வறுமை நியாயப்படுத்த முடியாது.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, அறை இல. 30
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-30008) (24-8-19)



உ

# பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்

## தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 07.09.2003



# மாண்புடன் திகழும் மாணிக்க விநாயகர்

ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் கடந்த 18 வருடங்களாக ஆகம முறைப்படி 3 காலப் பூஜைகளும் செவ்வாய், வெள்ளி, சதுர்த்தி, கிருத்திகை, பிரதோஷம், ஏகாதசி, பௌர்ணமி ஆகிய தினங்களில் விசேட பூஜைகளுடன் இனிதே இயங்கி வருகின்றது.

தைப்பொங்கல், தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப் புத்தாண்டு, சித்திர பௌர்ணமி, ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, நவராத்திரி, கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, ஆகிய விசேட தினங்கள் வெகு சிறப்பான முறையில் இந்த ஆலயத்தில் கொண்டாடப்படுகின்றன.



# புனித தேர்ப்பவனி

இவ்வருடம் தொடர்ந்து எட்டாவது தடவையாக இன்று (07.09.2003) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்த அழகிய பாரிஸ் மாநகரின்கண்ணே நடைபெறவுள்ள தேர்த் திருவிழாவில் பிரான்ஸ் நாட்டில் வாழும் இலங்கை, இந்தியா, மொறிஷியஸ், றியூனியன் ஆகிய நாட்டு இந்துக்களும் ஏனையோரும் பிரெஞ்சு மக்களும் கலந்துகொள்வதோடு இங்கிலாந்து, கனடா, நோர்வே, சுவீடன், ஒல்லாந்து, ஜெர்மனி சுவிஸ், இத்தாலி நாட்டில் இருந்தும் இந்துக்கள் பெருமளவில் வந்து பங்கு கொண்டு மாணிக்க விநாயகரின் அருளைப் பெற்று மகிழ்ச்சியும் மன நிறைவும் பெறுகின்றனர்.

தேர் பவனி வரும் வீதிகளைப் புனிதப்படுத்தும் நிமித்தம் நீரினால் சுத்தப்படுத்தி அடியார்கள் பாதரட்சைகளின்றி தேர்வடம் பிடித்து வருவார்கள்.

# போற்றுதற்குரிய நற்தொண்டு

லா ஷப்பல் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களிலும், தொடர்மாடிகளிலும் இருக்கின்ற இந்துப் பெருமக்கள் வீதிகளைத் துப்புரவு செய்து அலங்கரித்து, மாவிலை, தோரணம் தொங்க விட்டு பூரண கும்பம், நிவேதனம் ஆகியவற்றுடன் ஆயிரக் கணக்கில் தேங்காய் உடைத்தும் விநாயகப் பெருமானை வரவேற்றுபசரித்து அடியார்களுக்கும், கலைஞர்களுக்கும் குளிர்பானம், சிற்றுண்டிகள் வழங்கி நற்தொண்டு புரிவது பாற்றற்குரியது.

# கண் கொள்ளாக் காட்சி

மாணிக்க விநாயகப் பெருமான், முருகப்பெருமான் அழகிய தேரின் கண்ணே வீற்றிருந்துமேள தாளம், பஜனை, பலவகைக் காவடிகள் சகிதம் இந்து கலாசாரத்தைப் புலப்படுத்தும் வண்ணம் ஆண்கள் வேட்டி, சால்வையுடனும், பெண்கள் வண்ண வண்ணச் சேலைகளுடனும் சிறுமிகள் பாவாடையுடனும் நெற்றியில் வீபூதி, திலகம் ஆகியவற்றுடன் பவனி வரும் கண்கொள்ளாக் காட்சி நம்மையும், ஐரோப்பியர்களையும் நம் நாட்டிற்றான் இருக்கின்றோம் என ஒரு கணம் எண்ண வைத்துவிடும்.

மீண்டும் இந்த அரிய தேர்ப்பவனியை எப்போது காண்போம் என்ற ஆதங்கத்துடன் அனைவரும் வீடுதிரும்புவர்.

என்றும் குன்றாப் புகழுடனும் எல்லையில்லா அருளுடனும் மாண்புற விளங்கும் மாணிக்க விநாயகரைத் தரிசித்து பிறவிப் புகழுடனும் எல்லையில்லா அருளுடனும் மாண்புற விளங்கும் மாணிக்க விநாயகரைத் தரிசித்து பிறவிப் பெரும் பயனை அடைவோம். வாழ்க வையகம்.

குடும்பத்தினர், நண்பர்களுடன்
அனைவரும் வருக! அருள் பெறுக!!



## நெடிய வினைபோக்கும் பிள்ளையாரப்பனே!

விக்கினந் தீர்த்தருளும் மாணிக்க விநாயகரே!
வினைகளை வேரறுக்கும் ஞான முதல்வனே!
பக்குவமாகவே தேர்மீது பாரிஸ் நகர வீதிகளில்
பவனிவந்தே அருளும் பால கணபதியே!
நெக்குருகி நின்று நேர்த்தியாய் வழிபட்டோம்
நெடிய வினை போக்கும் பிள்ளையாரப்பனே!
சுக்கு நூறாக்கியே எம் பாவங்களைப் போக்கிடும்
வேழமுகத்தவனே வேதனை தீர்த்திடுவாய்!

-சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

# புலனாய்வுத் தகவல்கள் என்ற பெயரில் பொறுப்பற்ற அறிக்கைகள் வெளியாவதா?

## அமைச்சர்கள் மத்தியில் பிரதமர் கடும் சீற்றம்

கொழும்பு,செப்.7

படை அதிகாரிகள் சிலர் புலனாய்வுத் தகவல்கள் என்ற பெயரில் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடுவது குறித்து பிரதமர் கடும் சீற்றம் கொண்டிருக்கிறார்.

கடந்த புதனன்று அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் - அலரிமாளிகையில் அமைச்சர்களுடன் தாம் நடத்திய கலந்துரையாடலிலேயே பிரதமர் இவ்விடயம் தொடர்பான தம் கோபத்தை வெளிப்படுத்தினார்.

கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியின் செயற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் அமைச்சர்கள் சிலர் முறைப்பாடு செய்தனர். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர்கள் பிரதமரைக் கேட்டுக் கொண்டனர்.

புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம், திருகோணமலை நகருக்கருகில் புலிகள் 13 முகாம்களை அமைத்து வருவதாக வெளியிடப்பட்ட செய்தி ஆகியவை பாதுகாப்பு அமைச்சரையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் மீறி மேற்படி அதிகாரி செயற்பட்டுள்ளார் என்பதைக் காட்டுகின்றன என்று கூட்டாக அமைச்சர்கள் சிலர் சுட்டிக்காட்டினர்.

இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் தன்னிச்சையாகச் செயற்பட்ட இந்த அதிகாரிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் பிரதமரைக் கேட்டுள்ளனர்.

அப்போது பிரதமர் கூறியதாவது:-

திருகோணமலைக்கு அருகில் புலிகள் 13 முகாம்களை அமைத்திருப்பதாகப் புலனாய்வு பிரிவு அறிக்கையொன்றை விடுத்திருந்தது. இது தொடர்பாக செய்தியாளர்கள் என்னிடம் கேள்வி எழுப்பினர். இது சம்பந்தமான அறிக்கையொன்றை கிழக்கு மாகாண கடற்படை கட்டளையிடும் அதிகாரி தயாரித்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சருக்கு தெரியவந்தது. இந்த அறிக்கை தொடர்பாக தகவல்கள் எதுவும் தெரியுமா என்று ஆயுதப் படைத்தளபதிகள் மூவரையும் அழைத்துக் கேள்வி எழுப்பினோம். மூன்று தளபதிகளும் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் இயக்கம் மீண்டும் யுத்தத்துக்கு திரும்புவதாகக் குறிப்பிடும் தகவல் ஏதும் பாதுகாப்புப் பிரிவினருக்கு இதுவரை கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணக் கடற்படை கட்டளையிடும் அதிகாரி தயாரித்த அறிக்கையைப் போன்ற அறிக்கையொன்றை வடக்கு கடற்படை கட்டளையிடும் அதிகாரியாலும் தயாரிக்க முடியும். தாக்குதல் நடத்தக்கூடிய அச்சுறுத்தல் இருப்பதாகக் குறிப்பிடும் அறிக்கை ஒன்றை இராணுவக் கட்டளையிடும் அதிகாரிகள் நால்வராலும் கூடத் தயாரிக்கமுடியும்.

இவ்வாறாகத் தாக்குதல் நடத்தக்கூடிய அச்சுறுத்தல் இருப்பதாக அறிக்கை தயாரிக்க முடியாதவர் யார்? எனவே, இவ்வாறாக ஒவ்வொரு பாதுகாப்புப் பிரிவின் அதிகாரியும் வழங்கும் அறிக்கைகளை முறையானவை என்று ஏற்றுக்கொள்ளலாமா என்ற கேள்வி எழுகின்றது.

பாதுகாப்பு பிரிவு தொடர்பான இரகசிய அறிக்கைகள் படைத்தளபதிகளூடாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொள்ளும் அறிக்கை தொடர்பாக பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படவேண்டும்.

முன்பு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் படை அதிகாரிகளின் பொறுப்பற்ற அறிக்கைகளின்படிதான் யுத்தத்தில் ஈடுபட்டன.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன வெளிநாட்டு பாதுகாப்பு ஆலோசகர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போது இந்நாட்டுப் படை அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கடந்த அரசின் கீழ் 'ஜயசிக்குறு' நடவடிக்கையை கடற்கரைப் பிரதேசத்தையண்டி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. இருந்தும் படை அதிகாரிகளின் தலையீடு காரணமாக வேறு மார்க்கமாக 'ஜயசிக்குறு' நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கம் இது தொடர்பாக அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்கவில்லை.

இறுதியில் நடந்தது என்ன ? படை அதிகாரிகளின் முடிவின்படி யுத்தம் புரிந்து உள்ளதையும் இழக்க வேண்டியேற்பட்டது.

இந்த நிலைமையை மாற்றியமைக்கவே புதிய அரசை மக்கள் ஆட்சியில் அமர்த்தினர்.

மக்கள் தெரிவுசெய்த தலைவர்கள் என்ற ரீதியில் இது தொடர்பாக நாட்டுக்குப் பதிலளிக்கும் பொறுப்பு எமக்கிருக்கிறது. அமைச்சரவையே இந்நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானது. அமைச்சர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட படை அதிகாரி தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சர் விசாரணை நடத்துவார்.

பெரும்பான்மையான மக்கள் யுத்தத்தை நிராகரித்து சமாதானம் வேண்டுமெனக்கோரும் இச்சந்தர்ப்பத்தில், பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலரின் தேவைக்காக மீண்டும் யுத்தத்தில் ஈடுபட அரசு ஒரு போதும் தயாராக இல்லை.

முன்னர் ஆட்சியிலிருந்த ஐ.தே.க. அரசும், பொ.ஐ.மு. அரசும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் முடிவுகளைக் கேட்டு யுத்தத்தில் ஈடுபட்டதால் உள்ளதையும் இழந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சிலரின் முடிவைக் கேட்டு நடக்க இந்த அரசு தயாராக இல்லையென்பதை இந்த நாட்டின் பாதுகாப்பு பிரிவுகளிலுள்ள உயர் அதிகாரிகள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி பிரதமர் அங்கு அறுதியிட்டுக் கூறினார் எனத் தெரிய வந்தது. (எ)

# புதுவையின் 'உலைக்களம்' நூல்; மன்னாரிலும் அறிமுக விழா

மன்னார்,செப்.7

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'உலைக்களம்' நூல் அறிமுக விழா நேற்றுமுன்தினம் மன்னாரில் இடம்பெற்றது.

பிற்பகல் 4 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மூத்த தளபதி லெப்டினன்ட் கேணல் விக்ரரின் தந்தையார் மருசலீன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதாப் ஏற்றினார்.

அமுதாப் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. வரவேற்புரையை மன்னார் மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் நிலவரசி நிகழ்த்தினார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நூலை வெளியீட்டுவைக்க மன்னார் மாவட்ட அரச அதிபர் வே. விஸ்வலிங்கம் பெற்றுக்கொண்டார். வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையாற்றினார்.

மன்னார் மக்களும் தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து தங்கச்சின்னம் ஒன்றினை நூலாசிரியருக்குப் பரிசாக வழங்கினர். (ஐ-4)

# பாடசாலை செல்லாதோருக்கு சமுர்த்தி ஊடாக கல்வி உதவி

கொழும்பு,செப்.7

பாடசாலைகளுக்கு செல்லாத பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியை மீண்டும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்படவிருப்பதாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வி கற்கக்கூடிய வயதினில் 14வீதத்துக்கும் மேற்பட்டோர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை.

இத்தகைய பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு செல்லமுடியாதுள்ள மாணவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவியல்களை வழங்குவதற்கு சமுர்த்தித் திட்டத்தின் மூலம் உதவிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் திஸநாயக்கா மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மீனவர் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியாவிலிருந்து குழு வருகிறது

கொழும்பு,செப்.7

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண்பதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அடுத்தமாதம் குழு ஒன்று வரவுள்ளது. தமிழகத்தில் இயங்கும் மீனவரை விடுவிப்பதற்கான கூட்டமைப்பு இதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகின்றது.

இக்கூட்டமைப்பின் இந்தியாவுக்கான பிரதிநிதியான யூ.அருளானந்தம் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீனவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பின் கூட்டம் கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இலங்கைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 36 பேரையும் 36 விசைப்படகுகளையும் உடனே விடுவிக்கும்படி இலங்கை அரசிடம் வேண்டுகோள்விடுப்பது - கேரளத்தில் உள்ள இலங்கை மீனவர்களின் விசைப்படகுகளை உடனே விடுவிக்கும்படி கேரள அரசிடம் வேண்டுகோள்விடுப்பது - இந்தியாவின் பொறுப்பிலுள்ள ஏராளமான இலங்கைப் படகுகளை விடுவிக்கும்படி இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுவிப்பது - நீண்டகாலமாகக் காணப்படும் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண இந்திய மீனவர்கள் 14 பேர் கொண்ட தூதுக்குழுவுடன் இலங்கைக்கு நல்லெண்ணப் பயணம் செல்வது - இலங்கைக்குச் செல்லும் தூதுக்குழுவுடன் தமிழக கடல்வளத்துறையின் உயர் அதிகாரி ஒருவரைப் பார்வையாளராக அனுப்பும்படி தமிழ்நாடு அரசிடம் வேண்டுகோள் விடுப்பது எனப் பல்வேறு முடிவுகள் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் மீனவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பின் இலங்கைப் பிரதிநிதி லூகாஸ் பெர்ணாண்டோ, சிரிமால்பின்டோ, இந்தியப் பிரதிநிதி பி.அந்தோனி உட்பட மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் - என்று அவர் தெரிவித்தார்.



அண்மையில் புங்குடுதீவில் அமைக்கப்பட்ட "கனடா" நிதியத்தின் செயலாளர் எஸ்.கே.சண்முகலிங்கம் அந்த நிதியத்தின் சார்பில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டியை அதிபர் கு.தர்மகுணசிங்கத்திடம் வழங்குவதைக் காணலாம். அருகில் தலைவர் என். சுந்தரராசாவும் ஆசிரிய ஆலோசகர் க.கணபதியும் காணப்படுகின்றனர். (படம்: மண்டைதீவு செய்தியாளர்.)

## வங்கியில் பணம் இருந்தால் போதாது;

# அபிவிருத்தியில் ச.ச. நிலையங்கள் அக்கறை செலுத்த வேண்டும்!

யாழ்ப்பாணம்,செப்.7

சனசமூக நிலையங்கள் தமது பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுவிட்டு மட்டும் இருந்தால் எதுவித பயனும் ஏற்படாது. மக்களின் நல்வாழ்வுக்கான அபிவிருத்தித் திட்டங்களை அவை செயற்படுத்த வேண்டும்.

- இவ்வாறு கூறினார் வலிகாமம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் தமிழ்மறவன்.

வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட சனசமூக அபிவிருத்தி அலுவலர், உள்ளூராட்சி உதவியாளர் மற்றும் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் - செயலாளர்களுக்கான கூட்டம் கடந்த புதன்கிழமை வலிகாமம் அரசியல் கோட்டப் பணிமனையில் இடம்பெற்றது.

இதில் தமிழ்மறவன் பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய காலகட்டத்தில் அபிவிருத்தியே பிரதானமாகக் கொள்ளப்படுகிறது.

சனசமூக நிலையங்கள் இக்காலங்களில் மக்கள் சேவையில் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

மக்களின் தேவைகளை அறிந்து அதனை செயற்படுத்த வசதியாகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் திட்டங்களையும் - முன்வரைபுகளையும் முன்வைக்க வேண்டியவர்களாக சனசமூக நிலைய நிர்வாகிகள் உள்ளனர்.

உள்ளூராட்சி உதவியாளர்களும் சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர்களும் இதற்கு இணைப்புப் பாலங்களாகச் செயற்பட வேண்டும்.

சனசமூக நிலையங்கள் பல இன்று இயங்காமலும் அதேநேரம் சிலரது பதவி ஆசைகளை தீர்க்கும் இடமாகவும் காணப்படுகின்றது. இந்நிலையை நாம் அங்கீகரிக்கக் கூடாது.

சனசமூக நிலையங்கள் மக்களின் வளர்ச்சிக்கும், எம்மக்களின் விடுதலைக்கான தெளிவை ஏற்படுத்தவும் உழைக்க வேண்டும்.

கிராம மட்டத்தில் உள்ள இத்தகைய அமைப்புக்கள் தமது சேவையை மனப்பூர்வமாக மக்களுக்காக வழங்கினால் சுலபமாக வளர்ச்சி அடைந்து கொள்ள முடியும் என்றார் அவர். (ஒ-86-185)

### வவுனியாவில் பெண்கள் சாங்கமம் நிகழ்ச்சி

தமிழீழ பெண்கள் சங்கமம் நிகழ்ச்சியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பெண்கள் மருத்துவம் தொடர்பான கருத்துரையினை மருத்துவ கலாநிதி எழுமதி கரிகாலன் நிகழ்த்தினார். 'பெண்களின் வளர்ச்சியில் தொடர்பு ஊடகங்களின் பங்கு' என்ற தலைப்பில் தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவு பொறுப்பாளர் தமிழினி உரை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சிதம்பரநாதன் தலைமையில் அரங்க செயற்பாட்டுக்குழுவினரின் சிறப்பு அரங்க செயற்பாட்டு நிகழ்வுகளும் அங்கு இடம்பெற்றன. (ஐ-4)

# சைவப்புலவர் பரீட்சைக்கு வழிகாட்டல் வகுப்புகள்

### வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,செப்.7

சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் பட்டப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டல் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த வகுப்புகள் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என சைவப் புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

முதலாவது வழிகாட்டல் வகுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் -

வகுப்பில் பங்குபற்ற விரும்புவோர் அன்றையதினம் சமுகமளிக்கலாம் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

## இரு பாடசாலைகளின்

# மைதானப் புனரமைப்புக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிதி உதவி

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ். மாவட்டத்திலுள்ள இரண்டு பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களைப் புனரமைப்பதற்காக வடக்கு - கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சின் இளைஞர் பிரிவினால் தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் திறனை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் இந்த நிதி வழங்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் விளையாட்டு மைதானங்கள் புனரமைப்புக்கே நிதி வழங்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களின புனரமைப்புப் பணிகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களின் விளையாட்டு மைதானங்களைப் புனரமைப்பதற்காக ஒவ்வொரு மைதானத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

# உயிர் வாழ்வுக்கு சவால்

## தமிழ் மக்களின் மற்றொரு யமன் புதைக்கப்பட்டுள்ள கண்ணிகள்!



மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் 06.11.2002 அன்று தாளையடியில் அழிக்கப்பட்டன.

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பாரும் பயன்படுத்தும் மிக மலிவான, ஆனால் மிக ஆபத்தான யுத்த உபகரணம் கண்ணிவெடிகளாகும். யுத்தம் முடிவடைந்ததும் துப்பாக்கிகள் ஓய் வெடுக்கின்றன. ஆனால், புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் மக்களைக், குறிப்பாகத் தமிழ் மக்களைப் பலி கொள்கின்றன.

உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு இடங்களில் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டு மனிதர்களைப் பலி வாங்கக் காத்திருக்கும் நிலக் கண்ணிவெடிகளின் எண்ணிக்கை 70 லட்சத்துக்கு மேல் எனக் கூறப்படுகிறது. பிலிப்பைன்ஸ், அங்கோலா, கம்பூஜியா, லைபீரியா, ருவாண்டா, சிறீலங்கா ஆகிய நாடுகளில் நிலத்தின் கீழ் இக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் சத வீதத்தைக் கணக்கில் எடுத்தால் உலகில் மிக அதிக அளவில் நலக்கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள நாடு சிறீலங்காவே ஆகும். இத்தகைய நிலக்கண்ணிகளில் மிக அதிகமானவை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலேயே புதைக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் நிலக்கண்ணி வெடி மீது மிதித்து கை, கால்களை இழக்கும் சாதாரண மக்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும் இடமாக யாழ். மருத்துவமனை விளங்குகின்றது.

நிலக்கண்ணிவெடியில் சிக்குவோருக்கு அதிர்ஷ்டம் இருந்தால் மாத்திரமே அவர்களின் உயிர் காப்பாற்றப்படுகிறது. கண்ணிவெடி மீது மிதிக்கும் போது அது வெடித்து ஏற்படும் அமுக்கம் காரணமாக நிலத்தடி மண் சூடேறி மேல்நோக்கி வீசப்படும் போது அந்தக் கண்ணி வெடியை மிதித்த அந்தத் துர்ப்பாக்கியசாலியின் உடலும் தசையும் தூக்கி வீசப்படுகிறது.

நிலக்கண்ணி வெடிப்பதால் ஏற்படும் பாதிப்புக்களைத் தீர்மானிப்பவர் அந்த நிலக்கண்ணியை உற்பத்தி செய்பவரே ஆவார்.

அளவு, வெடிக்கும் ஆற்றல் பயன்படுத்தப்பட்டுள்ள வெடிமருந்து ஆகியன தொடர்பான தகவல்களை அந்த உற்பத்தியாளனே அறிந்திருப்பார். இவ்வாறு சுமார் 600 வகையான நிலக்கண்ணிவெடிகள் உலகெங்கும் புதைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், சிறீலங்காவில் படையினரும், விடுதலைப் புலிகளும் இரண்டு வகையான நிலக்கண்ணிகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். அதாவது, பாகிஸ்தான் தயாரிப்பு நிலக்கண்ணி வெடிகளும், விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்படும் 'ஜொனி' கண்ணி வெடிகளுமே அவை ஆகும். ஏனைய விலைவாசிகளுடன் ஒப்பிடுகையில் நிலக்கண்ணிவெடிகள் மிக மலிவானவை. சாதாரணமாக 300 ரூபாவுக்கு (3டொலர்கள்) நிலக்கண்ணி வெடிகளைக் கொள்வனவு செய்யலாம், அல்லது உற்பத்தி செய்யலாம். இருப்பினும், ஒரு கண்ணிவெடியை அகற்ற சுமார் பத்தாயிரம் ரூபாவை (100 டொலர்கள்) செலுத்த வேண்டியுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு மோப்ப நாய்களைப் பயன்படுத்துவது மிகவும் பயன் தரும் நடவடிக்கையாகும். நிலக்கண்ணி வெடிகளைக் கண்டறிவதற்கு நாய்களைப் பயன்படுத்தும் போது, அந்த நாய்கள் மனிதர்களை விட மும்மடங்கு வேகமாகச் செயற்படுகின்றன. நன்கு அனுபவமுடைய ஒரு கண்ணிவெடி மீட்பவரால் நாள் ஒன்றுக்குச் சுமார் 20 இல் இருந்து 50 சதுர மீற்றர் நிலப்பரப்பையே சுத்தம் செய்யமுடியும்.

இவ்வாறு கண்ணி வெடிகள் மீட்கப்படும்போது கண்ணிவெடி வெடித்து மீட்பவர் காயப்பட்ட சம்பவங்களும் பல இடம்பெற்றுள்ளன. கண்ணிவெடி மீட்கும் வல்லுநர்களின் தகவல்களின்படி சராசரியாக 2000 கண்ணிவெடிகள் மீட்கப்படும்போது ஒரு கண்ணிவெடி வெடித்து மீட்பவர் காயமடைவதாகவும், சராசரியாக 5000 கண்ணி வெடிகள் மீட்கப்படும்போது மீட்பவர் ஒருவர் மரணமடைவதாகவும் தெரியவருகிறது.

தற்போது சிறீலங்காவில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் 20 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறிய தகவல்களின்படி இந்த 20 லட்சம் கண்ணிவெடிகளை முற்றிலுமாக அகற்றுவதாயின், கண்ணிவெடி மீட்கும் வல்லுநர்கள் குறைந்தது 400 பேர் இறக்க நேரிடலாம். பயிற்சிபெற்ற வல்லுநர்கள் சுமார் ஆயிரம் பேர் காயமடையக்கூடும்.

உலகில் கண்ணிவெடிகளை அகற்றும் வல்லுநர்கள் எண்ணிக்கையில் ஆயிரத்துக்கும் குறைவாகவே உள்ளனர். சாதாரண ரகங்களைச் சேர்ந்த நிலக்கண்ணிகள் சுமார் 20 வருடங்களுக்குச் செயற்றிறன் கொண்டவையாக இருக்கும். எனவே, அவற்றைப் புதைக்கப்பட்ட நிலையில் கைவிடுவது புத்திசாதுரியமான எண்ணமாக இராது. மனித நடமாட்டமுள்ள இடங்களில் இருந்து அவை உடனடியாக அகற்றப்படவேண்டும்.

அண்மையில் வெளிவந்துள்ள சில தகவல்களின்படி சில ரகங்களைச் சேர்ந்த நிலக் கண்ணிகள் 125 வருடங்களுக்குச் செயற்றிறன் கொண்டவையாம். ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த ரக கண்ணிகள் சிறீலங்காவில் புதைக்கப்படவில்லை என்றே கருதப்படுகிறது.

சர்வதேச அளவில் கண்ணி வெடிகளை மீட்கும் வல்லுநர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்குக் கண்ணிவெடிகளை மீட்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமக்குத் தெரிந்த வழிமுறைகளின்படி நிலக்கண்ணிவெடிகளை அகற்றித் தமது குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றும் பணியில் இந் நாட்டவர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

நிலக் கண்ணிகளை அகற்றுவதில் பயிற்சிகளைப் பெற்ற வல்லுநர்கள் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்ட இடங்களைக் கண்டறிந்து, அந்தக் கண்ணிகளை வெடிப்பதற்கு இடமளிக்காது அகற்றுகின்றனர். அதன் பின்னர் அந்தக் கண்ணிகளைச் செயலிழக்கச் செய்து பல்வேறு இடங்களில் குவிக்கின்றனர்.

அவ்விதம் மீட்கப்பட்டு ஓர் இடத்தில் குவிக்கப்படும் கண்ணி வெடிகளின் அருகில் "அபாயம் கண்ணிவெடிகள் கவனம்" என்ற அறிவிப்புப் பதாகைகள் நாட்டப்படுகின்றன. இவ்வாறான அறிவிப்புக்கள் உலகில் எந்தப் பகுதியிலாவது நாட்டப்படுவதை விரும்பாத 125 நாடுகள் உடன்பாடு ஒன்றைக் காணமுயன்றன. 1997 இல் கனடாவில் ஒட்டாவா நகரில் கைச்சாத்தான நிலக்கண்ணித்தடை உடன்பாட்டில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிக்கான செலவினை அமெரிக்காவே மேற்கொள்கிறது.

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பாரும் பயன்படுத்தும் மிக மலிவான, ஆனால், மிக ஆபத்தான யுத்த உபகரணம் நிலக்கண்ணி வெடிகளாகும். யுத்தம் முடிவடைந்த பின்னர் துப்பாக்கிகள் ஓய்வெடுக்கின்றன. இருப்பினும் யுத்தம் முடிவடைந்தாலும் யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் வெடிப்பதைத் தடுக்கவே முடியாது.

ஆக்கம்: கஜனி

# மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவு

இலங்கையின் வடபகுதியிலுள்ள வன்னிப் பிராந்தியத்தில் மனிதாபிமான நோக்கத்துடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்காக மனித நேய கண்ணி வெடிய கற்றும் பிரிவு (HDU) 1999ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பத்தில் 130 கண்ணி வெடிகற்றுபவர்கள் உட்பட 150 அங்கத்தவர் இருந்தனர். இவர்களுக் கான கொடுப்பனவு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் வழங்கப் பட்டுவந்ததுடன், இவர் களுக்கான பயிற்சியை தமிழீழவிடு தலைப் புலிகளின் கண்ணிவெடிப்பிரிவில் இருந்து பெற்றுக்கொண்டனர். இவர் களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு மிகவும் இவர்களுடைய ஆபத்தான- வேலைக்கு பொருத்த மானதாக இல்லாத போதிலும் மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவு மனிதாபிமான நோக்குடன் சேவை புரிவதாக உறுதிபூண்டிருந்தமையால், பணியாளர்களும் தம்மை அர்ப்ப ணிப்புடன் ஈடுபடுத்தி கண்ணி வெடிய கற்றும் பணியை மேற்கொண்டனர். 03 வருட காலப்பகுதியில் HDU வினால் 82 ஆயிரம் நிலக் கண்ணி வெடிகளும் 62 ஆயிரம் வெடிபொருள் களும் அகற்றப்பட்டு அழிக்கப்பட் டன.

துரதிர்ஷ்டவசமாக இக்காலப்பகுதியில் பணியின்போது 16 வெடி பொருள் விபத்துக்கள் ஏற்பட்டன. அவற்றின்போது கண்ணிவெடியு கற்று பவர் ஒருவர் (லிங்கம்) உயிரிழந்த துடன், மேலும் இரு கண்ணி வெடிய கற்றுபவர்கள் (மதியழகன், சதீஸ்கு மார்) தமது காலை இழந்துள்ளனர். அத்துடன், இன்னொரு கண்ணிவெடி யகற்றுபவர் (சிவஞானகரன்) கடமை யின் போது பாம்புகடிக்கு இலக்காகி மரணமடைந்தார்.

தற்போது HDUவின் ஆளணி 670 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் கிடைத்து வருகின்றது. HDU விற்கான நிர்வாக கட்டுமானங்களையும், கொள்கை வழிநடத்தல்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (TRRO) மேற்கொண்டுவருகின்றது. உதவி செய யும் அரச சார்பற்ற நிறுவனங்களில் NPA, MAG, FSD ஆகியன பிரதா னமானவை. (நிதியுதவி ECHO. நேர்வே அரசு, ஜப்பான் அரசு, சுவிஸ் அரசு ஆகியவற்றினால் வழங்கப்படு கிறது) இவ்வமைப்புகளின் ஆதரவு டன் HDUவின் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் சரவதேச தரத்திற்கும் உயாத்தப் பட்டுள்ளன.



மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட வெடிப் பொருள்கள் கண்ணிவெடிகள்.

இந்த வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைத்துள்ள சாவதேச தரத்திலான பயிற்சி மற்றும் கண்ணிவெடியகற்றுவதற்கான தொழில் நுட்பம் என்பனவற்றினால் பணியின் போது எமது கண்ணி வெடியகற்றுப வர்களுக்கு ஏற்படக்கூடிய பாரிய காயங் களும் உயிரிழப்பும் தவிர்க்கப்படும் என்று நம்புகின்றோம்.

மனிதநேய கண்ணிவெடியகற் றும் பிரிவினால் கண்ணிவெடி அகற் றப்பட்டு உறுதிசெய்யப்பட்ட பிர தேசங்கள் எவற்றிலும் இன்றுவரை மிதிவெடி விபத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை. சிறு வெடிபொருள் கூடக் கண்டெடுக்கப்படவில்லை. இது மிகவும் திருப்திகரமான நிலையாகும்.

மனித நேயக் கண்ணிவெடியகற் றும் பிரிவினால் 2002ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 6 லட்சத்து 44 ஆயிரத்து 962 சதுர மீற்றர் பரப்பு துப்புரவு செய்யப்பட்டது. இக்காலப் பகுதியில் 12 ஆயிரத்து 97 வெடி பொருள்களும் 8 ஆயிரத்து 782 கண்ணிகளும் மீட்கப்பட்டுள்ளன. மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவில் புதிதாகப் பெண்கள் அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 32 பெண் ஊழியர்கள் பணியாற்று கின்றனர்.



ஜெய்ப்பூர் நிறுவனத்தின் யாழ்ப்பாண முகாமையாளர் பா.மகேந்திரகுமாரினால் வலுவிழந்தோரின் பாவனைக்கென முதன்முதலாகத் தயாரிக்கப்பட்ட பற்றரியில் இயங்கக்கூடிய முச்சக்கர மோட்டார் வண்டியினை முதலாவது படத்தில் காணலாம். மணிக்கு 15 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய இவ்வண்டியை பா.மகேந்திரகுமார் இயங்க வைப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். மேற்படி முச்சக்கர மோட்டார்வண்டி கையினாலும் சுழற்றிச் செலுத்திச் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

### கழுத்தை நெரித்து சங்கிலியை அறுத்துவிட்டு

# மூதாட்டியை கிணற்றுக்குள் தூக்கிப் போட்ட திருடன்

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

வட்டுக்கோட்டை,செப்.7

குளித்துக் கொண்டிருந்த வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்து சங்கிலி அறுத்த திருடன் காரியம் கைகூடியதும் மூதாட்டியை கிணற்றில் தள்ளிவிட்டு தலைமறைவானான்.

இந்தச் சம்பவம் வட்டுக் கோட்டை அச்சிங்கன் வீதியில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வீதிப்பகுதியில் வசிக்கும் கந்தையா வள்ளிப்பிள்ளை (வயது - 84) என்ற வயோதிப மாதுவுக்கு இந்தக் கதி நேர்ந்தது.

அன்றைய தினம், வீட்டில் உள்ளோர் வெளியில் சென்றிருந்த சமயம், குறிப்பிட்ட வயோதிபமாது கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தார் என்றும் -

அச்சமயம், திடீரென பின்னால் வந்து வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்ததிருடன் பத்துப் பவுண் எடையுள்ள சங்கிலியை அபகரித்துவிட்டு, கிணற்றினுள் அவரை தள்ளிவிட்டதாகவும் - கூறப்பட்டது.

கிணற்றினுள் வீழ்ந்த வயோதிப மாது நீர்உந்துபம்பியைப் பிடித்தவாறு கூக்குரல் இடவே அயலவர்கள் சென்று அவரை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-161)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வலிகாமம் தெற்கு,செப்.7

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர் ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார். (எ-152)

# துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று இடம்பெறுகின்றது.

காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப் பூசையும் அதனைத் தொடர்ந்து அம்பிகை 9.30 மணியளவில் தேரில் ஆரோகணிப்பார்.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களின் நன்மை கருதி வட பிராந்திய போக்குவரத்துச் சபை, மினிபஸ் சங்கத்தினர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விசேட பஸ் சேவையினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கிடையில் - இம்முறை தேர், தீர்த்த உற்சவங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முனையலாம் என்றும் -

எனவே, ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் தங்க நகைகளை அணிந்து வருவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆலயச்சுற்றாடலில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இந்து வாலிபர் சங்கத்தினர், சாரணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் ஈடுபட்டுவருகின்றனர். சுகாதார நடவடிக்கைகளும்,அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாளை திங்கட்கிழமை காலை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

# கச்சதீவு ஆலய திருவிழாவுக்கு போதிய நிதி ஒதுக்கீடு தேவை

## நெடுந்தீவு பங்குத்தந்தை அரசிடம் கோரிக்கை

கச்சதீவு திருநாள் கொண்டாட்டத்தினை நடத்துவதில் நெடுந்தீவுப் பங்கு நிர்வாகம் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இதனைக் கவனத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் நெடுந்தீவுப் பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய செபமாலை செபநேசரத்தினம் அடிகளார்.

இது தொடர்பாக கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருநாள் கொண்டாட்ட ஒழுங்குளை மேற்கொள்வதற்கென எமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை.

திருவிழாவுக்கு வருகை தருவுள்ள மக்களுக்கான உணவு, குடிதண்ணீர், மலசல கூடங்கள், தரிப்பிடங்கள், முதலுதவிச் சிகிச்சை வழங்குதல் போன்ற முறையான வசதிகள் அங்கு இல்லை.

தேவாலயத்துக்கு வருகை தரும் மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

வருகை தரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் குருமார்களைத் தங்க வைப்பதற்குப் போதுமான தங்குமிட வசதிகள் அங்கு இல்லை.

தேவைக்கேற்ற வகையில் குடிதண்ணீர் வழங்கலுக்கு செய்வதற்கான நீர்த்தாங்கிகள், மின்சார விநியோகம் மற்றும் ஒலிபரப்பு சாதனங்கள் வசதி இல்லை.

மேற்படி திருவிழா முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு என்பதால் இத் தேவாலயத்தின் தேவைகளை கருத்தில் எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இத்தேவைகள் நிறைவு செய்யப்படாதுவிட்டால் அடுத்த வருடத்திற்கான திருவிழாவினை நடத்துவதில் பல இடர்பாடுகள் எதிர்நோக்கப் படலாம்.

எனவே முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதற்கு ஆவன செய்யுமபடி கேட்டுக்கொள்கிறேன் - இப்படி அதில் உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். ஆயர், யாழ் அரச அதிபர் மற்றும் நெடுந்தீவு உதவி அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-9)

### மாடுகள் வேட்டையாடப்படுவதைத் தவிர்க்க

# கால்நடைகளுக்கென தீவகத்தில் பண்ணைகள் நிறுவுவதற்கு ஏற்பாடு

## தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தகவல்

தீவகத்தில் கட்டாக்காலி மாடுகள் பலராலும் வேட்டையாடப்படுவதை தவிர்க்கும் பொருட்டு அவற்றிற்கென பண்ணைகளை அமைக்கவும் -

பண்ணைகளில் விசேடமாக அவற்றை பேணுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம். கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை அரசியல் பணிமனையில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய போது மேலும் தெரிவித்ததாவது:- கட்டாக்காலி மாடுகள் பலராலும் நாளாந்தம் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருகின்றன. எமது பிரதேசத்தின் முக்கியமான வளங்களில் ஒன்று இவ்வாறு அழிந்து போவதை எம்மால் அனுமதிக்க முடியாது. இவற்றிற்கென விரைவில் பண்ணைகள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் பொதுமக்கள் நன்மையடையும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்பொழுது பெரும்பாலான சனசமூக நிலையங்களில் பலர் பதவிக்காகவும், புகழுக்காகவும் அதில் இருந்துகொண்டு அதை சீரழித்து வருகின்றனர். இவ்வாறானவர்கள் அவற்றில் இருந்து உடன் விலகி ஆளுமை செயற்திறன் மிக்கவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படையுங்கள். அல்லது இன்றைய படித்த இளைஞர்களிடம் நிறையவே ஆளுமைச் செயற்திறன்கள் உள்ளது. அவர்களிடம் பொறுப்பைக் கையளியுங்கள்.

இதன்மூலம் மக்களுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் இடையில் நீண்டு செல்லும் இடைவெளியை குறைத்துக்கொள்ளலாம் பல சனசமூக நிலையங்கள் கறையான் புற்றுக்கள் நிறைந்த கட்டாக்காலிகள் தங்குமிடமாக மாறியுள்ளன. கிராம மட்டத்தில் சமூகசீரழிவுகள், வறுமை, சுகாதாரம், பாடசாலை செல்லாத பிள்ளைகள் என-பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. எனவே, இத்தகைய பிரச்சினைகளை இணங்கண்டு தீர்த்துவைப்பதில் சனசமூக நிலையங்கள் முன்னின்று செயலாற்ற வேண்டும் என்றார்.

ஊர்காவற்றுறை பிரதேசபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. மகேந்திரன், யாழ் மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் பொறுப்பாளர் பாலையா, ஊர்காவற்றுறை அரசியல் துறைப் பொறுப்பாளர் டானியல் அதியேன் கலந்துகொண்டனர். (எ-16)

# குறைந்த வேதனத்துடன் நிறைந்த சேவை புரிவோர் கூட்டுறவாளர்களே!

## பாராட்டு விழாவில் சங்கத் தலைவர் உரை

கூட்டுறவுத்துறையில் குறைந்தளவு சம்பளம் பெற்றுக்கொண்டு நிறைவான சேவைகளை கூட்டுறவுப் பணியாளர்கள் வழங்கி வருவதை எவரும் மறந்துவிட முடியாது.

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தி. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தில் 25 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் ஊழியர் எஸ்.சின்னராசாவின் பாராட்டு விழா அண்மையில் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் கெ.ஹென்றிவிஸ்மன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்த சூழ்நிலையில் சங்கத்தின் சொத்துக்களைக் காப்பாற்றியவர் சின்னராசா.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் வேதனம் அவர்களின் குடும்ப வாழ்க்கையை நடத்தப் போதாது. இந்தக் குறைந்த வேதனத்துடன் நிறைவான சேவை புரிந்துவரும் சகல கூட்டுறவுப் பணியாளர்களையும் பாராட்ட வேண்டியது இன்றைய கடப்பாடாகும் என்றும் தெரிவித்தார்.

விழாவில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம், தீவகக் கோட்ட அரசியல்துறை விசேட இணைப்பாளர் கானகன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (ஐ-17)

# 40 லட்சம் குழந்தைகள் வருடாந்தம் இறக்கின்றன

## கொழும்பில் நடந்த மாநாட்டில் தகவல்

கொழும்பு,செப்.7

குழந்தைகள் இறப்புவீதத்தை கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் சில மாநிலங்களுக்கு இலங்கை முன்னுதாரணமாகத் திகழமுடியும் என 'சார்க்' அமைப்பின் குழந்தைகள் நலச்சங்க பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி திலீப் முகர்ஜி தெரிவித்தார்.

கொழும்பு பிளாசாவில் நடைபெற்ற 'சார்க்' நாடுகளின் குழந்தைகள் நலச்சங்க இரண்டாவது மாநாட்டில் கூடியிருந்த 'சார்க்' மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே டாக்டர் முகர்ஜி இதனைத் தெரிவித்தார். 22வீதமான குழந்தைகள் நிறைகுறைவான குழந்தைகளாகப் பிறக்கின்றன. பிறக்கும் 10 குழந்தைகளில் 7 குழந்தைகள் பல்வேறு நோய்களின் நிமித்தம் மரணமடைகின்றன என்றும் டாக்டர் முகர்ஜி கூறினார்.

இந்தியாவில் கேரளாவை மட்டுமே சுகாதார அடிப்படையில் இலங்கையுடன் ஒப்பிடமுடியும். உலகளாவிய ரீதியில் குழந்தைகள் இறப்புவீதம் தற்போது குறைந்து வருவதாகவும், 2000ஆம் ஆண்டில் இறந்த 10-8 மில்லியன் குழந்தைகளில் 90 வீதமானவை குறைந்தவருமானமுள்ள நாடுகளைச் சேர்ந்தவை எனவும் டாக்டர் முகர்ஜி மேலும் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுகளின் அடிப்படையில் வருடாந்தம் சராசரி 40 இலட்சம் குழந்தைகள் இறக்கின்றன.

இலங்கையின் குழந்தைகள் இறப்பு வீதம், உலகளாவியரீதியில் குழந்தைகள் இறப்புவீதத்துடன் ஒப்பிடும் போது குறைவானதாகும் எனவும் டாக்டர் முகர்ஜி தனது உரையில் தெரிவித்தார். (ஐ)

### மது போதையில்

# "லான்ட் மாஸ்ரர்" செலுத்தியவருக்கு ரூபா 3 ஆயிரம் அபராதம் விதிப்பு

தென்மராட்சி,செப்.7

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய லான்ட் மாஸ்ரர் சாரதிக்கு 3 ஆயிரம் ரூபாவினை அபராதமாகச் செலுத்த சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

சாரதிய அனுமதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவை இல்லாத நிலையில் மதுபோதையில் வாகனத்தை அவதானமின்றி செலுத்திய வட்டுக்கோட்டையைச் சேர்ந்த லிங்கம் நவரத்தினம் என்பவருக்கு எதிராக சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிவான் மேற்குறித்த நான்கு குற்றச்சாட்டுகளுக்காக 3 ஆயிரம் ரூபாவினை அபராதமாகச் செலுத்துமாறும் செலுத்த தவறின் மூன்று மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எ-117)

ஸ்ரீ துர்க்கை அ

# தெல்லிப்பழை ஸ்ரீ து

## தேர்த்திருவிழா சிறப்


தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துவோர்

ஜகபி பழத்தொழிற்சாலை
**சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்**
காங்கேசந்துறை சாலை, சுன்னாகம்.

**ஸ்ரீ முருகன் நகைமாடம்**
(நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள்)
25, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

அருள் பொழியும் அம்பாள் தேரில் பவனி சிறப்புற வேண்டுகிறோம்
அம்பாளின் அடியார்களுக்கு அதிசிறந்த ஐஸ்கிறீம் வழங்குவோம்
**குணம் கிறீம் ஹவுஸ**
வீரவாகுசட்டடம், பஸ்நிலையம், பருத்தித்துறை.
துர்க்காபுரம், தெல்லிப்பழை. T.P: 070 212048
49.கே.கே.எஸ்வீதி, சுன்னாகம்.

**ஐ.பேரம்பலம் அன் சன்**
கோயில் அபிஷேக திரவியங்கள், மருந்துச் சரக்கு வகைகளுக்கும்
வைத்திய சேவைக்கும் சிறப்பானவர்கள் (காலை-மாலை வைத்தியச் சேவை)
வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
10, கே.கே.எஸ்.சாலை, சுன்னாகம்.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
(மாணவர் மனங்கவர்ந்த புத்தக நிறுவனம்)
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2573 (யாழ்ப்பாணம்)

துர்க்கையின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக!
திருமதி பாக்கியலஷ்மி - நடராஜா
**பூபாலகிருஸ்ண ஆச்சிரமம்**
224, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

**ஜெய கிருஸ்ணா**
இரும்பு, பெயின்ற், கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்கள்
20, காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.

தரமான போட்டோஸ்ரற் சேவைக்கு
**கௌரி தொலைத்தொடர்பு சேவை**
கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம். T.P 070- 212427 வெளிநாடு: 0094 0212424
**கபிலன் தொலைத் தொடர்பு சேவை**
கே.கே.எஸ்.வீதி, ரொட்டியாலடி. T.P: 070-212718 வெளிநாடு:0094-70212718

**மங்கை சில்க்**
(மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை)
இல. 08, நவீன சந்தை, சுன்னாகம்.
யாழ்ப்பாணம்.

தினக் கலண்டர், டயறிகள், பாலர் புத்தக வகைகளுக்கு
**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
கஸ்தூரியார் வீதி, கைதடி. கிளை: 320,செட்டியார் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 334004

போட்டோ சண்கோ
**DIGITAL COLOUR LAB**
(புகைப்படப்பிடிப்பில் முதன்மையானவர்கள்)
34, கே.கே.எஸ் வீதி- சுன்னாகம்.

**பரக்கத் BARAKATH STATIONERS**
காகிதாதிகள் விற்பனையில் முதன்மையானவர்கள்
இல. 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**சிந்தி பெயின்ற் ஹவுஸ்**
(வர்ணமிகு தீந்தைகளின் ஜால மாளிகை)
63, கே.கே.எஸ் வீதி- சுன்னாகம்.

**டயமண்ட் ரேடேர்ஸ்**
(பல சரக்கு வியாபாரத்தில் முன்னோடிகள்)
12, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.


### தேரேறி வந்திடம்மா

தேரேறி வருகின்ற தெல்லி நகர் துர்க்கையம்மா
தேசம் தனில் துன்பத்தைத் தீர்த்திடம்மா
நின்புகழைப் பாடுகின்ற எம் துயரைப் பாரும் அம்மா
கண்ணீரைத் துடைத்து விடும் காமாட்சியம்மா
காரிருளில் கை கொடுத்து உதவும் அம்மா
தேர் தன்னில் நீஏறி வலம் வந்திடம்மா

பாவம் செய்த எம்மை பண்புடனே காத்திடம்மா
தேரேறி வந்திடும் துர்க்கை அம்மா
எமை எல்லாம் காத்து உன் அடியில் வைத்திட வேண்டும்அம்மா

சரணம்! சரணம்!! சரணம்!!!

ஆக்கம் : ரெங்கராஜா கிருஸ்ணவேணி

### அன்னையை வேண்டுகிறோம், அடியார் குறைதீர்க்கும் கற்பகவல்லியே

தெல்லி நகரில் உறையும் துர்க்காதேவியே
அள்ளி அருள் தரும் பங்கயச் செல்வியே
அடியார் குறைதீர்க்கும் கற்பகவல்லியே – உன்னை
நாடி வரும் குழந்தைகளின் தாய்மடியே.

இலுப்பை மரநிழலில் இங்கிதமாய் – உறைபவளே
உலப்பி வரும் நோய்களை தீர்க்கும் துர்க்கையே
சிங்க வாகனத்தில் ஏறிவந்து – எம்
குறைகளை தீர்ப்பவளே.

சங்கு சக்கரம் கொண்ட நாயகியே
இங்கு வந்தெமக்கு அருள் தாருமம்மா
கருணை வெள்ளம் பாய்ந்தோட
கன்னிக் குமரியே கருணை பொலிவாய்.

ஏழையாய் தவிக்கும் மானிடர்க்கு
அம்மா நீ அருள் செய்யம்மா
தங்கத் தேரில் ஏறிவந்து – எம்
பாவங்களை அறுத்திடம்மா

ஆக்கம்: து.துஸ்யந்தி

### தங்கத் தேரேறி தமிழிசை பரப்பிடுவாய்!

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
சாம்பவி உன் கரம் தரித்தாயம்மா – உன்
சிந்தையில் மகிழும் அன்பினைத் தேடும்
சீலத்தில் உன் பக்தர் குறை தீர்ப்பாயம்மா.

அங்கயற் கண்ணியம்மா நீ அமிழ்த்தசொருபியம்மா
அருள்வரம் தருவாயம்மா நீ நாடும் வரம் தருவாய் அம்மா
இல்லாமை அகற்றியைத் தருவாயம்மா நீ இரு வரம் காத்திட வருவாயம்மா
என்றெடுத்த அன்னையம்மா நீ ஈசன் அருள் தேவியம்மா.
சிங்கார வேலுடனே சிங்கத்திலே வருவாயம்மா
சீலமெல்லாம் அடி வர நல் நடனம் புரிவாயம்மா

பொங்குகின்ற துன்பங்களைப் போக்கியருள் தருவாயம்மா
போர் ஆழும் உலகத்தினை சாந்தமாய் மாற்றிடம்மா.

கண்களிலே கருணைவெள்ளம் மடை போல் பாய
காணும் அன்பர் குறை கருத்தினிலே செறிந்திடவே
கிண்கிணிச் சலங்கைகட்டி மின்மினிப் பார்வையாலே
கீர்த்தனம் ஆடி நீ வலம் வருவாயம்மா.

தேரேறி வந்திடம்மா தேவியளே துர்க்கையம்மா
தேன் அமுத மழையினாலே துன்பங்கள் துடைப்பாயம்மா
நாடி வரும் பக்தர்களைத் தேடி வரம் கொடுப்பாயம்மா
நாயகியே ! நான்முகியே ! நலன் பல தருவாயம்மா!

ஆக்கம்: இ. கோகிலா

### தேரில் வரும் தேவியே

என்ன தவம் செய்தோம்
எம்மை நீ உரிமை கொள்ள
கன்னிக் குமரியான
கருணை முகிலே! அம்மா!
என்ன தவம்....
முந்தைப் பிறவியிலோ
முயன்று தவசு செய்தோம்

முதலாய் இன்றனது
முக தரிசனம் அடைந்தோம்
மந்திர வடிவே ! ஞான
மது வெள்ளமே ! அமுதே !
மாணிக்கத் தாய்மடியே !
காணிக்கை இல்லை அம்மா –என்ன
தேரில் வரும் தேவியே
தேடி வருகின்றோம்

தேசமெல்லாம் வாழவே
சாந்தி கேட்கின்றோம்
ஊரில் நாட்டில் உலகெலாம்
உன்னருள் நதியின்
ஊற்றுப் பெருகி நலம் தர
உன்னை வேண்டினோம்!

-நிவேதிதா

### திருவருள் தருவாய் துர்க்கையம்மா

நம்பினவரைக் காக்கும் தெய்வமம்மா – உன்னை
நாடி நின்றால் வருவது கல்வியம்மா
நடனமாடி வந்து நில்லம்மா– எமக்கு
நல்லருள் செய்து காத்திடம்மா
நீயின்றி இந்த உலகாடுமோ – எம்
தாயின்றி நிம்மதி கிடைத்திடுமோ
சகல உயிரும் உந்தன் வடிவம்மா – உந்தன்
சந்நிதியில் இருப்போர்க்கிது தெரியுமம்மா
தேடும் போற்றும் துர்க்கையே – உன்னை

தேடி நாம் தொழுதிடுவோம்
பாரினில் மக்கள் போற்ற வந்திடுவாய்– அம்மா
பார்வதி நீ எமக்கு அருள் தருவாய்

சிங்க வாகன கோமள வல்லி – உன்
சிவ சக்தி ஜெயம் மந்திரம் சொல்லி
அழகிய பாதம் பணிந்தேன் வருவாய் –நீ
இளகிய மனதால் திருவருள் தருவாய்

செல்வி வி. ஜலஜா

### தெல்லிப்பழை துர்க்காதேவியே சரணம்

தாயே சரணம் துர்க்கா தாயே சரணம்
உலகைக் காக்கும் அன்னையே சரணம்
என்னையும் வாழவைக்கும் இறைவியே சரணம்
நாங்கள் வணங்கும் ஆதிபராசக்தியே சரணம்
அம்பிகையே ஈஸ்வரியே சரணம் சரணம்

அகிலத்தை உய்விக்கும் அம்மையே சரணம்
ஆனந்தம் தந்திடும் அம்மா சரணம்
தெல்லிப்பழை துர்க்கா தேவியே சரணம்

-கிருஸ்ணசாமி சுவர்ணா

### துர்க்காம்பிகை

சரணம் சரணம் துர்க்காம்பிகையே
சங்கரி சரணம் லலிதாம்பிகையே
வரணும் வரணும் தேரிலேறியே
வல்வினை போக்கிடும் அம்பிகையே
அன்பு கொண்டே அழைத்திடுவேனே

ஆறுதல் தந்திட வந்திடுவாயே
இன்பம் தந்திடும் ஈஸ்வரியே
இனிதாய்க் காப்பாய் துர்க்காம்பிகையே

ஆக்கம் :செல்வி கிருஸ்ணசாமி

### தாயே வருவாயே

இன்பத்தில் இதயம் துள்ளி
இனிக்கும் நல்லறங்கள் பொங்கி
சந்தத்தில் கவிகள் குழைய
சாரலில் நாங்கள் நனைய
நெஞ்சத்தில் குளிர்ந்திருக்கும்

நேசமே உனைக் காண
தேரேறி வருவாயே தாயே
தேசங்கள் உன்னால் உயரட்டும்

ஆக்கம் : ப.பார்த்திபன்

### தேரில் வா தாயே

அன்னை எங்கள் தாயே
அழகு கொஞ்சும் தாயே
மண்ணில் நாங்கள் வாழவே
அறிவுச் செல்வம் வேண்டுமே
சின்னப் பயிர் நாங்களோ

சிரித்து ஆட வேண்டுமே
பொங்கும் இன்பம் துள்ளவே
தேரில் வா தாயே

ஆக்கம் : ப. சுபாஜ்

### அருளைத் தா அம்மா

அம்மா அம்மா தாயே
அகிலம் ஆளும் தாயே
சின்னக் குயில்கள் பாடவே
அருளைத் தருவாய் நீயே
பூமி கோலம் போடும்

வானம் பன்னீர் தூவும்
நாங்கள் ஆடிக் கொள்ள
தேரில் வா தாயே

ஆக்கம் : ப.கோபிகா

### ரதத்தில் ஏறி வாருமம்மா

ரதத்தில் ஏறி வரும்
துர்க்கா தேவியே சரணம் அம்மா
ரத வடம் பிடித்தே அருள் பெறவே
அலை அலையாய் வந்தோம் அம்மா
ஆனை முகன் தாயே வாருமம்மா
அனுதினமும் காத்திடவே வாருமம்மா
ஆறுமுகன் அன்னையே வாருமம்மா
ஆனந்தமாய் ரதத்திலேறி வாருமம்மா

திருவீதியிலே தேர் ஓடுது
தேர் ஓடுது தேர் ஓடுது
ஆலய வீதியிலே
நான்கு திசைகளிலும்
பக்தர் கூட்டத்திலே
காவடிகள் ஆடி வர
கற்பூரச் சட்டிகள் ஏந்தி வர
திருநாமம் ஒலித்து வர
திருவீதியிலே தேர் ஓடுவே

ஆக்கம்:
கிருஸ்ணசாமி துளசிகரன்



Photo:Shanko, Chunnakam.

### உள்ள தேர் ஒன்று; உ

சிவன் வேறு, சக்தி வேறு அன்று. நெருப்பும் சூ
இருப்பவர்கள் சிவன் இல்லாமல் சக்தி இல்லை
சிவஅநுபூதிச் செல்வர்கள் உணர்ந்த– உ
இறைவனும்பாதி இறைவியுமான அர்த்த நா
விளக்குகின்றது. இம்மூர்த்தத்தில் இறைவனுட
தேவியாகவே கண்டுணர்ந்து கைகூப்பிக் கருத்தி
வசிஷ்டர், பிருகு, துர்வாசர் போன்ற மஹரிஷிகள்.

எண்ணற்ற பிறவிகளில் நாம் செய்யும் எண்ணற்ற
மொழி, மெய்யால் வழிபட்டால், கண்ணிமைக்கும்

நல்ல, நேர்மையான நீதியான செயல்களைப் புறந்
கொடிய செயல்களைச் செய்வோரைத் தன் மறக்க
அவள், நீதியும் நேர்மையும் கொண்டு தர்ம வழியில்
இடர்களையும் உடனுக்குடன் களைந்து எண்
அவர்களுக்கு அளிக்கின்றாள்.

காளிதாசர், மூககவி, வித்யாரண்யர், திருமூலர்
பெரும்பயன் அடைந்தோருட் சிலர்.

இவ்வாறான மகிமைகளுடனும் பல்வேறு சூழ்
அல்லற்பட்டு ஆற்றாது அழுது கலங்கும் ஆயிரக்கண
நோயுற்றோர், முதியோர் போன்றவர்கட்கு –

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாகு
அறங்காவலர் சபையூடாக –

பொன்னாகவும் பொருளாகவும், கருவியாகவும் க
உயிர்காக்கும் மருந்தாகவும் தன் அருளைச் சொரி
தனிச் சிறப்புடனும் –

தெல்லிப்பழை உழுகொடைப் பதியில் வீற்றிருந்
இன்று தேரேறுகின்றாள்; அட்சர சுத்தமும் அர்த்த பா
ஒலியும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் ப
சேமக்கலம், மணி, தவில், நாதஸ்வரம் போன்ற ம
சங்கமிக்கும் நாத வெள்ளத்தில் மிதந்தபடி –

கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணத்
ஏற்றமுறச் செய்யும் விண்மணித் தேரில் ஏறும் போ
இதயத் தேரிலும் அம்பாள் ஏறி அமர்கின்றாள்.

இவ்வாறு, உள்ள தேர் ஒன்று, உள்ளத் தேர் நூறா
மகத்துவத்தை உணர்ந்து மகிழ தேவியின் திருத்
மலர்வோம்.

### பூங்கமல விழி காட்டும் தாயே!

ஓங்குடிகழ்த் தெல்லியூர் தனிலமர்ந்த
உமையவளே துர்க்கையம்மா, நினதுபாதம்
தாங்குகின்ற தங்கரத மேறி அன்பவர்
தரணியிலே சுகமாக வாழ்வதற்குப்
பூங்கமல விழிகாட்டும் தாயே, நின்றன்
பொன்முகத்தைக் காணுகின்ற அடியார்க் கெல்லாம்
தேங்குநிதி சந்தானம் கல்வி வாழ்வு
சிறந்தளிக்கும் செல்வியே போற்றி போற்றி

பொங்கும் கோபுரத்துர்க்கா புரத்தில் மேவும்
பூரணியே துர்க்கையம்மா புனிதத் தேரில்
தங்குமம்மா தாவேயுன் கருணையாலே
தானதவம் சமாதானம் தமிழ்ச்சிறப்பு
வெங்கொடுமை நிகழாத சாந்த வாழ்வு
விளைவளங்கள் தெய்வீகப் பணிநலங்கள்
எங்கும் சீர் பெருகுமுயர் நீதி நேர்மை
எல்லார்க்கும் தந்திடம்மா போற்றி போற்றி

அருட்கவி. சீ.வி


தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதாக
இன்று வடம் பிடிக்க வாருங்கள். வந்தால் மேல் வீட்டில் இடம் பிடித்தல் எளிது.
**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
புகழ் பெற்ற புத்தக வியாபாரிகளும்-புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும்
தரமான றபர் முத்திரைகள் (Rubber Stamps) தயாரிப்பவர்களும்.
பஸ்நிலையம் முன்பாக சுன்னாகம்.

உ
ர்கை அம்மன் துணை

# துர்க்காதேவி ஆலய
## ப்பு மலர் – 07.09.2003



## று; உள்ளத் தேர் பலநூறு

ருப்பும் சூடும் போல் சிவனும் சக்தியும் இணைந்தே
தி இல்லை; சக்தி இல்லாமல் சிவன் இல்லை–
த– உணர்த்துகின்ற பேருண்மை இது. பாதி
ர்த்த நாரீஸ்வர மூர்த்தம் இப்பேருண்மையை
றைவனுடன் இணைந்துள்ள அம்பிகையை, துர்க்கா
க் கருத்திலிருத்திப் பயன் பெற்றவர்கள் காஸ்யப்பர்,
ரிஷிகள்.
எண்ணற்ற பாவங்கள் யாவும் துர்க்கா தேவியை மனம்
மைக்கும் நேரத்திற் கரைந்து போய்விடும்.
ப் புறந்தள்ளி விட்டு, வேண்டுமென்றே கீழ்த்தரமான
தன் மறக்கருணையால் தண்டித்து நல்வழிப்படுத்தும்
வழியில் நடப்பவர்களுக்கு நேரும் இன்னல்களையும்
ந்து எண்ணிலா இன்பத்தையும் மகிழ்ச்சியையும்

திருமூலர்ஆகியோர் துர்க்காம் பிகையின்பேரருளாற்

வேறு சூழ்நிலைகளின் பயங்கரத் தாக்கங்களால்
ஆயிரக்கணக்கான அநாதைகள், அகதிகள், ஏழைகள்,
–
மா அப்பாகுட்டிஅவர்களைத் தலைவராகக் கொண்ட

பாகவும் கட்டடமாகவும், உணவாகவும் உடையாகவும்
ளச் சொரிந்து தன் சாந்நித்தியத்தை உறுதிப்படுத்தும்

வீற்றிருந்து தேசமெலாம் காத்துவரும் தேவி துர்க்கை
அர்த்தடாவமும் நிறைந்த அந்தணர்களின் திருமுறை
மல்கிப் பக்தர்கள் ஓதும் திருமுறை ஒலியும், சங்கு,
போன்ற மங்கல வாத்தியங்களின் இங்கித ஓசையும்
டி–
வண்ணத் தேரில், எண்ணத்தையும் இதயத்தையும்
ஏறும் போதே, இலட்சக் கணக்கான அடியார்களின்
றாள்.
தேர் நூறாக, ஆயிரமாக, இலட்சமாகப் பரிணமிக்கும்
யின் திருத்தலத்துக்கு நாமும் விரைவோம்; தேராய்

–சி.சிவசரவணபவன்(சிற்பி)

## அன்னையின் தெய்வீக ஆற்றலை அனைவரும் பெற்றிடுவோம்

தெல்லி நகரிலே தெய்வீக ஒளியாய், ஆற்றல் கொடுக்கும் அற்புத நாயகியாய் எல்லோருக்கும் தாயாக விளங்கும் துர்க்காதேவியானவள் இந்த ஆலயத்தில் தெய்வீக சொரூபமாய் வீற்றிருக்கின்றாள்.

துர்க்கையின் அபார சக்தியினை அன்பர்கள் பெற்றிட எட்டுத்திக்கில் இருந்தும் வருகை தந்து கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆம் அவர்களுள் ஓர் அடியவள் நான். எம் அன்னையின் அளப்பரிய சக்தியைக் காணாத நாள்களே இல்லை. அன்னையின் திருவருளினால் "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" என்னும் இல்லத்திலே வாழுகின்ற குழந்தைகள் அனைவரும் முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர்கள் அன்றோ?

ஆம்! அன்னை அடி நிழலில் ஆனந்தமாய்ப் பாடிடவும், திருப்பணிகள் செய்திடவும் கிடைத்தது பெரும்பாக்கியம் ஆகும் அன்னையின் தெய்வீக ஆற்றலை எமக்கு மட்டுமல்ல உலகில் உள்ள துர்க்கையின் அடியவர்கள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

அன்னை துர்க்கையை வணங்குவோர்க்கு எல்லா இன்பமும் கிடைக்கும். இணையில்லா அறிவு ஏற்படும் ஞானம் தித்திக்கும். வீடுபேறு தானே கிடைக்கும் என்று சங்கரர், காளிதாஸர், பாரதி போன்ற அருளாளர்கள் கூறிவைத்துள்ளார்கள். ஆகவே அன்னையைப் பணிந்து, அவள் தந்து மேன்மையும் பெறுவோம்.

ப. சுமித்திரா.
துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## நினைவில் நீங்காத நின்னருள் தேவியே!

அகரமாய் உதிக்கும் கருவாகிய தேவியே
ஆதியாய் ஊற்றெடுத்த கருணை வெள்ளம் நீயே
அடியார்கள் உன் திருவடியில் தஞ்சமே வேண்ட
ஆம்பல் தூவி காந்தர்வர் தொழுத தாயே.

காசியாம் பதியிலே சொற்பன தேவி
தெல்லிநகர் தேசத்தில் துர்க்கா தேவி
கதிர்காமர் தேடிய கருணையாம் தேவி
கலியுகத்தின் மந்திரம் ஸ்ரீ துர்க்கா தேவி

அடியார் குறைகளைப் போக்கிடுவாய்.
அன்னபூரணியாய் தெல்லியில் அவதரிப்பாய்
அன்னை தந்தையாய் எமக்கு அடைக்கலம் தந்திடுவாய்
அன்னத்தைக் கொடுத்தெமக்கு அரும்பசி போக்கிடுவாய்

அன்னை நீ எம்மை அனுதினம் காத்திடுவாய் என்று
ஆயிரமாயிரம் பக்தர்கள் ஓடோடி வருகிறார்.
அடியார்கள் பசிப்பிணியைப் போக்குவதற்கு
அன்ன சத்திரம் சமைத்தாய், அன்பு நிழல் அமைத்தல்

பாரினில் புகழோங்கும் அபிராமி அன்னையே!
பார்வையில் பரிமளிக்கும் தங்கத்தாயானவளே!
பசியென்று வருவோர்க்கும் பட்டினியைத் தீர்ப்பவளே!
பாவங்கள் ஒழிந்தோட சூலப் படை கொண்டு வந்தவளே!

தெல்லிநகர் உழுகுடையில் தென்றலாய் வீசுகிறாய்
தேன் அடையாய்த் தித்தித்து இலுப்பை மரநிழல் அமர்ந்தாய்
தேரேறி வரும் தேவி! தேசமெல்லாம் ஆள்பவளே!
தெய்வமே! சிதறாத சாந்தியின்பம் தெளிவுடனே தருவாயே.

கே.புஸ்பலட்சுமி
யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்.

## எக்காலமும் எம்மை வாழ்விப்பவள் துர்காபுரத்தில் தேரேறி வருகிறாள்

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனத்தில் நினைத்ததையெல்லாம்
நொடியில் அளிப்பவள் நீயே!
கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தைக்
கொழிக்கச் செய்திடும் தேவி
மாற்றார் மனத்தின் மயக்கத்தை அறுக்க
மாதே தேரேறி வருக

கவிமாமணி.மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

## துர்க்கையவள் பேரின்பந் தருகின்றாளே

செருக்கினால் தீவினைகள் செய்த சூரன்
செருக்களத்தில் எதிர்த்தபோ தவனைமாய்த்து
அருக்கனாய் நின்றவன்றன் அஞ்ஞானத்து
இருள்கடிந்து ஆட்கொண்ட அன்னை துர்க்கா
தருக்கள் நின்ற மலர்ச்சோலை விளங்குதெல்லிப்
பழைநகரில் கோயில்கொண் டுறைகின்றாளால்
விருப்பமொடு அடியார்கள் வந்தனைவார்
வினைபோக்கி அருள்தந்து பாலிக்கின்றாள்.

பல்வுலகும் போற்றியிசை பாடிநிற்கும்
பரவுமடி யார்களெமிக்க கூடிநிற்கும்
நல்லறிஞர் ஆய்வுமன்றம் அறப்பணிகள்
நல்லொழுக்கச் சிறுமியரின் வாழ்க்கைப் பள்ளி
நல்லமுது நாடோறும் பாலிக்கின்ற
நன்மடங்கள் எனப்பலவும் விளங்குகோயில்
தெல்லிநகர்த் துர்க்கையவள் வீற்றிருந்து
தெவிட்டாத பேரின்பந் தருகின்றாளே.

நா.நல்லதம்பி
மட்டுவில்.

## அருளொளியில் உளம்நனையும் ஆவணித்திங்கள்

ஆவணி தனிலழகு இலங்கிடும் உன்கோல
ஒளிகண்டு உளம்குளிரும் குளிருமம்மா
ஆவலுடன் உன்னடியை நாடிவரும் திருக்கூட்டம்
நாவார உன்புகழைப் பாடுமம்மா
தெல்லிநகர் தனிலோங்கும் தேவிதுர்க்கை அம்மா உந்தன்
தேசுமிகு காட்சிநலம் மிகுபடைக்கும்
நல்லருளை வேண்டித்துதி பாடிவரும் அடியவர்கள்
நானிலத்தி லேயுயர வழிகாட்டும்
பொங்கும் தயர் மறைந்தோடும் பொற்புமிகு கொடியேற்றம்
கண்டகண்கள் தான்குளிர்ச்சி காணுமம்மா
எங்குமுந்தன் அருளமுதச் சுனை வெள்ளம் பாய்ந்தோடி
ஏக்கங்கள் தீர்க்குமருந் தாகுமம்மா
கண்ணிலருள் சிந்திவரும் காரணியே பூரணியே
காசினியில் திருவேட்டை ஆடுமம்மா
வண்ணமிகும் சப்பரத்தில் நீயேறி வருதல் கண்டால்
வாஞ்சையுடன் கரங்குவிந்தே வணங்குமம்மா
சித்திரத்தேர் மணியினொலி ஒலிக்கின்ற வேளையிலே
சிந்தையிலே உன்னழகு நிறைந்தேகாண
வித்தையுறி கொற்றவையே நீயெழுந்து வீதிவலம்
வந்தருளும் திருக்காட்சி கூட்டுமம்மா
இத்தனைக்கும் மேலாக இன்னருளே சுரக்குமுந்தன்
இனிய நீர் விளையாடல் கண்டு துதித்தே
சிந்தைமகிழ்க்கும் உந்தன் திருவருளாய் ஒளிசுரந்து
தீபவொளி மகிமைதந் தாளுமம்மா தாயே
திருவருளின் ஒளிசுரந்து ஆளுமம்மா

கவியாக்கம்
தெல்லியூரான்.


தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்
*முத்திரைகள் *மணியோடர் *பதிவுத்தபால் *கடுகதி தபால் *தமிழ்-ஆங்கில நூலக சேவை *றோனியோ
* தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்பு * கடிதம் தயாரிப்பு * தமிழ்-ஆங்கில அச்சு சேவைகளுக்கு
நீதினி முகவர் தபாலகம்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி. சுன்னாகம்.

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

துர்க்கா சரணம் தாயே சரணம்
தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

ஓம் சக்தி நகைத் தொழிலகம்
(தங்கப் பவுண் வியாபாரத்தில் நாணயம் மிக்கவர்கள்)
93, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

சண்யோ கோப்பி & கூல் பார்
(குளிர்பானப் பிரியர்களின் சொர்க்கம்)
தரமான சிற்றுண்டிகள். குளிர்பானங்களுக்கு எம்மை நாடுங்கள்
இல. 16, பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

ராஜா மெடிக்கல்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரத்தில் முதன்மையானவர்கள்)
பிரதான வீதி, சுன்னாகம்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
(புத்தக வியாபாரத்தில் புதுமை செய்வோர்)
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறும் தேவியே சரணம் தாயே!
பூபாலசிங்கம் புத்தகசாலை
(புத்தக. வியாபாரத்தில் முதன்மையானோர்)
இல.4, ஆஸ்பத்திரி வீதி.யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் சினிமா
& நாகம்ஸ் பாட்டா
அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்
நவீன சந்தை,சுன்னாகம்.

புகழ் பல்பொருள் களஞ்சியம்
(பலசரக்கு வியாபாரத்தில் புகழ் பெற்றவர்கள்)
இல.3, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

சண்லைட் றைக்கிளீனேர்ஸ்
(போட்டோ பிரதி லமினேட்டிங் விற்பனர்கள்)
23, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

போஸ்கோ BOASCO
(பாடசாலை உபகரண விற்பனை முன்னோடிகள்)
இல.3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சண்ராஜ் கொம்பிளெக்ஸ்
(தரமான போட்டோஸ்ரற் செய்பவர்கள்)
138, பிரதான வீதி, சுன்னாகம்.
TP: 021-2225388, 021-2223909

வாணி விலாஸ்
(சிற்றுண்டிப் பிரியர்களின் சொர்க்கம்)
தலைசிறந்த சைவ உணவகம்
76, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

தபோதரன்ஸ்
அலுமினியம் fittings கண்ணாடிகள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்.
(படம் பிறேம்போடுவதில் நிபுணர்கள்)
57,பிரதான வீதி, சுன்னாகம்.

மிது . கொம். MITHU. COM
தொலை தொடர்பு சேவையில் முதன்மையானவர்கள்
TP :021 2225560, 021-2225686
JET MOTORS BUILDING
180- கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

## மேலைப் புலோலி மலையங்தோட்டம்
## அருள்மிகு ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய
## சம்புரோக்ஷண அஷ்டபந்தன
## மஹா கும்பாபிஷேகம்



நாளை ஆவணித் திங்கள் 22ஆம் நாள் (08-09-2003) திங்கட் கிழமை காலை 6 மணி 40 நிமிடம் முதல் 7 மணி 14 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு
*சிவாகம கிரியா திலகம்*
**சிவப்பிரம்மஸ்ரீ ஆறுமுக கணேசக் குருக்கள்**
*(துன்னாலை கோவில்கடவை விநாயகர் ஆலயம்)*

அருளுரை: நல்லை ஆதீனம்
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.*

*கும்பாபிஷேகம் நிறைவுற வாழ்த்துவோர்:*

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பு நிலையம்**
தம்பசிட்டி வீதி, காந்தியூர், புலோலி.
தொலைபேசி இல : 021 - 2263062,
0777 - 732294 (சி-30049) (32-16-13)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண விருந்துபசார அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஆவணி 21 ஆம் நாள் இன்று (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை துவாதசி திதியும் உத்தராட நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய பகல் 11.00 மணி தொடக்கம் 01 மணி வரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

திருநிறை செல்வன் **வரதராஜா** அவர்களுக்கும்



திருநிறை செல்வி **மஞ்சுளா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு லண்டன் மாநகரில் திருமாங்கல்ய தாரணம் நடத்தத் திருவருள் கைகூடியிருக்கின்றது. அத்தருணத்தில் ஆசிவேண்டி குடும்ப சகிதம் சமுகந்தந்து காளி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள பூசையிலும் காமதேனு தான மண்டபத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் குடும்பத்துடன் வருகை தந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

*திரு. திருமதி சபாரத்தினம் குடும்பத்தினர்*
*காளிகோவில் வீதி,*
*சங்கானை.*
*(பெரியவிளான், இளவாலை)*

*திரு. திருமதி கோபாலகிருஸ்ணன்*
*திருமதி பா. கனகராசா*
*குடும்பத்தினர்*
*மாலியவத்தை வீதி,*
*சங்கானை.*

இரு வீட்டார் அழைப்பு

எதுவித அன்பளிப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.




இல்லற வாழ்வில் இன்று இணையும் புதுமணத் தம்பதிகளின் திருமண நிகழ்வினைக் கொண்டாடும் முகமாக 1000 (ஆயிரம்) பயன்தரும் மரக்கன்றுகள் இலவச அன்பளிப்பாக வழங்கப்படும்.
இந்நிகழ்வினை - இன்று நண்பகல் 12.10 மணிக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் (யாழ்ப்பாணம்)
**பிரதம முகாமையாளர் ஆரம்பித்து வைப்பார்.**
☛ பொது ஸ்தாபனங்கள், ஆலயங்கள் உங்களுக்குத் தேவையான பயன்தரும் மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
*"மரங்களை நடுவோம்; பயன்களைப் பெறுவோம்"*

(22335)(16-13)



## டெவ்ரக் டென்சியா கம்பைன்ட் ஹாவஸ்டர்



* குறைந்த செலவு
* இலகுபாவனை
* அதிகூடிய திறன்
* வீண் விரயங்களைத் தடுக்கலாம்
* ஆறு மாத உத்தரவாதம் உண்டு

* நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப்பினை அறுவடை செய்யலாம்.
* இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக் கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்

புத்தம் புதியது

**டேவ் டிரக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்.**
**பக்கல, தொலைபேசி : 035 222 6010**



## நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன அலுவலரும்,
யாழ்ப்பாணத்தின் முன்னைய பிரபல விளையாட்டு வீரரும்,
விளையாட்டு நிர்வாகத்தில் தேர்ச்சி பெற்றவருமான
**க.பூபாலசிங்கம்**
அவர்கள் தமது வாழ்க்கைத் துணையான
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களை இழந்து துயருற்றிருக்கும் இவ்வேளையில் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல எம்பெருமானை தொழுது வேண்டுகின்றோம்.

*257, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/30048) (32) (13-16)

அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்.


## சிறுவர் நாடக விழாவிற்கு தெரிவு

வலி.தெற்கு,செப்.7

சிறுவர் நாடக விழாவையொட்டி வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்ற நாடக விழாவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களால் மேடையேற்றப்பட்ட 'நம்பினோரைக் கைவிடோம்' என்னும் நாடகம் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள சிறுவர் நாடக விழாவில் பங்குபற்றுவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலய சிறுவர் நாடக விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். மாதவகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட எட்டு பாடசாலை நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இவற்றுள் வலிகாமம் வலயத்தில் இருந்து மாவட்ட சிறுவர் நாடக விழாவில் பங்குபற்ற மேற்படி நாடகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (எ-152)


### தேவை

நவாலி - HSCMF நிறுவனத்திற்கு பயிற்சி எழுதுநர் தேவை. O/L தேறியவர் நேரில் வரவும்.
**பணிப்பாளர்,**
**HSCMF,**
**நவாலி வடக்கு.**

### தேவை

ஓட்டோ, மோட்டார் சைக்கிள் ஓடக்கூடியவர் தேவை.
*சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும்.*
**வி.இலக்கம் - 2026**
**மே/பா உதயன்**
**யாழ்ப்பாணம்.**

### பணிப்பெண் தேவை

வீட்டுவேலை மற்றும் குழந்தைகள் பராமரிப்பதற்கு 40-55 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்பு:-
செ.சுரேஷ் (HSCMF)
புலவர் வீதி,
நவாலி வடக்கு.
(22316)(16-18)

### HOME NEEDS
### பயிற்சி வகுப்புகள்

செப்ரெம்பர் 15 முதல் ஆரம்பம்
1. தையல் 2. கேக் ஐசிங்
3. சமையற்கலை 4. அழகுக்கலை
5. மணப்பெண் அலங்காரம்
*தொடர்பு:-*
ராஜி பிடில்
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

### தவறிவிட்டது

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த நடராசா கருணானந்தன் என்பவரின் மோட்டார் சைக்கிள் புத்தகம், வாகனத்தின் வரி, காப்புறுதிப் பத்திரங்கள் யாவும் தவறிவிட்டன.
கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
**V.K. கொமினிக்கேஷன்,**
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
☎ 021 2263589

### ஆள்கள் தேவை

தொலைத்தொடர்பு நிலைய அனுபவமுள்ள ஆண், பெண் இருவரும் றெஸ்ரோறன்ட் அனுபவமுள்ள ஆண் ஒருவரும் தியேட்டர் வேலை அனுபவமுள்ள ஒப்பறேற்றர் மற்றும் வேலையாள்கள் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.
**ராஜா தியேட்டர்,**
யாழ்ப்பாணம்.
(30041) (26 (16-18)



## கண்ணீர் அஞ்சலி

துடுப்பாட்ட விளையாட்டில் தனக்கென முத்திரை பதித்த எமது சங்கத் துணைத் தலைவரும் சங்கப்போட்டிக் குழுத் தலைவருமாகிய
**தி.க.பூபாலசிங்கம்**
அவர்களின் அருமைத் துணைவி
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அமரரின் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம்.

யாழ்ப்பாணம். (C/30047) (25-16-17)
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**

தோழமையின் ஒரு கிளை. அக்கிளையின்
அருமைக் கிழத்தி. இல்லற வாழ்வின்
முழுமையின் முன்னர் தனி வழி ஏகி
இறைபதம் அடைந்தமை எம்மவர்க்
கெல்லாம் ஆறாத்துயர். நம்மவர்
துயர் துடைக்க யாருளர். அந்நிலை,
அவன் துயர் துடைப்பவர் யாரோ.
மரபு வழி நின்று அமரரின் ஆன்மா
அமரத்துவம் பெற இறைஞ்சுவோம்.
அருமை நண்பன் பூபாலசிங்கம்
தன் துணை கமலாதேவியை இழந்த
நிலை கண்ட, அவன் துயர் துடைக்க
அமரர் இறைபதம் அடைய இறைஞ்சுகின்றோம்.

CAPT. N. சோமசுந்தரம் குடும்பம்,
சுடர். இ.மகேந்திரன் குடும்பம்,
க.தர்மகுலசிங்கம் குடும்பம்,
ந.வித்தியாதரன் குடும்பம்,
சண்.தயாளன் குடும்பம்.

யாழ்ப்பாணம் (C/30046) (25-16-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் இன்றைய தலைவருமாகிய
**திரு.க.பூபாலசிங்கம்**
அவர்களின் அருமைத் துணைவி
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (C/30045) (25-16-17)
ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம்.


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம்
**(மீசைக்கார மணியம்)**

காரைநகர், சல்லையைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (06.09.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கோமலாம்பிகை, கமலாம்பிகை, கனகாம்பிகை, கனகபூசணி, சண்முகராசா, காலஞ்சென்ற சற்குணவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தர்மராசா (பிரதேச சபை) மற்றும் இராமலிங்கம், தேவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (P.M.), கண்ணகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச.சண்முகராசா (மகன்)
(முகத்தார்)

*தங்கோடை,*
*காரைநகர்.* (22318) (25-16-17)

### சிவப்பிரகாசம் இராஜசூரியர்
**(ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் இராஜசூரியர் அவர்கள் 05.09.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணி - இராஜசூரியரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம், சொர்ணலிங்கம், கனகசூரியர், செல்வநாதன், திருவிளங்கம், தனஞ்செயராஜன் மற்றும் சிற்றம்பலன் - ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும் சிவகுமாரன், கலாநிதி, தயாநிதி, சுல்வரகுமாரன், குணநிதி, சாந்தநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுந்தரலிங்கம், ஞானப்பிரகாசம், யுவபாலசிங்கம், சாந்திக்குமார், கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயபால், முரதீசன், சுதாகரன் ஆகியோரின் பேரனும் செந்தூரு, சோபனா, கவிதா, வனயா, வானதி, தீபா, அனித்தா, அகிலன், விஜித்தா, விவேகா, திவ்யா, சரவணன், பிரகைவன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் கஸ்ருதி, அக்சரா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2003) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யுவபாலசிங்கம்
(மருமகன்)

*29/4 A, பீரிஸ் றோட்,*
*மவுண்ட்லவெனியா.* (C/30050) (11-14-16-18)

க விளங்கும் கண்ணிகள்

# வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம்

வெண்புறா நிறுவனத்தின் தலைமைச் செயலகம் 15.05.2002 யாழ்.சாலை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதன் வரலாறு 1994ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம், கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் தொடங்கிவைக்கப்பட்ட வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்துடன் பின்னிப் பிணைந்ததாகவே உள்ளது. அக்காலப் பகுதியில் வலுவிழந்தவர்களின் தேவைகளைக் கவனிப்பதற்கென்று இப்படியான ஒரு நிறுவனம் செயற்படவில்லை. போரின் அனர்த்தங்களினாலும் வேறுபல காரணங்களினாலும் கால்களை இழந்து நடக்க முடியாமல் உள்ளவர்களையும் அப்படி நடமாடமுடியாத காரணத்தினால் இயல்பு வாழ்க்கை தடம்புரண்ட நிலையில் எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளாகியவர்களையும் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் கலக்கவைக்கும் பாரிய பொறுப்பினைத் தன் தலையாய கடமையாக ஏற்றுக்கொண்டுதான் இந்நிறுவனம் செயற்படத் தொடங்கியது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஏனைய நலன்விரும்பிகள் வழங்கிய பெருதவியுடன் வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியர் அவர்கள் தலைமையிலமைந்த நெறியாளர் குழுவின் வழிகாட்டலில் செயற்படத்தொடங்கிய இந்நிறுவனமானது 1995 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இடம்பெயர்வுக்கு உள்ளாக்கப்படும்வரை மிகவும் சிறந்த முறையிலேயே இயங்கிவந்தது.

இடமாற்றம் காரணமாக வன்னிக்குச்சென்ற பின்னரும் தன் முயற்சியில் சிறிதும் தழம்பாத வெண்புறா நிறுவனம் இராணுவ நெருக்குவாரங்களுக்கு ஏற்றவாறு வன்னியில் கிளிநொச்சி,



இவர்கள் செய்த குற்றமென்ன?

கோணாவில், உயிலங்குளம் ஆகிய இடங்களில் தற்காலிக தங்குமிடங்களை அமைத்து கிடைக்கக்கூடிய வளங்களைப் பாவித்து தன் பணிகளை வலுவிழந்தோர் மத்தியில் ஆற்றிவந்ததின் காரணமாக தனக்கென ஒரு முத்திரையைப் பொறித்துக்கொள்ள ஏதுவாக அமைந்தது என்பதும் உண்மை. தேவைகள் காரணமாக சகலரும் பயன்பெறக்கூடிய ஒருபொதுவான இடத்தில் இந்த நிறுவனம் இயங்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதனால் அக்காலப்பகுதியில் பொருத்தமான இடமெனக் காணப்பட்ட புதுக்குடியிருப்புக்கு இந்நிறுவனம் மாற்றம் செய்யப்பட்டு, அங்குள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழக வளாகத்தின் ஒரு பகுதியில் நிறுவப்பட்டது. இந் நிகழ்வு வெண்புறா நிறுவனத்தின் துரித வளர்ச்சிக்கும் அதன் சேவைகள் பிரபல்யமடைவதற்கும் மூல காரணமாக அமைந்தது என்பதுடன், வெற்றிப்பாதையை நோக்கி வேகமாக முன்னேறுவதற்கும் ஏதுவாக அமைந்தது. இவ்விதமான வளர்ச்சியின் உந்துசக்தியினால் தனது எதிர்கால விரிவாக்கத்தினை மையமாக வைத்து தனக்கென ஒரு சொந்த வளாகத்தினை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியின் காரணமாகவே புதுக்குடியிருப்பு கைவேலிக் கிராமத்தில் சகல வசதிகளுடன் கூடிய வெண்புறா வளாகம் அமைக்கப்பட்டு சகலரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

நிறுவனத்தின் வளர்ச்சியும் பிரபல்யமும் மேலும் விரிவடைந்தது இக்காலக்கட்டத்தில் தான். பல வெளிநாட்டு நிறுவனங்களும் நலன் பேணும் அமைப்புக்களும் தாமாகவே முன்வந்து தத்தமது பங்களிப்பினை நல்கியதும், நிறுவனச் செய்திகளை பல்வேறு ஊடகங்கள் மூலமாக எல்லா மூலை முடுக்குகளுக்கும் சென்றடையக் கூடியவாறு ஒழுங்கமைத்து செயலாற்றியதும் இதே காலப் போக்கில்தான். இதன் வெளிப்பாடாகவே கண்ணிவெடி விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்வதற்குப் பொருத்தமான ஒரு கருவியாக வெண்புறா நிறுவனம் 2000ஆம் ஆண்டு முதல் காலாண்டுப்பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்டது. பாரிய யுத்த அனர்த்தங்களினால் அவயங்களை இழந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் தன்னிறைவு காண்பதற்குத் திண்டாடிய நிலையில் அதன் காரணிகளைப் பகுத்துணர்ந்து பார்க்கையில் கண்ணிவெடி மற்றும் வெடிபொருள்கள் செறிவும் அவற்றின் தாக்கங்களுமே ஏராளமான அப்பாவி மக்கள் பலியாவதற்கும் அவயவங்களை இழப்பதற்கும் மூலகாரணம் என்பது நிரூபிக்கப்பட்ட நிலையில், இதற்கு மாற்றீடாக வன்னி மக்கள் மத்தியில் கண்ணி வெடி விழிப்புணர்வினை ஊட்டி, அதன் மூலமாக பேரழிவுகளைத் தவிர்க்கலாம் என்ற முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் அடிகோலப்பட்டது. இதன் அடிப்படையில் சிறிய அளவிலும் அக்காலப்பகுதியில் கிடைக்கக்கூடியதாக இருந்த வளங்களைப் பயன்படுத்தியும் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இன்று ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் வியாபித்து நிற்கின்றது.

பரந்த அனுபவமும் நிர்வாகத் திறனும் மிக்க முகாமைக் குழுவினரின் பரிந்துரைகளுக்கேற்ப நிறுவனத்தின் பணிகள் யாவும் உரிய முறையில் பயன் தருமாறு தங்கள் இலக்குகளை நோக்கி பொறுப்புணர்வுடன் செயலாற்றி வெற்றியீட்டிய தொழில்நுட்பவியலாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் இதனால் பெருமையடைகின்றார்கள்.

செயற்கைக்கால் உற்பத்தியானது ஆரம்பத்திலிருந்தே ஜெய்ப்பூர் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மிகவும் இறுக்கமான பொருளாதாரக் கட்டுப்பாடு, தேவைகளுக்கேற்ற மூலப் பொருள்கள் கிடைக்காமை, உள்ளூர் சந்தை விலைகளில் பாரிய அதிகரிப்பு போன்ற காரணிகள் எதிர்நோக்கப்பட்ட போதிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தன்னார்வு நிறுவனங்களின் விடாமுயற்சியின் காரணமாக செயற்கைக் கால் உற்பத்தியினை இயன்றளவு பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான மூலப்பொருள்களை கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் நிறுவனம் பாரிய நிதிநெருக்கடியினைச் சந்தித்துள்ளது என்பதும், உண்மை. 2002 ஆம் ஆண்டின் ஆரம்பம் இவ்வாறான நிர்ப்பந்தங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து மீளக்கூடிய வழிவகைகளை புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் வெளிக்கொணர முடிந்தது. இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்டிருந்த பாரிய தடைகள் கணிசமான அளவு நீக்கப்பட்டமை எமக்குரிய முக்கிய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது. இதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட வேண்டிய ஒரு சில மூலப் பொருள்களை தவிர ஏனையவை இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் தொழில் நுட்பரீதியில் புதுப் புது யுக்திகளை அறிமுகப் படுத்தி செயற்கை உறுப்பு உற்பத்தி பரிமாணத்தில் புதிய அத்தியாயத்தினை அடையவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மனி, இங்கிலாந்து நாட்டுக் கிளைகள் தத்தமது நாடுகளில் நடைமுறையிலிருக்கும் தொழில் நுட்பங்களையும் இயந்திர உபகரணங்களையும் இங்கே கொண்டுவந்து அறிமுகப்படுத்தியதுடன் அதற்குத் தேவையான பயிற்சிகளையும் வெண்புறா தொழில் நுட்பவியலாளருக்கு அளித்துள்ளனர். இந்த வகையில் ஜேர்மனி நாட்டின் தொழில்நுட்பத்தின் மூலமாக கண்ணாடி இளை (Fiber glass) யிலான செயற்கைக் கால்களையும் இங்கிலாந்து நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற தொழில்நுட்ப அறிவினால் பிளாஸ்ரிக் ( polypropylene) செயற்கைக் கால்களையும் தயாரித்து வழங்கக்கூடிய பயிற்சியினை வெண்புறா தொழில் நுட்பவியலாளருக்கு அடைய முடிந்தது நிறுவனத்தின் வளர்ச்சியில் ஒரு பாரிய முன்னேற்றமாகும். யாருக்கு என்ன தேவை என்பதை இனம் காணும் நோக்கில் செயற்கைக் கால்களை மட்டும் தயாரித்து வழங்குவதுடன் நின்று விடாமல் மேலும் தேவைப்படும் உப உறுப்புக்களான முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, ஊன்று கோல், பாதஅணி, கலிப்பர் போன்றவைகளையும் தயாரித்தும் வெளியில் இருந்து தருவித்தும் வலுவிழந்தோர் தேவைகளை இயன்ற அளவுக்கு நிறைவேற்றி வருகின்றது.

இதன்பிரகாரம் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2003ஆம் ஆண்டு வைகாசி மாதம் வரை அதன் உற்பத்திப் புள்ளி விவரங்கள் கீழ்க்காணும் விதத்தில் அமைகின்றது.

| இல. | விவரம் | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | செயற்கைக்கால் | - | 365 | 66 | 61 | 144 | 83 | 167 | 309 | 343 | 120 | 1658 |
| 02. | திருத்த வேலைகள் | - | 1200 | 960 | 630 | 1476 | 1614 | 1730 | 2283 | 1998 | 570 | 12461 |
| 03. | முச்சக்கர வண்டி | - | - | - | 1 | 22 | 30 | 1 | 11 | 30 | - | 95 |
| 04. | சக்கர நாற்காலி | - | - | - | - | 4 | 1 | - | 11 | 85 | - | 101 |
| 05. | ஊன்று கோல் | - | - | - | - | - | - | - | 106 | 189 | - | 295 |
| 06. | பாத அணி | - | - | - | - | - | - | - | 55 | 156 | 71 | 282 |
| 07. | கலிப்பர் | - | - | - | - | - | - | - | - | 11 | - | 11 |

பாதிப்புற்றவர்களுக்கு செயற்கை உறுப்புக்களை வழங்குவதுடன் அவர்களின் எதிர்காலம் நம்பிக்கை உடையதாக அமையவேண்டும் என்பதிலும் வெண்புறா நிறுவனம் உறுதியுடன் செயலாற்றி வருகின்றது. பாதிப்படைவதற்கு முன்னர் அவர்கள் செய்துவந்த தொழிலை மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளனவா, அவர்கள் மாற்றீடாக வேறு முயற்சிகளையும் தொழில்சார் பயிற்சிகளையும் வழங்குவதன் மூலமாக அவர்களின் எதிர்காலத்தில் நம்பிக்கையை உருவாக்க முடியுமா என்பதை ஆராய்ந்து அவரவருக்கு ஏற்றவகையில் குடும்ப வருமானத்தினை அதிகரிக்கும் வகையில் சிறிய அளவிலான வியாபாரம், நன்னீர் மீன்பிடிப்பு, சைக்கிள் திருத்தகம் என்பனவற்றுடன் பல்வேறுபட்ட வருமான அதிகரிப்புத் திட்டங்களையும் தொழில்சார் பயிற்சிகளையும் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

## வெண்புறா யாழ் கிளை.

இக்கிளை 05.12.2003இல் சுண்டுக்குளி, இல. 13, சோமசுந்தரம் வீதி என்னும் முகவரியில் திறக்கப்பட்டுள்ளது. செயற்கை உறுப்புக்கள் தயாரிக்கும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இப்பணிகளுக்குரிய உபகரணங்கள், மூலப்பொருள்கள் மற்றும் ஆளணியினர் இல்லாமையே செயற்கை உறுப்புத் தயாரிப்பினை ஆரம்பிக்க முடியாமைக்கான முக்கிய காரணியாகும். இக்கட்டடம் திறக்கப்பட்ட அன்று 2 சக்கரநாற்காலிகள் வலுவிழந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. கிளையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிர்வாக அலுவலர், இணைப்பாளர், இலிகிதர், பராமரிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக யுனிசெவ் நிறுவனத்துடன் ரூபா 17,73,500 பெறுமதியான வேலைத்திட்டமொன்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 9,42,000 நிதியாகவும் மிகுதி உபகரணங்களாகவும் கிடைக்கவுள்ளது. விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 10 பணியாளர்களுக்கு அத்துறையில் 10 நாள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களில் மூவர் பல்றா நிறுவனத்தினால் கண்ணிவெடி விழிப்புணர்வுக்கென வடிவமைக்கப்பட்ட ஐந்து பயிற்சி வகுப்புகளில் இரண்டு பயிற்சி வகுப்புகளை நிறைவு செய்துள்ளனர். தொடர்பாடல் வசதிகளுக்காக 021-2225932 இலக்கமுடைய தொலைபேசி இணைப்பு பொருத்தப்பட்டுள்ளது.


இந்த முச்சக்கரவண்டிகள் யாருக்காக காத்திருக்கின்றன?

# கண்ணிவெடி அகற்றும் பணி திருகோணமலையிலும் ஆரம்பம்!

திருகோணமலை,செப்.7

திருகோணமலை மாவட்டத்தில் புதைகப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

முதற்கட்டமாக இந்தப் பணிகள் எல்லைப்புறக் கிராமமான குச்சவெளியில் ஆரம்பமாகியுள்ளன. டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் தலைமையில் இடம்பெற்றுவரும் இந்தப் பணிகளில் உள்ளூரைச் சேர்ந்த 30 இளைஞர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் வாழும் மக்களுக்கு மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ-4)

# தனியார் பஸ் உரிமையாளர் ஆர்ப்பாட்டம் நடத்த முஸ்தீவு

கொழும்பு,செப்.7

மாகாண போக்குவரத்து அதிகார சபைகள், தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு மற்றும் பொலீஸாரின் கெடுபிடிகளை எதிர்த்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எதிர்வரும 11ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் மூவாயிரம் பஸ் உரிமையாளர்கள் கலந்துகொள்வர் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிக்கின்றது.

வழித்தடை அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 125 சதவீதத்தால் அதிகரித்தமை, கால அட்டவணைக் கட்டணத்தை அதிகரித்தமை, முறையற்ற வகையில் பொலீஸார் அபராதம் விதிக்கின்றமை போன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிக்கின்றது.


## கிறிஸ்தவ ஊழியப் பயிலகம்

**இடம் :** சீயோன் தேவாலயம்,
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**காலம் :** 15.09.2003 முதல் 19.09.2003 வரை.

**நேரம் :** காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை

**விரிவுரையாளர் :** போதகர் பரி சில்வர்பக் குழுவினர்
(சர்வதேச கிறிஸ்டியன் றிவைவல் குருசேட்)

**குறிப்பு :**

★ 5 நாள்களும் பங்குபற்றுபவர்களுக்கு சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.
★ கிறிஸ்தவ சபைகளில் ஊழியத்தில் ஈடுபடுவோர் பங்கு கொள்ளலாம்.
★ 200 பேர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.
★ தனிப்பட்ட அழைப்பு கொடுக்கப்படமாட்டாது.

பதிவுக்கட்டணம் : ரூபா 75/=
(பதிவுசெய்தோர் இக்கட்டணத்தை 15ஆம் திகதி காலை சீயோன் தேவாலயத்தில் செலுத்தலாம்)

பதிவுசெய்யும் கடைசித் திகதி : 12.09.2003.
(உங்கள் பெயர்களை நேரடியாகவோ கடித மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியில் பதிவுசெய்யலாம்.)

**போதகர் சீயோன் தேவாலயம்,**
29, ஆசீர்வாதம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**போதகர் J.K.பிலிப்**
(சீயோன் தேவாலயம்)

(22197) (21-11-18)



## திருமண மங்கல வாழ்த்து




வியாபாரி மூலை சந்தி,
பருத்தித்துறை.
தகவல் : த.பாஸ்கரன்

திரு.திருமதி டேவிற் தம்பதியரின் புதல்வன்
**திருவளர் செல்வன் செந்தூரன்** அவர்களுக்கும்
திரு.திருமதி தவபாலநாதன் தம்பதியரின் புதல்வி
**திருவளர் செல்வி இராஜகுமாரி (உதயா)**
அவர்களுக்கும் இன்று (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை மங்களகரமாக ஜேர்மனியில் (Ratingen) திருமணம் நடைபெறுகின்றது. இல்லற வாழ்வில் இணையும் புதுமணத்தம்பதிகள் ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்று

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருவாக்குக்கிணங்க பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றோம்.

பாஸ்கரன் அண்ணா,
திரு.தவபாலநாதன் குடும்பத்தினர்,
திரு.சங்கர் குடும்பத்தினர்
திரு.திருமதி கமல் கீதா குடும்பத்தினர்
சுரேன் அண்ணா, சித்தப்பாமார், அன்ரிமார் குடும்பத்தினர், மாமாமார், அத்தைமார், பெறாமக்கள்மார். சகோதரன் கௌரிகரன், சகோதரி வத்சலா, தர்சி, வித்தியா, சுதா, சிவா, சூரி அம்மம்மா ஆகியோர்.



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## செப்ரெம்பர் 01 தொடக்கம் 07 வரை

## மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு

உடல் அங்கங்களை ஊனமாக்கக்கூடிய விபத்துக்கள், மறக்கமுடியாத மனப்பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்ற ஓர் அனுபவமாக அனைவருக்கும் மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட விபத்துக்களின் விளைவாக பழைய தொழிலை தொடர முடியாத நிலை, கல்வி கற்கும் சிறுவர்களாயின் கல்வியை தொடர்வதில் உள்ள பிரச்சினைகள், போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகள், பாரபட்சமாக நடத்தப்படும் நிலை, மருத்துவ, ஏனைய செலவீனங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளும், தடைகளும் உருவாகின்றன. வாழ்க்கையானது சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது.

இப்படிப்பட்ட வாழ்க்கையையே மாற்றி அமைக்கக்கூடிய விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளைவுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் கவலைப்பட்டுக்கொண்டு இருக்கலாம். ஆனால், அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் இவ்வகையான பாதிப்புக்குள்ளானோரின் புனர்வாழ்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கமும் பலஉள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் உடல் ஊனமுற்றோருக்கான, அதிலும் குறிப்பாக மிதிவெடி, வெடிபொருள்களினால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த வகையில் மிதிவெடிப்பாதிப்புக்குட்பட்ட ஒருநபர் அல்லது அவரது குடும்பம்

1) **உடல் ரீதியான இழப்புக்களுக்கான மருத்துவ, ஏனைய உதவிகளையும்**
2) **உளரீதியான தாக்கங்களுக்கு தேவையான ஆலோசனைகளையும்**
3) **பொருளாதார ரீதியான இழப்புக்களை ஈடுசெய்ய கடன் அடிப்படையில் நிதி உதவிகளையும்**

இப் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளமுடியும்.

மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருள்களினால் அங்க அல்லது வேறு உடல் ரீதியான இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் உடற்பயிற்சி, செயற்கைக் கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கொம்பு (Crutches) போன்ற சேவைகள், உதவிகளை
ஜெய்ப்பூர் செயற்கை கால் தொழிலகம் (Jaipur Foot),
ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம் (Arod),
குடும்ப புனர்வாழ்வு நிலையம் (Frc) ஆகிய நிறுவனங்களை அணுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

உளரீதியான தாக்கங்களுக்கான ஆலோசனை சேவைகளை சாந்திகம் (Shanthiham), ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (Arod), குடும்ப புனர்வாழ்வு நிலையம் (Frc), ஜெய்ப்பூர் செயற்க்கைகால் தொழிலகம் போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. மேலும் சுயதொழில் வாய்ப்புக்கான கடன் உதவிகளை சர்வோதயம் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் (Arod) ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகம் ஆகிய நிறுவனங்களை அணுகுவதன் மூலம் பெற்று பயனடையமுடியும் இவை தவிர பாடசாலை செல்லும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை செல்லும் சிறுவர்கள் ஆகியோருக்கான கல்வி தொடர்பான நிதி உதவிகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (Arod), சர்வோதயம், ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகம் (Jaipur Foot) போன்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள், ஒருநபர் அல்லது அவரது குடும்பம் விபத்தை சந்தித்ததில் இருந்து அந்நபரை அல்லது அவரது குடும்பத்தை மீண்டும் சமூகத்தில் பழைய நிலைக்குக் கொண்டுவரும் வரையான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இப்புனர்வாழ்வு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகமிக அவசியமாகின்றது.

"மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் யாழ்ப்பாணம்"


**DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(21-15-19) (அ.ச.29881)

# பிள்ளையின் குறும்பு கள்ளங் கபடமற்றது...

64 வருடகால நம்பிக்கை



பிள்ளை அரிச்சுவட்டின் முதலெழுத்தை நிதானமாக எழுதுகின்ற போதிலும், எதிர்காலம் என்பது தான் முகங் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு என்ற யதார்த்தத்தை பிள்ளை அறிந்திருப்பதில்லை. எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக் கொடுப்பதற்காக நம் நாட்டுப் பிள்ளைகளின் சார்பில் நாம் மிகப் பெரிய பணியை நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

- சாதாரண சேமிப்புகளை விட 1% கூடுதல் வட்டி
- பாதுகாவலர் மரணமடைந்தால் அல்லது முற்றாக ஊனமடைந்தால் பிள்ளைக்கு ஆகக் கூடிய காப்புறுதித் தொகையான ரூ.500,000 வரை காப்புறுதி நஷ்டஈடாகக் கிடைக்கும்.
- வருடம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்தியடைந்தவர்களுக்கு ரூ.10,000 புலமைப்பரிசில் கொடுப்பனவு
- பிள்ளைக்கு ஆகக் கூடியது ரூ.75,000 ஆஸ்பத்திரி செலவுக்கான காப்புறுதி
- மேலும் பல பணப்பரிசுகளும் நன்மைகளும்

இதனால் தான் குறும்புக்காரப் பிள்ளைகள் "அ" எழுதும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்கள் "ரன் கெகுளு" பிள்ளைகள் சேமிப்பு ஒன்றை ஆரம்பிக்கிறார்கள்.

ரன் கெகுளு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

அரசினர் வைத்தியசாலையில் டாக்டராக வேலை செய்யும், 32 வயது நிரம்பிய, இடதுகால் பெலவீனமுடைய மகனுக்கு பெற்றோர் 25-31 வயதுக்கு உட்பட்ட கௌரவ குடும்பப்பெண்ணை எதிர்பார்க்கிறார்கள். குடும்ப விரங்கள், சாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.2020, C/o உதயன், யாழ்ப்பாணம். (22202)

யாழ். இந்து கௌரவ குடும்பத்து, PHI புலமைப்பரிசிலில் ஆறு மாத பயிற்சிக்கு LONDON செல்லவுள்ள மணமகனுக்கு 23 வயதுக்குட்பட்ட, அழகான மணப்பெண் தேவை. தொழிலுள்ளவருக்கு முன்னுரிமையுண்டு. தொடர்பு:- விள.இல. 2022, C/o உதயன். • (22251)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்து, 1965 கனடாவில் வீடுள்ள கணக்காளருக்கு கனடா செல்ல விரும்பும் கல்வியுள்ள மணமகனும் (இரட்டையர் சகோதரர்) 1965 வலிகாமம் வர்த்தகருக்கும் அழகான மணப்பெண் தேவை. (மாற்றாகவோ/தனியாகவோ) ஜாதகம் முழு விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விள.இல. 2021, C/o உதயன்.(22252)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நெதர்லாந்தில் வசிக்கும் 1976, புநர்பூசம், 2ஆம் பாதம், கிரகபாவம் 23 உடைய மணமகனுகும், 1980, சதயம், 2ஆம் பாதம், கிரகபாவம் 26 3/4 மணமகளுக்கு வெளிநாட்டு மணமகனும் தேவை. தொடர்பு:- விள.இல. 2025, C/o உதயன்.(22268)

கௌரவ குடும்ப படித்த, அழகான, 33 வயது மணமகளுக்கு வெளிநாட்டு மணமகனும் யாழ்ப்பாணத்தில் சொநதமாக கடைவைத்திருக்கும் 42 வயது மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட சுத்தபோசனமுள்ள மணமகளும் தேவை. தொடர்பு: விளம்பர இல.2016, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (22153)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லையுள் பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுள் 5000 சதுர அடி பரப்பில் 6 படுக்கை அறைகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தனியார் பாவனைக்கோ, உல்லாசப் பயணிகள் விடுதியாகவோ அல்லது வேறும் பல வர்த்தக நோக்கத்திற்காகவோ பாவிக்க உகந்தது. தொடர்பு: 077-6154263. (22266)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் அமைந்துள்ள மாடி வீடொன்று விற்பனைக்குண்டு. வியாபாரத்திற்கு, காரியாலயத்திற்கு வசதியான இடம். தொடர்பு: 0777-276636. (22320)

## நாய்க்குட்டிகள விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முததிரைச் சந்தையடி, நல்லூர். (22254)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Rose Bus (4DRS எஞ்சின்) விற்பனைக்குண்டு. விலை 23/4 லட்சம். தொடர்பு:- 070-212878, 074 510430. (22276)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.(22263)

## புறொயிலா விற்பனைக்கு

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (22310)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், Tetra Brown தடுப்பு மருந்து போட்ட சேவல் குஞ்சுகள் 15.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவுசெய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22224)

## தவறிவிட்டது

தெணியம்பை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆனந்தவேல் ரதன் என்பவருடைய தே.அ.அ (இல. 833031546V), விசேட அ. அ.மற்றும் ஆவணங்களுடன் பேர்ஸ் வல்வெட்டிததுறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (20301)

அரியரட்ணம் நிஜாந்தினி என்பவருடைய தே.அ.அ இல. (807601601V), கைப்பையும் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் (01.09.03) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவாகள் துர்க்கா ரேடர்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22295)

இல. 408, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரனிஸலோஸ ஜோர்ஜ் கின்ஸ்ரன் என்பவருடைய கடவுச்சீட்டு (இல.M 2263218), B Card (A7538625/A8167533) Return Ticket என்பன 02.09.2003 அன்று கொழும்பிலிருந்து யாழ்.வரும் போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரிக்கு தகவல் தரவும். T.P. 3462. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22311)

### இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. இலவசமாக சுத்தம்செய்து தரப்படும். 24 மணிநேர சேவை.

தொடர்பு: ரவி, (தபால்கந்தோர் அருகில்) சாவகச்சேரி,
ரவி உணவகம்,
தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
(C/30024) (21-15-18)

### தேவை

புடைவைக் கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவம்வாய்ந்தவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
அங்கிலியன் ரெக்ஸ்ரைல்ஸ்,
55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(22307) (26-15-18)

### பெயின்ரிங், வயறிங், பைப் லைனிங் வேலைகள் நல்லமுறையில் செய்ய வேண்டுமா?

உடன் நாடுங்கள்:
வி.றெஜி,
57/2, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.
(தபாற்கந்தோருக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(22290) (21-15-18)

### கடை வாடகைக்கு

K.K.S. வீதி (ஜெட்மோட்டஸ் அருகில்), சுன்னாகம் வடக்கில் மின்சார வசதியுடன் கூடிய கடையொன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
K.தம்பி
(மோட்டார் சைக்கிள் திருத்தும் இடம்)
K.K.S. வீதி, சுன்னாகம் வடக்கு.
T.P. 222 3568
222 3569
(21-15-18) (22307)

## நெறியாளர் குழுவின் தலைவராக தெரிவு

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுவின் தலைவராக எம்.கதிர்காமநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நெறியாளர் குழுவின் உறுப்பினராக நீண்டகாலப் பணியாற்றிய இவர், தற்சமயம் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் நிர்வாக அதிகாரியாகக் கடமை புரிகின்றார்.

(எ-3)

### கடை வாடகைக்கு

யாழ். நகர் கடைத்தெருவில் கடைத் தொகுதிகள் அமைந்த ஸ்ரான்லி வீதியில் வியாபார மிக்க பகுதியில் அமைந்த கீழ்க்கடையும் அதன் மேல்கடையும் இண்டும் முறையே 900+900 நீள்சதுர அடியுள்ளவை. வியாபாரத்துக்கு அல்லது அலுவலகங்களுக்கும் ஏற்றது உடன் வாடகைக்குண்டு. சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விள.இல. 2024,
மே.பா உதயன்.
(22259) (21-15-18)

### காணவில்லை

நேர்கொம்பு, பட்டியார்த்த கொம்பு, வ.க. குறியையும், மாவெள்ளை, கறுப்பு நிறத்தையும் உடைய இரண்டு காளை மாடுகள் 04.09.2003 வியாழக்கிழமை முதல் காணவில்லை. இது பற்றிய தகவல்களைத் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- சி.தவராசா
(டிராக்டர்-தம்பி)
புதிய செம்மணி வீதி.
வயல்வெளிக் கந்தசாமி கோயிலடி.
(21-15-18) T.P. 077-6042901 (22297)

### வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி லொறி இல.42/3568 திருத்தத்திற்கான கேள்வி விண்ணப்பம்

மேற்படி எமது சங்க லொறிக்கு பின்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கேள்வி விண்ணப்பங்கள் மேற்படி சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் எதிர்வரும் 20.09.2003 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் *"பொது முகாமையாளர் வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி"* என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பதுடன் விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறி திருத்தத்திற்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். லொறியைப் பார்வையிட விரும்புவோர் கந்தோர் கடமை நேரங்களில் பார்வையிடலாம். திருத்த வேலை விவரம்

1. எஞ்சின் வேலை
2. ரீங்கர் வேலை
3. வயரிங் வேலை
4. உடற்கோப்பு மாற்றியமைத்தல்

– பதில் பொது முகாமையாளர்.

நீர்வேலி,
2003.09.06

(c/30038) (25-15-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சங்கத்தின் சக ஊழியரான
திரு.ஞா.யோகராஜா அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்
வேலன் ஞானப்பிரகாசம்
(பிள்ளையான்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
சக ஊழியர்கள்,
வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர்
சங்கக் கிளை - நல்லூர்.

(22309) (25-15-18)


PRIMA PRIMA

## மங்களகரமான புதுக்கடை திறப்புவிழா

எமது வடமராட்சி வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உங்கள் நன்மை கருதி பிரதான வீதி, பருத்தித்துறையில் எமது கிளை 08/09/2003 திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும். உங்களுக்குத் தேவையான PRIMA கோழித்தீன், கால் நடை மருந்துகள், கோழித்தீன் பாத்திரங்கள், PRIMA கோழிக்குஞ்சுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு

08-10/09/2003 வரை மட்டும் 5% விலைக்கழிவுடன் PRIMA கோழித்தீன்கள் விற்கப்படும்


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

PRIMA
Authorised dealer:
Ceylon Grain Elevators Ltd.


Nallur Farm Centre
(பருத்தித்துறை கிளை)
பிரதான வீதி,
பருத்தித்துறை,

(22306) (11-14)





உலகப் புகழ் பெற்ற L.G
சலவை இயந்திரங்கள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
Digitally Yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(c/26637)

# பெற்றோலிய விலை வீழ்ச்சிக்கேற்ப இலங்கையிலும் விலை நிர்ணயிக்க வேண்டும்!

**பெற்றோலியப் பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்வது தொடர்பாக தற்போதைய அரசு கடைப்பிடித்துவரும் நடைமுறை சரியான வகையில் மேற்கொள்ளப்படுவதில்லையென தரவுகள் மூலம் விளககுகிறார் பேராசிரியர் ஜகத் விக்கிரமசிங்க. 'லங்காதீப' நாளிதழில் வெளிவந்த அவரது கட்டுரையின் தமிழாக்கம் இது.**

உலக வரலாற்றில் பெற்றோலியப் பொருள்களே பல செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. அண்மையில் இடம்பெற்ற ஈராக்கிய யுத்தமும் இப்பெற்றோலியம் காரணமாகவே இடம்பெற்றது. அவ்வாறே ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கும் இப்பெற்றோலிய எண்ணெயே காரணமாயிற்று. வியட்நாம் யுத்தத்தை அமெரிக்கா நீண்டகாலத்துக்கு இழுத்துச்செல்ல நேரிட்டமைக்கும் பெற்றோலிய உற்பத்திப் பொருள்களே காரணமாகும். பிலிப்பைன்ஸின் பாலித்தீவில் இடம்பெற்ற பிரச்சினை கூட இப்பெற்றோலியப் பொருள்களுடன் தொடர்புடையதே. 1962ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் பெற்றோலிய பொருள்களின் வர்த்தகம் 'கால்ரெக்ஸ்', 'செல்', 'மோபில்' மற்றும் 'எஸ்ஸோ' ஆகிய நான்கு வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களின் கைகளிலேயே இருந்தது. அக்காலத்தில் எந்தவொரு நாடும் தமது நாட்டிலுள்ள பிறநாட்டு நிறுவனங்களின் சொத்துக்களை நஷ்டஈடு செலுத்தாமல் சுவீகரிக்கக் கூடாதெனவும், அவ்விதம் சுவீகரித்தால் அந்த நாட்டின் மீது (சுவீகரித்த நாட்டின் மீது) வர்த்தகத் தடையை கொண்டுவர வேண்டுமெனவும், அமெரிக்கா உட்பட்ட வளர்ந்த நாடுகள் தமக்குள் சர்வதேச ரீதியிலான ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இணங்கியிருந்தன.

ஆனால், 1962இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு அவ்வெளிநாட்டு நிறுவனங்களால் ஸ்ரீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட எண்ணெய் வர்த்தகத்தை தேசியமயமாக்கியது. உலக வரலாற்றில் முதற்றடவையாக அவ்வகையான நடவடிக்கையை ஸ்ரீமாவோவின் அரசே மேற்கொண்டது. அதனால் அமெரிக்கா உட்பட்ட வளர்ந்த நாடுகள் முதற்றடவையாக இலங்கைக்கு எதிராக தடை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தின. அதாவது, இலங்கைக்கு எதிராக வர்த்தகத் தடையை விதித்தனர். அதன்படி உலக வரலாற்றில் பெற்றோலிய உற்பத்திப் பொருள்களுக்கிருந்த முக்கியத்துவத்தை உணரமுடியும்.

**வீயெஸ்ரீ**

அமெரிக்கா மேற்கொண்ட மதிப்பீட்டின்படி 2015ஆம் ஆண்டின் பின்னர் அந்நாட்டின் பெற்றோலிய உற்பத்திப் பொருள்களின் தேவை தற்போதைய அளவைவிட இரண்டரை மடங்காக அதிகரிக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தனது எதிர்காலத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கிலேயே அண்மையில் ஈராக்மீது போர் தொடுத்தது. ஈராக்கில் தமது நாட்டுக்கு ஆதரவான நிர்வாகத்தை உருவாக்குவதன் மூலம் தனது எதிர்பார்ப்பை நிறைவேற்றிக்கொள்வதே அமெரிக்காவின் நோக்கமாகும். உலகத்தில் ஈராக்கினால் மட்டுமே குறைந்த விலையில் விற்பனை செய்யக்கூடிய விதத்தில் பெற்றோல் உற்பத்தி செய்ய முடிகிறது. ஈராக்கினால் பெற்றோலிய உற்பத்திக்குச் செலவிடப்படும் தொகை, சவூதி அரேபியா அதற்காகச் செலவிடும் தொகையைவிட மிகக்குறைவானதாகும். அந்தவகையில் 'பொஸ்பேட்' குறைந்த அளவில் காணப்படும் நல்ல தரமுள்ள எண்ணெயை உற்பத்தி செய்வது ஈராக் நாடாகும். அமெரிக்கா இதன் காரணமாகவே ஈராக் நாட்டின்மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டது.

இப்பெற்றோலியப் பொருள்களில் இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுமக்களின் பாவனையில் டீசலும் மண்ணெண்ணெயுமே முக்கிய இடம் வகிக்கின்றன. எமது உடலில் ஓடும் இரத்தத்துக்குச் சமமான முக்கியத்துவம் நம்நாட்டுப் பொதுமக்களின் பொருளாதார மற்றும் சாதாரண வாழ்க்கையில் டீசலுக்கும் மண்ணெண்ணெய்க்கும் வழங்கப்படுகிறது. விவசாயம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, ஆடைதயாரிப்புத் தொழில் உட்பட தொழில் முயற்சிகளுக்குமன்றி, பொருள்களை எடுத்துச்செல்லுதல் சாதாரண பொதுமக்களது போக்குவரத்து நடவடிக்கைகளுக்கும் மற்றும் மின் உற்பத்திக்கும் டீசல் மிக அத்தியாவசியமானதாகும். அந்தவகையில் நோக்குமிடத்து சகல உற்பத்தி முயற்சிகளிலும், அவற்றின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் 'டீசல்' முக்கிய பங்கு வகிக்கிறது.

வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் பொதுமக்களின் பாவனைக்கு மண்ணெண்ணெய் அவசியமானதாகும். வீட்டுக்கு விளக்கேற்றவும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்கும் சில வேளைகளில் சமையல் வேலைக்கும் அவர்கள் மண்ணெண்ணெயையே உபயோகிக்கின்றனர்.

கடந்த காலங்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய்க்கு மானியமளித்து அதில் ஏற்படும் நஷ்டத்தை பெற்றோலின் விலை நிர்ணயத்தின் மூலம் ஈடுசெய்து கொள்ளும் நடைமுறை கைக்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போதைய அரசு பதவியேற்றதையடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆயிரத்து 800 கோடி ரூபா நஷ்டத்துடன் இயங்குவதாக அமைச்சர்கள் கூறினர். மோசடி, ஊழல், சீர்கேடான நிர்வாகம் மற்றும் தேவைக்கு மேற்பட்ட ஆளணி ஆகியவை காரணமாக கூட்டுத்தாபனம் அவ்வித நஷ்டத்தை அடைய நேர்ந்ததென அவர்கள் குற்றம் சுமத்தினர். அக்குற்றச்சாட்டுக்களில் உண்மையும் இருக்கக்கூடும். ஆனால், அன்றைய நடைமுறையில் இருந்த சிறப்பானதோர் அச்சம் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கு வழங்கும் மானியத்தின் மூலம் எதிர்கொள்ளும் நஷ்டத்தை பெற்றோலின் விலையை நிர்ணயிப்பதன் மூலம் ஈடுசெய்து கொண்டதாகும். டீசல் போன்றவற்றுக்கு மானியம் வழங்கியதால் நம் நாட்டின் ஏற்றுமதி வாய்ப்புக்களில் வளர்ச்சி காணப்பட்டது. குறிப்பிட்டதொரு பொருளை வேறு நாடுகளில் உற்பத்தி செய்ய ஏற்படும் செலவிலும் பார்க்கக் குறைந்த உற்பத்திச் செலவுடன் உற்பத்தி செய்யக் கூடிய வசதிகளையே ஏற்றுமதி வாய்ப்புக்கள் எனக் குறிப்பிடலாம். இதன் காரணமாகவே 1970 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் நம் நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் பெரும் கிராக்கி நிலவியதெனலாம்.

ஆனால், தற்போதைய அரசு பதவியேற்றதன் பின்னர் உலக சந்தையில் எண்ணெய் விலையின் ஏற்ற இறக்கத்தை அனுசரித்து நம் நாட்டினுள்ளும் எண்ணெய் விலையைக் கூட்டவும் குறைக்கவும் புதிய நடைமுறையை அனுசரிப்பதென வாக்குறுதி வழங்கியது. ஆனால், அவ்வாக்குறுதி சரியான விதத்தில் கடைப்பிடிக்கப்படவில்லையென்பதை இப்போது பொதுமக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

உண்மையில் அந்நடைமுறை தவறான விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் (கொழும்பில்) 51 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோல் ஏப்ரல் மாதத்தில் 54 ரூபாவாக உயர்ந்தது இதற்கு சிறந்த தோர் உதாரணமாகும். அண்மைய வரலாற்றில் உலகச் சந்தையில் எண்ணெய் விலை பெரிய அளவில் அதிகரித்தது இவ்வாண்டின் மார்ச் மாதத்திலேயேயாகும். வெனிசூலாவில் இடம்பெற்ற வேலை நிறுத்தம் மற்றும் உள்நாட்டு இனப்பிரச்சினைகள் என்பன காரணமாக அந்நாட்டின் எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதுடன், ஈராக் யுத்தம் காரணமாக ஈராக் நாட்டின் எண்ணெய் உற்பத்தியிலும் வீழ்ச்சி காணப்பட்டது. இவை பெற்றோலிய விலை உயர்வுக்குக்காரணமாகும்.

உலகத்தில் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை 29 ஆகும். இவற்றில் 'ஒபெக்' அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 13 நாடுகளும் அவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்காத 16 நாடுகளும அடங்கியுள்ளன. அந்தந்த நாடுகளில் உற்பத்தியாகும் எண்ணெயின் தரம் மற்றும் சக்தித்திறன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே விலைகளில் வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக 'ஒபெக்' அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தோனேஷிய நாட்டின் எண்ணெய் விலை குறைவானதாகவும் சவூதி அரேபிய நாட்டின் எண்ணெய் விலை மிகக் கூடியதாகவும் உள்ளது. அதேபோன்று 'ஒபெக்' அமைப்பில் அங்கத்துவம் வகிக்காத எண்ணெய் உற்பத்தி நாடுகளில் கனடா நாட்டு எண்ணெய் விலை குறைந்ததாகவும், சீன நாட்டின் எண்ணெய் விலை கூடியதாகவும் உள்ளது. இந்த எண்ணெய் உற்பத்தி செய்யும் 29 நாடுகளின் விலைகளின் சாரசரித் தொகையே உலக சநதையின் எண்ணெய் விலையாகக் கொள்ளப்படுகிறது.

இந்தவகையில் இவ்வருடம் மார்ச் மாத முற்பகுதியில் உலக சந்தையில் சுத்திகரிக்கப்படாத ஒரு பரல் எண்ணெய் விலை 34.15 அமெரிக்க டொலராகவிருந்தது. ஆனால், இவ்வாண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதியளவில் இவ்விலை 29.03 அமெரிக்க டொலராக இருந்தது. எவ்வாறாயினும் இவ்வாண்டு மே மாதம் 5ஆம் திகதியளவில் இவ்விலை 23.05 அமெரிக்க டொலராக வீழ்ச்சி அடைந்தது. இதுவே இவ்வருட ஆரம்ப முதல் இதுவரையிலான ஆகக்குறைந்த விலையாகக் காணப்படுகிறது.

இவ்வாண்டு மார்ச் மாத முற்பகுதியில் 34.15 அமெரிக்க டொலராக இருந்த ஒரு பரல் சுத்திகரிக்கப்படாத மசகெண்ணெய் விலை இவ்வாண்டு மே மாத முற்பகுதியில் 23.05 அமெரிக்க டொலருக்கு வீழ்ச்சியடைந்தமையால் அமெரிக்கா தனது நாட்டில் ஒரு கலன் பெற்றோலின் விலையை 2 அமெரிக்க டொலர்களால் குறைத்துள்ளதாக சர்வதேச கணனித் தொடர்பு இணையத் தளம் தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் அமெரிக்காவில் ஒரு கலன் பெற்றோலின் விலை மார்ச் முதல்-மே மாத வரையிலான இடைவெளியில் 1.93 அமெரிக்க டொலரிலிருந்து 1.73 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளது. ஒரு அமெரிகக டொலரின் பெறுமதி இலங்கையில் சுமார் 98 ரூபாவுக்குச் சமமானதெனக் கொண்டால் அமெரிக்க டொலரின் 20 சதவீத இலங்கை நாணயத்தில் 19 ரூபா 60 சதமாகும்.

இன்று நம் நாட்டில் ஒரு லீற்றர் பெற்றோல் 54 ரூபாவாக விற்கப்படுகிறது. ஒரு கலன் என்பது 4.5 லீற்றருக்குச் சமமானது. அதன்படி நம் நாட்டு நாணயப் பெறுமதிப்படி ஒரு கலன் பெற்றோலின் விலை 243 ரூபாவாகும். ஆனால், அமெரிக்காவில் ஒரு கலன் பெற்றோலின் விலை

**மாற்றார் தோட்டத்திலிருந்து...**

ஸ்ரீலங்கா நாணயத்தில் 169 ரூபா 54 சதமாகும். இக்கணக்கின்படி பெற்றோல் அமெரிக்க விலையை விட இலங்கை விலையில் 43 சத விகிதம் அதிகரித்துள்ளதாகக் கூறமுடியும்.

அமெரிக்காவில் தனி மனித ஆண்டு வருமானம் 25ஆயிரம் டொலா வரையாகும். அதேவேளை, இலங்கையில் தனிமனித ஆண்டு வருமானம் 800 டொலர் வரையாகும். அவ்வாறிருக்கையில் இலங்கை அரசு பெற்றோலிய எண்ணெயின் விலையைக் குறைக்காததேன்? அமெரிக்கா எண்ணெய் விலையைக் குறைத்திருக்கும்போது ஏன் இலங்கை அரசால் அதனைச் செய்ய முடியாதுள்ளது? உலக சந்தையில் எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், பாவனையாளர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்க ஏன் இலங்கையரசால் முடியவில்லை?

எண்ணெய் விலையைக் குறைக்காதிருப்பது மிகவும் ஆபத்தானது. டீசல் விலை உயர்ந்ததொரு மட்டத்தில் பேணப்பட்டு வருவதால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் வெளிநாடுகளில் எமது நாட்டு உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த சாதகமான வாய்ப்பு நிலை அற்றுப்போக இடமேற்படுகின்றது. அதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் வழி ரூபாவின் பெறுமதிக் குறைப்பாகும். நாம் இப்போது செய்யக் கூடியது நமது உற்பத்திகளுக்கான செலவினங்களைக் கட்டுப்படுத்துவதா? அல்லது ரூபாவின் பெறுமதியைக் குறைப்பதா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும். செலவீனங்கள் உயர்வடைவதால் உற்பத்திப் பொருள்களின் விலையிலும் உயர்ச்சி ஏற்படும். தேயிலை மற்றும் ஆடைத்தயாரிப்புத் துறைகள் இதற்கான சிறந்த இரு உதாரணங்களாகும். எனவே, ஏற்றுமதியாளர்கள் தமது உற்பத்திச் செலவு உயர்ச்சியடைவதால் தாம் எதிர்பார்க்கும் சந்தை வாய்ப்புக்களை இழக்க நேரிடுவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். அவ்வித சந்தர்ப்பத்தில் ஒப்பீட்டு ரீதியில் சந்தை வாய்ப்பு நிலையை பேணும் நோக்கில் மத்திய வங்கி ரூபாவின் பெறுமதியில் மேலும் குறைப்பை மேற்கொள்ள முயல்வதுண்டு. அதனால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் தேசிய விலை உயர்வடைவதால் வாழ்க்கைச் செலவுகள் மேன்மேலும் அதிகரிக்கும். ரூபாவின் மதிப்பைக் குறைப்பது ஏற்றுமதி வர்த்தக முயற்சிக்கு சிறப்பானதாயினும், இறக்குமதி விடயத்தில் பாதிப்பையளிக்கும்.

அத்துடன், இன்று நாட்டில் பயன்படுத்தப்படும் உணவுப் பொருள்களில் 80 சதவீதமானவை இறக்குமதிமூலம் பெறப்படுபவையாகும். இவ் விடயங்கள் யாவற்றையும் அலசி ஆராயுமிடத்து பெற்றோலியப் பொருள்கள் விடயத்தில் அரசு கடைப்பிடிக்கும் நடைமுறை காரணமாக சிக்கல்களும் குழப்பங்களும் உருவாக்க இடமுண்டு.

எனவே, எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் வேளையில் தற்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை குறித்து அரசு மீண்டுமொரு தடவை ஆலோசித்து முடிவு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். உலக சந்தையில் எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் கிடைக்கும் பிரதிபலனை இந்நாட்டின் பாவனையாளர்கள் அனுபவிக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல்வேண்டும். அவ்விதம் செய்யத் தவறுவது அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

# நூற்றாண்டுகள் வாழ்ந்து ஆன்மீகத்தோடு சமூகப்பணி புரிந்த அமரர் இ.தம்பித்துரை



*"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு அறிவூட்டல் புண்ணியக் கோடி"*

எனும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வரிகளுக்கு அமைய கொக்குவில் கிழக்கு இராமகிருஷ்ண வித்தியாசாலையை உருவாக்கி ஆன்மீக வாழ்வூடு சமூகப் பணி புரிந்து நூற்றாண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்து இறைபதம் எய்தினார் அமரர் இ.தம்பித்துரை அவர்கள்.

1902இல் பிறந்த அமரர் தம்பித்துரை, பன்னிரண்டு வயதில் சுவாமி விவேகனந்தரை தரிசித்து பதின்மூன்று வயதளவில் கொக்குவில் ஸ்பென்சர் பொன்னையாவினால் ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்தப்பட்டார்.

கல்வி வாழ்க்கையைத் தொடர்ந்து இருபத்தியொரு வயதில் தபால் திணைக்களத்தில் இணைந்து கொழும்பில் வாழ்ந்தார். அக்காலத்தில் இராமகிருஷ்ண மிஷன் தொடர்பால் மேலும் ஆனமீக வாழ்வில் ஈடுபடலானார். சுவாமி அசங்கானந்தரின் உதவியாளர் சுவாமி கேதீஸ்வரானந்தரிடம் யோகாசனங்களைக் கற்று தனது நூறாவது வயதிலும் பயிற்சிகளை மேற்கொண்டார்.

அந்நியராட்சியினால் சிதைந்து போன எமது கல்விப் பண்பாட்டைப் பேண கல்விச்சாலைகள் அமைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன். இராமநாதன், சுவாமி விபுலானந்தர், இந்துபோட் இராஜரட்ணம் வழியில் தாமும் தமது ஊரான கொக்குவில் கிழக்கில் இராமகிருஷ்ணர் பெயரில் ஒரு வித்தியாலயம் அமைத்து சுவாமி விபுலானந்தரைக் கொண்டே திறப்பு விழாவும் செய்தார். தொடர்ந்து அப் பாடசாலை வளர்ச்சியில் தனது பங்கை இறுதிக்காலம் வரைக்கும் மேற்கொண்டிருந்தார்.

**நீத்தார் நயப்புரை**

1944இல் தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்று ஆன்மீக வாழ்வை (துறவறத்தைப்பேண) மேற்கொள்ள தமிழ்நாடு சென்றார். அங்கு திருவண்ணாமலையில் ரமணமகரிஷிகளைக் கண்டு அவர் நிழலில் தன் பணி தொடர்ந்தார். ரமணர் ஆச்சிரம வாழ்க்கையின்போது சிதம்பரம் சென்று அங்குள்ள மூங்கிலடிக் கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினர். ஊரின் துப்புரவுப் பணிகளில் மாணவருடன் தாமும் ஈடுபட்டு காந்திய வாழ்வை மேற்கொண்டார்.

1954 இல் ரமணமகரிஷியின் சமாதி நிலையைத் தொடர்ந்து ஈழம் திரும்பி யாழ்ப்பாணம் யோகர்சுவாமிகளுடன் தன் ஆன்மீக பயணத்தைத் தொடர்ந்தார். சமூக, கல்விப் பணிகளுடன், உற்றார், உறவுகளின் வாழ்வு வளர்ச்சியிலும் பங்குகொண்டு, பரோபகாரியாகவும், பிரமச்சாரியாகவும், ஒரு யோகியாகவும் நூற்றாண்டுகள் இறைதியானத்தில் வாழ்ந்து அண்மையில் சிவபதம் அடைந்த அமரர் இ.தம்பித்துரையின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

துறவு வாழ்வை சமூகவாழ்வாக மடைமாற்றி மற்றவர்க்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்ந்த பெரியார் தம்பித்துரையின் வாழ்வை சிறப்புடன் படம்பிடித்துள்ளது அவரது நூற்றாண்டு பிறந்ததின மலர். 'ஆன்மீகத்தில் அகவை நூறு' பல்வேறு சிறப்பம்சங்களுடன் வாழும்போதே வெளியிடப்பட்ட இந்நூல் ஆன்மீக வாழ்வின் தாற்பரியங்களை எம்மவர்க்கு வெளிப்படுத்தும் நூல் என்றால் மிகையாகாது.

**கந்தையா ஸ்ரீகணேசன்**
*யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர், வவுனியா வளாகம்.*

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணின் விளக்காக
03
09
1948



விண்ணின் விருந்தாக
09
09
2002

சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும்
ஆஸ்திரேலியாவில் வசித்தவருமான

## அமரர் சுப்பிரமணியம் முத்துலிங்கம்

(பொறியியலாளர்)
Kankesan Cement Corporation (Srilanka), Raysut Cement Company (Oman),
Consultant, MSCAD (Perth, Western Australia)

சொந்தங்கள் சோதரங்கள் சுற்றங்கள் அனைவருக்கும் உதவி செய்தீர்
சொந்த மண்ணைப் பார்ப்பதற்கு ஆவலுடன் சென்ற உமக்கு!
சொந்த மண்ணே காலனாக மாறிய விந்தைதான் என்னே!
எல்லோரும் உயர்வதற்கு ஏணியாய் நின்றீர் ஏறியபின் உனை வீழ்த்த எவனோ
ஒருவன் என்ன குற்றம்கண்டு கூற்றுவனை ஏவிவிட்டான் நன்றியில்லாப் பாவி!
கறவைப் பசுவின் கடைசிக் காலம் கசாப்புக் கடை என்பது விதி தானோ?

அன்பு நிறை கள்ளமில்லா உள்ளம் எங்கே?
பண்புமிக்க கபடமில்லா சிம்மக் குரலெங்கே?
அன்றலர்ந்த மலர்போன்ற அழகான சிரிப்பெங்கே?
நெடிதுயர் கம்பீரத் தோற்றம் தான் எங்கே? எங்கே?

ஆண்டொன்று அகன்றதுவே அன்பரே உமைக்கண்டு!
எல்லோர்க்கும் விடியும் நாள் எனக்கேன் விடியவில்லை?
இறக்காமல் ஏதோ நான் உயிரோடு இருக்கின்றேன்.
என்றும் விடிவில்லை என் விழி மூடும் நாள் வரையில்!

பேர்த்
மேற்கு ஆஸ்திரேலியா. (22319) (25-21-19)

தனிமரமாகிவிட்ட
மனைவி (செல்வி)
செல்வநாயகி முத்துலிங்கம்

# துயர் பகிர்கின்றோம்

எமது செயற்பாடுகளுக்கு உதவி வருபவரும்
எமது வளர்ச்சியில் அக்கறை உள்ளவருமான
திரு.க.பூபாலசிங்கம் அவர்களின்அன்புத் துணைவியார்

## திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்

அவர்களின் ஆத்மாசாந்திக்கு பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தாரின் துயரத்திலும் பங்கு கொள்கிறோம்.

முகாமையாளர்,
கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை.

63, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (21-19-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய திரு.கந்தையா தங்கராஜா
(ஸ்ரீநாகபூஷணி அம்மன் பல்பொருள் அங்காடி, ஆவரங்கால்)
அவர்களின் தாயாரான

## கந்தையா தங்கச்சிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆவரங்கால்,
புத்தூர். (22324)(21-19-19)

க.இராசதுரை G.S.குடும்பமும்.
ந.ஆனந்தராசா குடும்பமும்.

# மரண அறிவித்தல்

## சபாபதி கனகசபை ஜெகநாதன்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர் சபாபதி கனகசபை ஜெகநாதன் அவர்கள் 05.09.2003 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி கனகசபை - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பவளமலரின் (பவளம்) (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும் சுதர்சன் (லண்டன்), சுகந்தி (ஆஸ்திரேலியா), பாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனா (லண்டன்), நிமலன் (ஆஸ்திரேலியா), ஐங்கரநேசன் ஆகியோரின் மாமனும் விஷ்ணு (லண்டன்), திரிசூலன் (ஆஸ்திரேலியா), ஹரினி (ஆஸ்திரேலியா), அஞ்சலி, பைரவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.09.2003) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

92/6, திருவள்ளுவர் லேன்,
அரசடி றோட்,
கந்தர்மடம். (22321)(21-19-18)

தகவல்:
சுதர்சன்
(மகன்)


YAMAHA Touching Your Heart

அசோசியேட்டட் மோட்டார்வேய்ஸ் லிமிட்டெட்
மோட்டார் வாகன வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும்
இந் நிறுவனத்துக்கு

யாழ்ப்பாணத்தில்

உலகத் தரம் வாய்ந்த மோட்டார் சைக்கிள்களை விற்பனை
செய்ய விற்பனை முகவர் தேவை.

YAMAHA

மேலதிக விபரங்களுக்கு:
AMW
'யமஹா கோர்னர்' 14/9, ஸ்ரீ ஜினாரத்ன மாவத்தை கொழும்பு 02.
தொலைபேசி: 2304231, 2304232, 074-718603. தொலைநகல்: 2304266

தொடர்பு கொள்ளவும்: கஜபா 0712285141

DHL
EXPRESS
உலகளாவிய ரீதியாக
220 நாடுகளில் துரித விநியோக சேவை.
மேலதிக விவரங்களுக்கு:
M/S Cosmos Marketing Services
200, K.K.S. Road, Jaffna.
Tel: 222 - 5461
(சி30058)(32)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தலுக்கான ஏலம் பிற்போடப்பட்டுள்ளது

எமது கோயிலில் நாளை (08.09.2003) திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஐஸ்கிறீம், இனிப்புக்கடை ஆகியன அமைத்தல் தொடர்பான ஏலம் பிற்போடப்பட்டு எதிர்வரும் (13.09.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறுவதாகவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

தலைவர்,
அறங்காவலர்சபை.
(சி-30054)

## மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித் திங்கள் 21ஆம் நாள் இன்று (07-09-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.04 மணிமுதல் 10.34 மணிவரையுள்ள சுபவேளையில்

GMK தொலைத்தொடர்பு நிலையம்

என்ற எமது சேவையை ஆரம்பித்து நடத்தவுள்ளோம் என்பதை நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.
எம்மிடம் சகலவித தொலைபேசி அழைப்புக்களையும் நல்ல தரமான கணனி வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

தங்கள் நல்வரவை நாடும்:
GMK COMMUNICATION ஸ்தாபனத்தினர்.
302. TEMPLE ROAD,. NALLUR.
021 222 3760
(22338) (13-16-29)

## திருமண வாழ்த்து

இன்று(07.09.2003) சுவிஸ் நாட்டில் திருமண பந்தத்தில் இணையும்

| | |
|---|---|
| திரு.திருமதி இராமசாமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் | திரு.திருமதி நவரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| சுபாஸ்சந்திரன் (சுபாஸ்) | சர்மிலா (சர்மி) |

ஆகிய இருவரையும் சகல சௌபாக்கியங்களும் பெற்று இல்லற வாழ்வில் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

பேரன்மார்,
வைத்திலிங்கம் குடும்பம்,
சண்முகம் குடும்பம்.

கீரிமலை வீதி,
சித்தங்கேணி. (சி-30061)

## ரஷ்யாவில் Medicine, Engineering

படிப்பதற்கான அரிய சந்தர்ப்பம்!

- Sri lanka Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட MBBS மற்றும் MD பட்டங்களைப் பெறுவதற்கான கல்வியை ரஷ்யாவில் முற்று முழுதாக ஆங்கிலமொழி மூலம் கற்கும் வசதி.
- Medicine படிப்பதற்கு ஆகக்குறைந்த அனுமதித் தகைமை A/L இல் 3 பாடங்களில் சித்தி.
- ஒரு மாதத்தில் விஸா எடுத்து ரஷ்யாவிற்குப் போகலாம்.
- இலவச விடுதி மற்றும் சுகாதார வசதிகள் (மாணவிகளுக்கு தனிப்பட்ட ஒழுங்குகள்).
- ரஷ்யாவில் தற்போது படித்துக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மாணவ. மாணவிகளுடன் பயண ஒழுங்குகள். (விசேட சலுகை வசதிகளுடன்)

மேலதிக விவரங்களுக்கு:
Ministry of health of the Russian Fedaration
TVER STATE MEDICAL ACADEMY, OVERSEAS STUDENT PROGRAM NO6, 59th Land (Off Fussells lane), Wellawette, Colombo-06.
Phone-2365736
Fax -2586591
Mobile-0722993558
யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு: 070213269
0777047040
யாழ்ப்பாண மாணவ. மாணவியருக்கு:
கருத்தரங்கு. நேர்முகப் பரீட்சை. SPOT ADMISSION என்பன யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
(C/30040)(29-16-17)

## ரூபவாஹினியில் புற்றுநோய் பற்றிய நிகழ்ச்சி

ரூபவாஹினியில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் உலக தரிசனம் நிகழ்ச்சியில் பிரபல புற்று நோயியல் நிபுணர் திருமதி வாணிப் பிள்ளையுடன் 'மார்பு புற்றுநோய்' தொடர்பான நேர்காணல் நடைபெறும்.

(ம-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,செப்.7

தெல்லிப்பழை கல்விக்கோட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ள வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் குட்டியபுலம் மகாவித்தியாலயம்.

★ மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.

**18 வயதுப் பிரிவு**

★ மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம் (அளவெட்டி அருணோதயா மைதானம்)

**16 வயதுப் பிரிவு**

★ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் வசாவிளான் மகாவித்தியாலயம்

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் கட்டுவன் மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் வசாவிளான் மகாவித்தியாலயம்

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்

(தெல்லிப்பழை மகாஜனா மைதானம்) (ம-86)

★ ★ ★

சென்ற லைற்ஸ் விளையாட்டுக் கழகம் டொனால்ட், கணேசகுமார் வெற்றிக் கேடயத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ் பல்கலைக் கழக அணியும் மானிப்பாய் பரிஸ் வி.கவும் மோதுகின்றன. (ம-3)

## தேவை

★ மில் வேலையில் அனுபவம் உள்ளவர் - 4000/=
★ பழக விரும்புபவர்
தொடர்பு:
பிருந்தா மில்ஸ்,
No 18, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 5745
(22340)

SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி
★ Gr.3 முதல் O/L வரை
★ O/L PAPER CLASS
(22314) (32-17-16-29)

லஷ்சுமி சினிமா
இணுவில்
ஸ்ரீகாந், த்ரிஷா, வையாபுரி மற்றும் பலர் நடிப்பில்
மனசெல்லாம்
(ரீல்ஸ்)
புதிய நேரம்: 11.00, 3.00, 7.00

நிறைஞ்சனாலயம்
சங்கானை
அர்ஜுன், மனிஷா நடித்த
முதல்வன்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ஜாக்சன் நடித்த
LONG KISS GOODNIGHT
(31-13-18)

நாகம்ஸ் சுன்னாகம்
மனோஜ், நக்கீரா, வடிவேலு, சுபாஸ் நடித்த
சுந்திலம்
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
8ஆம் திகதி முதல் மம்முட்டி, அபிராமி நடித்த
கார்மேகம்
(31-13-18) (C29908)

ராஜா யாழ்ப்பாணம்
மாதவன், சிம்ரன் நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C29904) (31-16-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபர்
**திருமதி தயாநிதி ஞானப்பிரகாசம்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சிவப்பிரகாசம் இராஜசூரியர்**
(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்து ம.வி.
ஆசிரியர் கழகம். (22330) (32-16-17-29) யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



வவுனியா வளாக முகாமைத்துவபீட முதலாம் வருட மாணவி **நவீனா** அவர்களின் அன்புத் தாயாராகிய
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட முகாமைத்துவபீட மாணவர்கள்.
வவுனியா வளாகம் (22334)(16-17-29)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும்.
துடுப்பாட்ட விளையாட்டின் அன்றையநாள் முத்திரை பதித்த வீருமாகிய
**திரு. கந்தையா பூபாலசிங்கம்**
அவர்களின் இல்லக்கிழத்தி
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.
அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி 30044) (32-17-13-29) **பாரதி பதிப்பகம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் ஆயுட்கால அங்கத்தவரும்
நிர்வாக சபை உறுப்பினருமாகிய
**திரு. க.பூபாலசிங்கம்**
அவர்களின் பாசமிகு துணைவியார்
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (c/30056) (32-13-17-29) -**சைவ பரிபாலன சபையினர்**

# மரண அறிவித்தல்கள்

## சிவகுருநாதன் வடிவேற்கரசு

**(புறமோட்டஸ் இஞ்ஜினீயரிங் பிறைவேட் லிமிட்டட், பாதுகாப்பு உத்தியோகத்தர்)**

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் வடிவேற்கரசு நேற்று (06.09.2003) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் பரமேஸ்வரி (ஜேர்மனி) தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-தங்கலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கைலாசநாயகியின் அன்புக் கணவரும் நிரஞ்சன் (நியூசிற்றி பெயின்ட்ஸ், யாழ்), ஜெயந்தன் (திவ்ஜா பல்பொருள் வாணிபம், கந்தர்மடம்), முகுந்தன், ஸ்ரீகௌரி ஆகியாரின் அன்புத் தந்தையும் செல்வநாயகம் (கனடா), சுகுணாதேவி (ஜேர்மனி), சுதாகரன் (ஹொலண்ட்), கருணாகரன் (ஜேர்மனி), யசோதரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலச்சந்திரன் (கொழும்பு), யோகநாயகி (யாழ்ப்பாணம்), ஞானச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் சோதினி, அமிர்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக்ஷி, சுஷ்மிதாயினி, திவ்யனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

241/6,
புகையிரத வீதி,
யாழ்ப்பாணம் (22337) (13-17-29)

தகவல்:
மனைவி, மக்கள்.

## செல்லையா சற்குணசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சற்குணசிங்கம் 05.09.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் ஆறுமுகம் செல்லையா - அன்னரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பரராசசேகரம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவஞானவதியின் (கனடா) அன்புக் கணவரும் ஞானகுணசீலன் (செல்வன் - கனடா), ஞானகுணாளன் (குணாளன்), சற்குணவதி (செல்வி), ஞானமனோகரன் (மனோ - கனடா), சிவகுணாளன் (ரஞ்சன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இன்பராஜசிங்கம், செல்வேந்திரன் (U.K.), செல்வேந்திரராணி (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெகதீஸ்வரன் (ஒப்பந்தகாரர்), திரேசா, வத்சலா, விஜயலட்சுமி, வாணிஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமாவும் மைதிலன், ரதீபன், கௌதமி, நிருஜன், ஹரிதாஸ், சங்கரி, ஜெயசீலன், சஜீபன், பைரவி, வைஷ்ணவி, சங்கவி, சிவசன், வகீசன் ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2003) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி-30062)

தகவல்:
ச.ஞானகுணாளன் (மகன்),
து.ஜெகதீஸ்வரன் (மருமகன்).

# இந்திய மீனவர் தடுத்து வைக்கப்பட்டதற்கு இராமேஸ்வரத்தில் நேற்றுப் போராட்டம்

சென்னை,செப்.7

தங்களது மீனவர்களும் மீன்பிடிப் படகுகளும் இலங்கையில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் நேற்று இராமேஸ்வரத்தில் தொழிலுக்குச் செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழக முதல்வர் அண்மையில் மத்திய அரசுக்குச் சமர்ப்பித்திருந்த கச்சதீவை மீளப்பெற வேண்டும் அல்லது அதனைக் குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

தமது போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் போஸ் கூறியதாவது:-

எமது மீனவர்களை அடிக்கடி இலங்கைக் கடற்படை பிடித்துப்போகிறது. எமது மீனவர்கள் அங்கே துன்புறுத்தப்படுகின்றனர். இவற்றின் காரணமாக கடலில் சென்று மீன் பிடிப்பதற்கே பயமாக உள்ளது.

கடலுக்குப் போனால் தம்மைப் பிடித்துவிடுவார்களோ என்ற பயத்தில் தொழிலாளர்கள் இப்போது இப பகுதியில் தொழில் செய்ய விரும்புகிறார்களில்லை. வேறு பகுதிகளை நாடிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

இலங்கையில் தற்போது 36 படகுகளும் அந்தப் படகுக்குரிய தொழிலாளர்கள் 36 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு தொடர்ந்து நடைபெற்று வருவதனால் தமிழகத்தில் உள்ள மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல மறுக்கின்றனர்.

இலங்கை மீனவர்கள் எம்மிடம் தொடர்புகொள்ளும்போது தமிழக மீனவர்கள் தமது பகுதிக்குள் மீன்களைப் பிடிப்பதாகவும் வலைகளை அறுக்கிறார்கள் என்றும் இதனால், தமது தொழில் பாதிப்படைகிறது என்றும் சொல்கிறார்கள். அது நியாயமானது. ஏனெனில் இந்திய கடலோரப் பகுதியில் நாமே மூன்று மைல்களுக்குள்தான் தொழில்புரிய வேண்டும் என விதிமுறை இருக்கின்றது. எமது மீனவர்கள் அதைத் தாண்டி மீன் பிடித்தனர். இதனால் சிக்கல்கள் ஏற்பட்டன.

இதற்கு முன்னர் இலங்கை மீனவர்கள் இந்த இடங்களுக்கு மீன் பிடிகக வராமையால்தான் எமது மீனவர்கள் அங்கு செல்கின்றனர். தற்போது அவர்கள் தொழிலுக்கு வருகின்றனர். நாம் அதை விட்டுச் கொடுத்து மூன்று மைலுக்கு அப்பால் அவர்களுக்கு தொந்தரவு இல்லாமல் தொழில் செய்கிறோம். இதேபோல் அவர்களும் கச்சதீவு விடயத்தில் விட்டுக்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார். (ம-6)

## சுதந்திரக் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவும் என சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர். ஆனால், அதை ஜே.வி.பியினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் பேச்சை முடித்துக் கொள்வதாக இரு தரப்பினரும் கருத்து வெளியிட்டனர். எனத் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததாகத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் இரு கட்சிகளுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்கள் எந்தவித முடிவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தன.

வடக்கு - கிழக்கின் நிர்வாகம் மற்றும் நடவடிக்கைகள் குறித்த முரண்பாடே இந்தப் பேச்சுக்கள் முறிவடையக் காரணம்.

ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் கட்டி எழுப்புவதே எமது நோக்கம். அதுவே சமாதானத்துக்கான வழி.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வே சரியானது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவிக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் விடுதலைப் புலிகளால் முன்பொரு தடவை நிராகரிக்கப்பட்டன. இந்நிலையில், இனியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரப்பரவலாக்கல் குறித்துப் பேசிப் பயனில்லை.

விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றினை முன்வைக்கவேண்டுமானால் தற்போது அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனையிலும் பார்க்க சிறந்த தீர்வு யோசனையை முன்வைக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளிடம் அதிகாரத்தினைத் தரைவாக்கும் திட்டம் எதற்கும் நாம் ஒத்துழைக்கமாட்டோம். ஆனால், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகள் அந்த வகையிலேயே செல்கின்றன. இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான எமது கூட்டணி முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

(ம-3-6-12)

## புத்தூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது.

கல்வியங்காட்டில் வசித்து வரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்லையா யோகேஸ்வரன் (வயது-52) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கிய அதிபர் லொறியினால், சிறிது தூரம் இழுபட்டுக் சென்றுள்ளார். அவரது 'சேர்ட்' கிழிந்திருந்தது. தலை மற்றும் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அதிகளவு இரத்தம் வெளியேறியமை காரணமாக அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் மரணமடைந்தார்.

அவரை மோதிய லொறி அந்த இடத்தில் நிற்காமல் சென்றுள்ளது.

விபத்து நடந்த பகுதியில் இருநத மக்கள் காயமடைந்த அதிபரை ஓட்டோவில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

பின்னர், ஓட்டோச் சாரதிகளின் உதவியுடன் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்படும் போது அவர்கள் இருவரும் கல்வியங்காடு பகுதியில் உள்ள மதுபானசாலை ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்துள்ளனர்.

கோப்பாய் பொலீஸார் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-12-180)

# ஏழு வயதுச் சிறுமி மீது பாலியல் இம்சைக்கு முயற்சி

யாழ்ப்பாணம்,செப்.7

ஏழு வயதுச் சிறுமி ஒருத்தியை பாலியல் இம்சைக்கு உள்ளாக்க முற்பட்ட நபர் ஒருவர் அவ்வழியே வந்த இளைஞனின் குறுக்கீட்டினை அடுத்து தப்பி ஓடித் தலைமறைவானார். சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

இச்சம்பவம் நாவற்குழி பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை முடிந்து நண்பகல் வேளை தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமியை பலவந்தமாக பற்றை மறைவுக்குள் இழுத்துச் சென்ற நபர் அங்கு வைத்து சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்க முயன்றுள்ளார். அவ்வேளை சிறுமி கூக்குரலிட்டுள்ளார்.

அவ்வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் சிறுமியின் அவலக் குரலைக்கேட்டு அவ்விடத்துக்கு விரைந்தார்.

சிறுமியை இம்சைப்படுத்திக் கொண்டிருந்த அந்த நபர் இளைஞனைக் கண்டதும் தப்பி ஓடித் தலைமறைவானார். சிறிது தூரம் இளைஞன் அவரைத் துரத்திச் சென்ற போதும் அவரைப் பிடிக்க முடியவில்லை.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுமியை அழைத்துச்சென்ற பெற்றோர், பாடசாலை அதிபர் மற்றும் கிராம அலுவலரின் உதவியுடன் சம்பவம் பற்றிப் பொலீஸில் முறையிட்டனர். (ம-9-15)

## ஜீ.சி.ஈ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும்பணி டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் 40 நாள்களில் வெளியிடப்படும் எனவும் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யு. சி.எம்.எக்ஙேஸ்வஸ் தெரிவித்தார் (ம-12-6)

## பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள்.

அவர்களிடம் இருந்து 4 மாணிக்கக்கற்களும் 50 ஆயிரம் ரூபா பணமும் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களுடன் காரில் வந்த இருவர் தப்பியோடியதாகவும் அவர்களில் ஒருவர் பின் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகள் தாம் வந்த பிக்கப்பை ஓரிடத்தில் கைவிட்டுச் சென்றனர் என்றும் -

பின்னர் அந்தப் பிக்கப் மீட்கப்பட்டுள்ளது என்றும் - பொலீஸார் தெரிவித்தனர். (ம-3)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்திப்பில் கிழககு மாகாண நிலைவரங்கள் குறித்து ஆராயப்படவிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

## கட்டுப்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

அம்பாறையில் இருந்து பண்டாரவளை நோக்கி சென்றுகொண்டிருநத பஸ்ஸே இந்த விபத்தில் சிக்கியது.

பஸ் பள்ளத்தில் விழ ஆரம்பித்ததும் அதிலிருந்து குதித்த சிலர் தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டனர்.

பள்ளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருந்த பஸ், அங்கிருந்த மரத்தில் சிக்குண்டு தொங்கியபடி உள்ளது. இதனால் சுமார் ஆயிரம் மீற்றர் பள்ளத்தில் பஸ் வீழ்ந்திருக்கக் கூடிய துர்ப்பாக்கியம் தடுக்கப்பட்டுள்ளது என்று பொலீஸார் கூறுகின்றனர்.

மரத்தில் சிக்குண்டு தொங்கிய பஸ்ஸில் இருந்து பயணிகள் மேலே வர பல மணித்தியாலங்கள் எடுத்துள்ளன. இந்த இடத்தில் இதற்கு முன்னரும் இவ்வாறான விபத்துக்கள் பல நடந்துள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று மாலை வரையும் பொலீஸாரும் விமானப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். (ம)


**அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்!!**

வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக உத்தியோகத்தர் பதவிகளுக்கான, ஆள் சேர்ப்பு செய்வதற்கான, திறந்த போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு.

ஆரம்பம் - 8/9/2003 திங்கள்
மாலை 6.30 மணி
ஆசிரியர்கள் :- குமாரவேல் & தவசேகர்
※ அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
SUBRA (சித்தன்கேணி) (சி-29934)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

எமது பிரதான நிறுவனத்திலும் சாவகச்சேரியிலுள்ள கிளை நிறுவனத்திலும் பின்வரும் கற்கைநெறிகள் 12-09-2003லிருந்து ஆரம்பமாகவுள்ளன. எனவே மாணவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Dip. in MS Office
Dip. in Hardware Technology
Dip.in Desktop Publishing
Internet & e-mail

மேலதிக விசாரணைகளிற்கு
Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna. T.P: 2222674

**SUBRA**

தரம் 5 புலமைப்பரிசில்
முற்றிலும் இலவச
PAPER CLASS
சனி, ஞாயிறு மாலை 6-8
புலமைப்பரிசில்: திரு. கைலைநாதன்
சிங்களம்: திரு. லீலாகிருஷ்ணன்
ஆங்கிலம்: திரு. சூரி (C-29936)

**CHEMISTRY**

DIAS B.Sc. (Hons)
★ அலகு ரீதியான முழுமையான மீட்டல் வினாவிடை
74, Palaly Rd. Thirunelvely.
104/4, Cross Rd. Athiyady.
(22054) (29-11-17)

**NEW SCIENCE CENTRE**

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
DAY CLASS
BIOLOGY
09.09.03 செவ்வாய் 9.30-12.30
1.30-4.00
A/L 2004 4.00-6.00 p.m.
(22265) (11-17)
BY:- நாகநாதன்

**விக்னா கல்வி நிறுவனம்**

A/L DAY CLASS
கலை, வர்த்தக வகுப்புகள்
பிரிவு 2
ஆரம்பம்-08.09.03. 7மணி
ECO-திரு. விக்கி - 7.00
TAM-திரு. குழந்தை - 8.00
GEO- திரு.பாபு - 9.00
H/C- திரு.பத்மராஜா - 7.00
HIN- திரு.தரன் - 11.00
DRAMA- திரு.மதி - 10.00
HIST- திரு.சுதன் - 11.00
PLSCIE-திரு.றொபின்சன்-12.00
LOG- திரு.சயந்தன் - சனி,ஞாயிறு 8.00
(22271)

**விக்னா கல்வி நிறுவனம்**

இறுதிப்பிரிவு
O/L DAY CLASS
(8.30 - 2.00)
துரிதமீட்டல் வகுப்பு
ஆரம்பம்-12.09.03
O/L. EVENING CLASS
கணிதம் திரு. C.K.B.தயாளன்
விஞ்ஞானம் திரு. N.தேவா
ஆரம்பம்: 08-09-03 4 மணி
★ வெளிமாவட்ட மாணவர்களும் மீட்டல் வகுப்பிற்கு அனுமதிக்கப் படுவர்.
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(22270)(11-14)

**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(21933)(11-18)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.